ஜுபிடர்-
லாவண்யா



# மனிதன்

டைரக்ஷன்: K. ராம்நாத்... ஸ்டுடியோ: நெப்ட்யூன்

2615

M211,N42,P
N53.11.6

"வேலைக்காரி" ("ஜீவா") பண்ணையார் மகனுக்கும் பணிப் பெண்ணுக்கும் நிகழ்ந்த காதல் சித்திரம். ரூ. 1-8-0

"வேடதாரி" சமூகத்திலே பெரிய மனிதர் என்ற வேடந் தாங்கிச் செய்யும் அக்கிரமங்களை, ஒரு ஏழைப் பெண்ணைக் கற்பழிக்க முயற்சிக்கும் ஒருவன் மூலம் விவரிக்கின்றார். ரூ. 1-4-0

"நடன சுந்தரி" இதில் ஒவ்வொரு கதையும் இன்பம் பயக்க வல்லது.

ரூ. 1-0-0

மன்னனின் காதல் (எஸ். எஸ். மாரிசாமி) பாட்டியாலா மன்னனின் காமக் களியாட்டத்தை லீலா விநோதங்களைச் சித்தரிக்கும் உண்மை வரலாறு. சமஸ்தானத்தின் இச்சதி வழக்கில் ஸர் சப்ரூ, ஸர் சி. பி. ராமசாமி ஐயர் முதலிய பிரபல லாயர்கள் வாதாடிய உண்மை வழக்கு. நான்கு வர்ண அட்டை முகப்புப் படம்.

விலை ரூ. 2-8-0

"எலினா" (ரஷ்ய நவீனம்) மேலை நாட்டுப் பிரபல எழுத்தாளர்களால் ஐரோப்பாவின் உன்னத நாவலாசிரியர் என்று பாராட்டப்பெற்ற ரஷ்ய நூலாசிரியர் ஐவான் துர்க்கனேவ் எழுதியுள்ள 'ஆன் தி ஈவ்' தமிழாக்கம் இது. தேச சேவையே ஏனைய இலட்சியங்களைக் காட்டிலும் உயர்ந்தது; முக்கியமானது என்று கருதி, அதே பணியில் தனது ஆருயிர் நீத்த தீரனையும், அவனையே தனது இலட்சிய புருஷனாகக் கொண்டு தியாகாக்கினியில் குதித்த நங்கை எலினாவையும் பற்றிய அற்புதமான நவீனம். (112 பக்கங்கள்)

விலை ரூ. 1-0-0

## முத்தமிழ் நிலையம்

சென்னை - 1

# பேசும் படம் மலர் 1953

சித்திரை மாத மத்தியில்
வெளிவருகிறது

89673

விலை ரூ. 5

தபாலில் ரூ. 5/8

- ★ கண்ணைப்பறிக்கும் வர்ணப் படங்கள்
- ★ நக்ஷத்திரங்களே எழுதியிருக்கும் அரிய கட்டுரைகள்
- ★ 1952 வருஷத்திய பட விமர்சனங்கள்
- ★ 'பேசும் படம்' கௌரவ ஜாபிதா
- ★ 1952 வருஷத்திய தினக் குறிப்பு
- ★ தொழில் நிபுணர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகள்
- ★ ஏராளமான முழுப்பக்க இருவர்ணப் படங்கள்

இன்னும் பல அம்சங்கள்

## ராமநாத் பப்ளிகேஷன்ஸ்

சென்னை - 14.




புரொட்யூஸர்-டைரக்டர்: உங்க ரெண்டுபேருக்கும் நடிக்க சந்தர்ப்பம் தர்றதுக்கு எனக்கு ஆக்ஷேபணையில்லே, ஆனால் அந்தப்படம் ஓடல்லைன்னு உங்க பணத்தைக் கேட்கறதில்லைன்னு எழுதித் தர்றீங்களா?


ஏப்ரல் 3உ முதல்
சென்னை
பாரகன்-அசோக்-மஹாராணியில்
அருணாவின்
குமாஸ்தா
டைரக்ஷன்· R.M. கிருஷ்ணசாமி
தென்னாடெங்கும் வெற்றிகரமான
3-வது வாரம்
அருணா பிலிம்ஸ், மதராஸ்-17.

# 'பேசும் படம்' பேசுகிறது

## பிரிவினையும் பிலிம் தொழிலும்

நாளது அக்டோபர் மாதம் முதல் தேதியன்று ஆந்திர மாகாணம் ஏற்படப் போகிற தென்று இந்திய சர்க்கார் அறிவித்துவிட்டனர்.

இதனுல் பொது வர்த்தகம் பாதிக்கப்படுமா என்று பெரிய பொருளாதார, வர்த்தக நிபுணர்கள் ஆலோசித்து வருகின்றனர். வர்த்தகம் பாதிக்கப் படுமானுல், தென்னிந்தியாவின் முக்கியமான கைத் தொழில்களில் ஒன்ருகிவிட்ட சினிமாத் தொழிலின் நிலை என்ன என்பதே நமது பிரச்னை.

சினிமாத் தொழில் பற்றிய வரை, ஜாதி, மதம், மொழி, இனம் முதலிய எவ்விதப் பேதமுமின்றி இது வரையில் இத்தொழில் நடந்து வந்திருக்கிறது. ஆனுல் இன்றைய நிலை ஒரளவு சிந்தனைக்குறிய தாக இருக்கிறது! ஏனெனில் ஆந்திர மாகாண வெறியர் களின் செயல்கள் ஆந்திரர்–தமிழர்களிடையே ஒரளவு மனக்கசப்பை உண்டாக்கியிருக்கிறதென்பது உண்மை.

இதனுலும், சென்னை தங்களுக்கில்லை என்றதனுலும் ஆந்திரர் பலர் ஆத்திரம் கொண்டுள்ளனர். அவர்கள் இனிமேலும் சென்னையில் தங்கலாமா என்று ஒரு கேள்வியைத் தாங்களே கேட்டுக் கொண்டு திண்டாடுகின்றனர். சென்னையில் வசிப்பதை அவமானமாகவும் கருதுகின்றனர். பரந்த நோக்கமும் விரிந்த மனப்பான்மையும் உடையவர்களுக்கு இக்கேள்வியில் யாதொரு பொருளும் இருப்பதாகத் தெரியாது.

தென்னிந்திய சினிமாத் தொழிலில் ஆந்திரர் பலர் ஈடுபட்டுள்ளனர். படத் தயாரிப்பு, டைரக்ஷன், நடிப்பு ஆகிய பல துறைகளிலும் அவர்கள் நிறைந்துள்ளனர். குறிப்பாக சினிமாத் துறையில் ஈடுபட்டுள்ள ஆந்திரர்களுக்கு நாம் ஒரு யோசனை கூற விரும்புகிருேம். எது எப்படியிருப்பினும், அவர்கள் மட்டும் எப்போதும் போலவே தமிழ் நாட்டில் பூரண சுதந்திரத்துடனும் சகோதர பாவத்துடனும் வாழலாம் என்பதை அவர்கள் உணர வேண்டுகிருேம்.

இத்யாதி காரணங்களினுல் ஆந்திர மாகாணப் பிரிவினையினுல் தென்னிந்திய சினிமாத் தொழில் பெருமளவிற்குப் பாதிக்கப்படாது என்ற முழு நம்பிக்கையும் எமக்குண்டு.



குமாரி கமலா வந்து நடன மாடுவதற்கு காத்திருக்கி றது காட்சி ஜோடனை......

# ஸ்டுடியோ விஜயம்

நமது விசேஷ காமிரா நிபுணர் ஸ்டுடியோக்களைச் சுற்றி வருகிருர்


ஒரு நோயாளி டாக்டரிடம் போனுன். ''வைத்தியரே! எனக்கு உடம்பு சுகப்படவில்லை; வயிறு பசிக்கவும் இல்லை. எனக்குச் சரியான மருந்து கொடுத்து உதவ வேண்டும்'' என்ருன்.

''பசியே கிடையாதா? ரொம்ப நல்லதாகப் போயிற்று. உணவுப் பண்டங்கள் கிடைக்காமல் இருக்கும் காலத்தில் இப்படி இருப்பது ரொம்ப நல்லதாயிற்றே!'' என்று கிண்டலாகச் சொல்லி விட்டு வைத்தியர் அவனைப் பரீட்சித்தார்.

''ஐயோ! ரொம்ப அபாயம்! உமது உடல் நிலை இருக்கும் இருப்புக்கு நீர் முதலில் என்ன செய்ய வேண்டும் தெரியுமா?'' என்ருர் வைத்தியர்.

நோயாளி பதறிப் போய்விட்டான். பரபரப்புடன், ''நான் என்ன செய்ய வேண்டும்? முதலில் சொல்லுங்கள்!'' என்ருன்.

முதல் காரியமாக நீர் இன்னும் இரண்டு மாத



'ஸெட்'டை சரிபார்க்கிருர்கள் ஆர்ட் டைரக்டரும், நடன 'ஆசா'னும்.

காலத்திற்கு வேலை யொன்றுமே செய்யக்கூடாது. முதலில் காரியாலயத்திற்கு இரண்டு மாதம் 'லீவு' எழுதிப் போட்டு விட்டு வாரும். பின்னர் மீதி விஷயத்தைக் கவனிப்போம்'' என்றார் வைத்தியர்.

வந்தவர் வாய் திறக்கவே இல்லை.

வைத்தியர் அவன் கைகளை உலுப்பினார். ''என்னய்யா. நான் சொன்னது உம் காதில் விழவில்லையா?'' என்று கேட்டார்.

''விழுந்தது, விழுந்தது!! ஆனால் விடுமுறைக்குத்தான் என்ன செய்வது என்று யோசிக்கிறேன்''என்றான் வந்தவன்.

''ஏன் கிடைக்காதா?''— வைத்தியர் கேட்டார்.

''இல்லை, நான் காரியாலயத்தில் போய் வேலை செய்தாலல்லவோ எனக்கு விடுமுறை கிடைக்கும்? நான்தான் ஒரு கம்பெனியின் முதலாளியாயிற்றே! வீட்டை விட்டு நகருவதில்லையே. ஆகவே இன்னும் எப்படி ஓய்வு எடுக்க முடியும்?'' என்று யோசிக்கிறேன் என்றார் அவர்.

அஜீரணத்தினால் வந்த வினை என்று வைத்தியர் பிறகு தீர்மானித்து விட்டார்.

'ஸ்டூடியோ விஜயம்' பகுதியில் படப்பிடிப்புகளைப் பற்றிச் சொல்லாமல் கதை சொல்லிக் கொண்டிருக்கிறீரே என்ன விஷயம்?' என்று நீங்கள் கேட்கலாம்.

வேலை செய்தால்தான் ஓய்வும் தேவை என்று நமது

...ஆனால் கமலா மேக்-அப் போட்டுக்கொண்டிருக்கிறார்.





அழகியில் 'கோணம்' அமைக்க ஆலோசிக்கிறார் டைரக்டர் நட்கார்ணி

அடுக்கடுக்காக வினாக்களை விசையுடன் என்மீது வீசி எறிவது தெரிகிறது. கதையில் வரும் வைத்தியர்போல் என்னையும் நினைத்து விடுவீர்கள்.

ஆனால்வைத்தியர் நோயாளி ஒரு முதலாளி என்று தெரியாமல் பேசினார். நான் தெரிந்துதான் உங்களை இடைவேளைக்குக் கூப்பிடுகிறேன். ஏனென்றால் நான் இம்முறை ஸ்டூடியோவுக்கு சென்ற போது பெரும்பாலானவைகளில் இடைவேளை தான் விடப்பட்டிருந்தது. இந்த 'இடைவேளைப் பொழுதை இருந்து கழித்து விட்டால்தானே படப்பிடிப்பைப் பார்க்க முடியும்? ஆகவேதான் இந்த இடைவேளைக்கு உங்களையும் முதலில் அழைக்கிறேன்.

கதை விளக்குகிறது. வேலை இல்லாவிட்டால் ஓய்வுக்கு இடமேயிருக்காது அல்லவா?

இந்த மாதம் முதன் முதலாக உங்களை இடைவேளைக்கு வரும்படி அழைக்கிறேன்.

இடைவேளையா? இதற்கு முன் நாம் என்ன செய்தோம் இளைப்பாற? நாம் தான் எந்த ஸ்டூடியோவுக்கும் விஜயம் செய்யவில்லையே? என்று

வாஹினியில் இந்த இடைவேளைப் பொழுது முடிந்து பெற்ற மனம் செட்டில் முதன்முதலாக நுழைந்தேன்.

அந்தச் சின்னஞ்சிறு பள்ளிக்கூடத்திற்கு அப்பொழுதுதான் இடைவேளை விடப்பட்டிருந்தது.


நாம் இடைவேளை சமயத்தில் ஸ்டூடியோவுக்குச் சென்றதற்கும் அங்குள்ள பள்ளிக்கூடத்திற்கு இடைவேளை விடப்பட்டதற்கும் என்ன பொருத்தம் பாருங்கள்!

அந்தப் பள்ளிக்கூடத்தின் வாயிலில மோகன் நின்று கொண்டிருந்தான். அவனுக்குக் பக்கத்தில் மற்றொரு சிறுவன் நின்று கொண்டிருந்தான். அந்தச் சிறுவன் மோகனுடைய ஆப்த நண்பன் என்பதை, அவன் அவ



இது நடிப்பல்ல

'பெற்றமனத்'தில்
டைரக்டர் பிரஸாத் .....



னிடம் குழைந்து குழைந்து பழகிய விதம் எடுத்துக் காட்டியது.

"மோகன்! உங்கம்மா ஜெயில்லே இருக்காங்களாமே?" என்றான் அந்தச் சிறுவன்.

மோகன் பதிலே பேசவில்லை. அவன் முகம் களையிழந்து சோர்ந்து காணப்பட்டது.

அந்தப் பயங்கரமான அமைதியை அப்படியே விட்டுவிட அந்தச் சிறுவன் விரும்பவில்லை.

"மோகன்! ஜெயில்லே இருக்க கஷ்டமாத்தானே இருக்கும்?" இன்னும் இதுபோன்ற பலவகையான கேள்விகளைப் போட்டு மோகனைக் குழப்பினான் அச்சிறுவன்.

மோகனுக்கு துக்கம் பொத்துக் கொண்டு வந்தது. ஆனால் வாய்திறந்து ஒன்றும் பேசாமல் அவன் நாக்கைச் சிறையில் போட்டு வைத்தது வாய்.

அதற்குமேல் அந்த ஸெட்டில் படப்பிடிப்பை வளர்த்தவிடாமல் 'கட்' டென்று சொல்லி நிறுத்தினார் டைரக்டர் பிரஸாத். 'பெற்ற மனம்' டைரக்டர் மட்டுமல்ல அவர்; தயாரிப்பாளரும்கூட.

அடுத்து இதே ஸெட்டில் பெற்ற மனத்தின் வேறொரு காட்சி படமாக்கப்பட்டது.

அந்தப் பள்ளிக்கூடத்தின் வாயிலில் இப்பொழுது ஒருத்தி நின்றாள். சுமார் இருபத்தைந்து வயது அவளுக்கு இருக்கலாம். கிழிந்த ஆடைகளை அணிந்து, பரட்டைத் தலையும், வாடிய முகமும் தானுமாகக் காட்சியளித்த அந்த மாதைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

பள்ளிச் சிறுவர்கள் அவளைப் பலவாறு நையாண்டி செய்ய ஆரம்பித்தனர்.

"அடேய் பயித்தியக்காரி டோய்!" என்றான் ஒரு சிறுவன். அவனோடு மற்றவர்களும் சேர்ந்து கொண்டார்கள.



...இவர்களைச் சுட்டார்



நடித்துவிட்டு...



அவசரமாக வந்து...

'மேக-அப்' கலைக்கிறார் கணேசன்.
உடனிருப்பவர் நடராஜன



புஷ்பவல்லி மாணவர்கள் அழைக்கும் இந்தப் பயித்தியக்காரியாக வருகிறார். கதையில் அவரது பாத்திரத்தின் தன்மை உணர்ச்சிகள் நிறைந்தது. அவ்வளவும் நம் உள்ளத்தை உலுப்பி நெஞ்சை நெகிழ வைக்கும் போக்குடையவை.

'பெற்ற மனம்' படக்கதை மு. வரதராசனார் எழுதியது. ஒரு தாய்க்கு தன் பிள்ளையிடம் உள்ள பாசமானது எந்த எல்லைக் கோட்டுக்கும் அடங்காத ஒரு உணர்ச்சிப் பிரவாகம். அதை மிஞ்சக்கூடியது இந்த உலகத்தில் எதுவுமே இல்லை என்பதை இந்தக் கதை விளக்குகிறது.

இந்த ஸெட்டுக்கு அடுத்த ஸெட்டில் வாழப் பிறந்தவள் படத்திற்கான காட்சி ஜோடனை ஒன்று ஜோடிக்கப்பட்டிருந்தது. இம்மாதம் வெளிவரப் போகும் படங்களில் ஒன்று வாழப்பிறந்தவள்.

* * *

சில முற்போக்கு வாதிகள் 'பொய்யை சாமர்த்தியமாகத் திரித்துக் கூறுவதுதான் ஜோசியம் என்று கூறுகிறார்கள்.

ஜோசியம் சில சமயங்களில் பலிக்கிறது, பல சமயங்களில் பலிக்காமற் போய் விடுகிறது. ஆனால் ஒரு மனிதனின் எதிர்காலத்தைப் பற்றிக் குறிப்பிட அது ஒரு யூகசக்தியாக உபயோகப்பட்டு வருகிறது என்பதை எவரும் மறுக்கமுடியாது.

படவுலகிலும் இந்த ஜோசியங்கள் பலமுறை பலிக்காமற் போயிருக்கின்றன. படமுதலாளி நாள் நட்சத்திரம் பார்த்து படத்தை ஆரம்பிப்பார். அதேபோல் எல்லா முகூர்த்தங்கள் தோளோடு தோள் சேரும் அருமையான சுபயோக தினத்தில் அதைத் திரையிடுவார். படம் இரண்டாவது காட்சிக்கே கூட்டத்தைத் தேடும்படியான நிலைமையை அடைந்து விடும்.

இந்த நிலைமை படத்தொழிலில் இருந்துவருவதற்கு காரணங்கள் பலவேறு இருக்கலாம். ஆனால் ஜோசியமும் அதற்கு ஒரு காரணமாக சிலரால் சொல்லப்படுகிறது.

நான் ஜோசியத்தைப் பற்றி இவ்வளவு பெரிய முகவுரையை இங்கு கொடுக்க காரணம் இல்லாமலில்லை.

உதாரணமாக ஜெமினியின் ஒளவை யார் திரையீட்டு விஷயத்தைத்தான் எடுத்துக் கொள்ளுங்களேன்.

கடந்த மூன்று ஆண்டுகளாக தீபா வளிக்கு வரும், பொங்கலுக்கு நிச்ச யம் ரிலீஸாகி விடும் எனறெல்லாம் ஜோசியம் கூறப்பட்டது. ஆனுல் அவை வெறும் கனவாகப் போய் விட்டன.

கடைசியாக ''வரப்போகும் தமிழ்ப் புது வருஷப் பிறப்பன்று ஒளவையார் வரப்போகிறது. இந்த முறை இதன் வெளியீடு நிச்சயம்தான்'' என்று செய்திகள் வெளிவந்தன.

ஆனுல் ஒளவைப் பிராட்டியார் எனன செய்தார்?

தனது வருஷப் பிறப்பு விஜயத்தை மீண்டும் ஒருமுறை ஓத்திப் போட்டு விட்டார்!


''நீங்கள் ஜோசியரல்லவே? அத னுல்தான் பொய்யாகி விட்டது'' என் கிருர் நமது குறும்பு பிடித்த நண்பர்.

நான் ஜோசியன் இல்லை என்பது வாஸ்தவம்தான். ஆனுல் ஒளவை யார் வெளியீட்டைப் பற்றி அந்த ஸ்தானத்தில் இருந்து கொண்டு சொல்லவில்லையே!


''அப்படியால் இப்பொழுது சொல் லும். வருஷப் பிறப்புக்கு இல்லை என் ருல் பின்னர் எப்போது ஒளவையார் வெளிவரும்?'' என்று கேட்கிருர் அந்த குறும்பு நேயர்.

ஜூன் அல்லது ஜூலை வாக்கில் படம் வெளிவரலாம் என்று பதில் கொடுக்கிறேன். 'ஆனுல் இந்தத் தடவையும் ஒளவைப்பாட்டி தனது பிரயாணத்தை ஒத்திப்போட்டுவிட்டு, உமது ஜோசியத்தை ஏமாற்றி விட் டால் என்ன செய்வீர்?' என்று அந்த நேயர் முணுமுணுப்பதும் என் காதில் விழாமலில்லை.

நான் ஜோசியனல்ல என்பதை இரண்டாம் முறையாக அவருக்கு அழுத்தந் திருத்தமாகத் தெரிவிப்ப துடன், அதற்காக நான் எந்த வித மான 'காரண்டி'யும் தரமாட்டேன் என்பதையும் இப்போதே முன் ஜாக் கிரதையாகத் தெரிவித்துக்கொள்ளு கிறேன்.




வாழப்பிறந்தவளைச் சேர்ந்தவர்கள்.



செல்லப்பிள்ளை ஷூட்டிங்கின்போது.

பெற்றமனம் சம்பந்தப்பட்டவர்கள்.





ஓய்வு நேரத்திலே 'ப்ரீ'யாக இருந்தபோதிலும் விடவில்லை என காமிரா. சாவித்ரி – புஷ்பவல்லி – சரஸ்வதி (கையில் 'லட்டு')

இந்த ஔவையாருக்காகச் சென்ற மாதம் ஒரு சிறிய காட்சி படமாக்கப் பட்டது.

ஔவையார் அப்பொழுது பருவ வயது அடைந்திருந்தார் இளமையின ஆதிக்கம் அவரது ஒவ்வொரு அங்கத்திலும் பூரணமாக இருந்தது.

பருவ வயதடைந்த பெண்ணை வீட்டில் வைத்திருப்பதைவிட பெற்றோருக்கு வேறு எந்தக் கவலைப் பெரிதாக இருக்க முடியும்?

ஔவையாருக்கு ஏற்ற கணவனைக் பார்த்து. அவன் கையில் அவளைப் பிடித்துக்கொடுத்துவிட வேண்டும் என்பதிலேயே அவர்கள் கண்ணும் கருத்துமாக இருந்தார்கள்.

ஔவையார் இது விஷயமாக தான் வழிபட்டு வந்த விநாயக பெருமானையே தஞ்சம் அடைந்தார்.

"விநாயகப் பெருமானே! என் வாலிபத்தைக் குலைத்து, வயதை வளர்த்தி, முதுபெரும் மூதாட்டியாகச் செய்து விடு" என்று மன தார வேண்டினார்.

விநாயகப் பெருமானும் அவரது கோரிக்கைக்குச் செவி சாய்த்து அவருக்குமுதுமையை அளித்துவிட்டார்.

ஔவையாராக கே. பி. சுந்தராம்பாள் நடித்து வருகிறார். பால ஔவையாராக குசலகுமாரி வருகிறார்.

ஔவையாருக்காக தற்போது ஸ்டுடியோவின் பிரதான காரியாலயத்திற்கு நேராக ஒரு பிரம்மாண்டமான வெளிப்புறக் காட்சி நிர்மாணிக்கப் பட்டிருக்கிறது.

குப்பி கர்நாடகா புரொடக்ஷன்ஸாரின் சத்திய சோதனைக்காக ஏவி. எம். ஸ்டூடியோவில் சென்ற வாரம் ஒரு 'செம்படவ நடனக்காக்ஷி படமாக்கப்பட்டது. டைரக்டர் ஸிம்ஹா இப்படத்தை டைரக்ட் செய்து வருகிறார். இந்த செம்படவ நடனத்தை குமாரி கமலா திறமையுடன் ஆடிககாண்பித்து 'சத்திய சோதனை'யில் அதை ஒரு 'ஹைலைட்'டாக அமைத்து விட்டார். ஒளிப்பதிவு நேர்த்தியாக இருந்தது. நடனத்திற்கான பின்னணி காதிற்கு ரம்யமாக இருந்தது.

'சத்திய சோதனை' ஏப்ரல் 3-ம் தேதி திரையிடப்படவிருக்கிறது.

(64-ம் பக்கம் பார்க்க)


அத்தை மகள்

# மலரைப்பற்றி

'பேசும் படம் மலர் 1953' துரிதமாகத் தயாராகிக் கொண்டிருக்கிறது என்பதை நேயர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சென்ற வருஷத்திய மலரைப் பார்த்த பிறகு. 'பேசும் படம் மலர்'களில் நேயர்களுக்குள்ள ஆர்வம் என்னைத் திகைக்க வைத்து விட்டது. ஆகவேதான் இந்த வருஷம் சென்ற வருஷத்திய மலரை விட மேலான முறையிலும், ஆனால் அதே விலையிலும் 'பேசும் படம்' நேயர்களுக்குத் தமிழ்ப் புது வருஷப் பரிசாக மலரைச் சமர்ப்பிக்க எண்ணியுள்ளேன்.

இவ்வருஷ மலரில் புத்தம் புதிய முழுப்பக்க மூவர்ணப் படங்கள் கண்ணைப் பறிக்கின்றன. அநேகமாக எல்லா நக்ஷத்திரங்களின் படங்களும் மலரை அலங்கரிக்கின்றன.

இம்மலரின் விசேஷ அம்சம் என்னவென்றால் பிரபல நக்ஷத்திரங்கள் பலர் தம் கைப்படக் கட்டுரைகளை எழுதியிருக்கின்றனர். திரையிலே நவரஸ பாவங்களையும் அவர்கள் நடித்துக் காட்டுவதைப் போல, சோகம், சாந்தம், ஹாஸ்யம், வீரம் முதலிய பல ரஸங்களையும் வெளியிட்டிருக்கின்றனர், தங்கள் கட்டுரைகளிலே.

வழக்கம் போலத் தொழில் நிபுணர்களின் அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகளும், அறிஞர்களின் அனுபவக் கட்டுரைகளும் இருக்கின்றன. சென்ற வருஷத்தில் தென்னிந்தியாவில் வெளியான படங்களின் கதைகளும் விமர்சனங்களும் இருக்கின்றன. சென்ற வருஷத்திய சிறந்த படம், தயாரிப்பாளர், நடிகர் முதலியவைகளைக் குறிக்கும் 'கௌரவ ஜாபிதா' வருகிறது. 1952-ம் வருஷத்திய முக்கிய நிகழ்ச்சிகளின் தினக்குறிப்பும், தொழிலாராய்ச்சிக் கட்டுரையும் பிரசுரமாகின்றன.........

"இப்போதே எல்லாம் சொல்ல வேண்டாம். மலர் எப்போது வரும்?" என்று கேட்கும் நேயர்களுக்கு "1953 மலர், சித்திரை மாதம் வருகிறது" என்றுதான் கூறுவேன்.

நாளது புது வருஷம் முதல் தேதியன்று மலரின் அச்சு வேலைகள் முடிந்து விடும் என்று எதிர்பார்க்கிறேன். அதன் பிறகு தொடர்ந்தாற் போல வேலை செய்தால்தான் மலரின் பைண்டிங் வேலைகள் பத்து நாளில் முடியும்,

இதன்படி சித்திரை மாதத்திலிருந்து — ஏப்ரல் இறுதியிலிருந்து 'பேசும் படம் மலர்' நமது காரியாலயத்திலிருந்து பிரயாணத்தைத் தொடங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

வணக்கம்.

டி. வி. ராமநாத்.


புரொடக்ஷன்ஸ்
BALU BROS
தமிழ்




நாகேஸ்வரராவ் — சாவித்திரி

கட்டுவது தாலியாக இருக்க முடியாது. சந்தேகமிருந்தால் 'தேவதா'ஸைப் பாருங்கள்.



பண்டரி – ஹொன்னப்பா

பழைய அனுபவமும் புதிய முகமும் சேர்ந்தால் எப்படியிருக்கும்
என்று 'சத்திய சோதனை' செய்து பார்க்கிறார்கள்!


With my Regards,
to the readers of
"PESUM PADAM"
N Ramarao
12/3/58

# தாரக ராமாராவ்

வட இந்திய படவுலகுக்கும் நமது தென்னிந்தியப் படவுலகுக்கும் இடையே ஏராளமான வித்தியாசங்களுண்டு. எத்தனையோ விதங்களில் அவர்கள் முன்னேற்றம் கண்டிருக்கிறார்கள். இதற்கான பல காரணங்களில் கல்வியறிவும் ஒன்று. வட இந்திய பட நடிகர்களில் பாதிப்பேருக்கு மேல் கல்வியறிவுடையவர்கள். பட்டதாரிகள். மக்களுடன் கலந்து சர்வ சகஜமாகப் பழகும் ஆற்றல் கொண்டவர்கள்.

துரதிருஷ்டவசமாக நமது தென்னிந்தியாவில் பாதிக்கு மேல்—ஏன், நூற்றுக்குத் தொண்ணூறு பேருக்கு மேல் 'பர்தா' முறை அனுஷ்டிக்கிறார்கள். மக்கள் முன்பு—முக்கியமாக அறிவுள்ளவர்கள்—முன்பு வர மிகவும் பயப்படுகிறார்கள். அவர்களிடம் இந்த கலந்து பழகும் தன்மையில்லாதது பல விதமாகப் பேசச் செய்வதையும் அவர்கள் பொருட்படுத்துவதில்லை. இதன் காரணமாக அவர்கள் தன்மையற்றவர்களாகக் கருதப்படுகிறார்கள்.

ஒரு நக்ஷத்திரத்தின் வீட்டுக்குப் போகிறோம். முதலில் இருப்பதாகவே பதில் வராது. அப்புறம் இன்னார் என்று தெரிந்ததும் இருப்பதாகச் சொல்வது முதலிய தடங்கல்களைத் தாண்டி நக்ஷத்திரத்தைச் சந்தித்துவிட்டால் சரியான தகவல் எதையும் பெற முடியாது. அதற்குப் பதில் நமக்குத் தேவையற்ற—நக்ஷத்திரத்தின் பலஹீன நிலைமையை, அதாவது ஊழலை—பயங்கரமான பல உண்மைகளை உளறிக் கொட்டி விடுவார். நமக்கே திணறிப் போய்விடும்!

எந்தத் திறமையிருந்து விட்டாலும் கல்வியறிவு இல்லாவிட்டால் அதெல்லாம் சோபிக்காது. நம் நக்ஷத்திரங்களில் பலவும் 'கை நாட்டாக'வும், 'பர்தா'வாகவும் இருப்பதற்குக் காரணம் கல்வியறிவில்லாததுதான். வட இந்திய நடிகர்களில் பலரும் படித்துப் பட்டம் பெற்றவர்கள். சமூக விஷயங்களில் பங்கெடுத்துக் கொள்ளுகிறவர்கள். மேக்—அப்புடனோ, இல்லாமலோ வெளியே சகஜமாக உலவுகிறவர்கள். அவர்களில் பட ஜோடிகள் உண்டு. பகிரங்கமாக இதை அவர்கள் ஒப்புக் கொண்டு மக்களிடையேயும் அப்படியே தோன்றுகின்றனர். எல்லாவற்றையும் விட அவர்கள் பத்திரிகைகளுக்குத் தாங்களாகவே கட்டுரைகள் பல எழுதுகிறார்கள்!

**வாழ்க்கைச் சித்திரம்**



தங்கம் இருக்கிறது. பசும் பொன் தங்கம்தான். ஆனால் அது புடம் போடப்பட்டு மெருகிடப்பட்டு இருந்தால்தானே பள பளப்பாக இருக்கும்? வைரம் பட்டை தீட்டப்பட்டால்தானே பிரகாசிக்கும்? அதைப் போல கல்வியறிவு தானே கலைஞர்களுக்கு மதிப்பையும் கௌரவத்தையும் தர முடியும்?

நம் பட உலகிலேயும் ஒரு சில பட்டதாரிகள், கல்வியறிவுள்ளவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்களில் பலரும் பொது வாழ்க்கையில் ஈடுபடாத காரணத்தால், மக்கள் அவர்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ளமுடிவதில்லை. ரஞ்சன் படித்தவர். ஆனால் வட இந்திய படவுலகுடன் ஐக்கியமாகி விட்டார். மற்ற பட்டதாரிகளில் வி. வி. சடகோபன் படவுலகிலிருந்தே விலகிவிட்டார். ஓரிருவருக்குப் படவுலகில் சந்தர்ப்பமே இல்லை. மற்றவர்களில், அதிக கல்வியறிவில்லா விட்டாலும் பொது அறிவுள்ளவர்கள், புத்திசாலிகள் என்று நம்மால் மதிக்கப்பட்டவர்கள் குறிப்பிட்ட கட்சியைச் சேர்ந்தவர்களாகி மக்களிடம் மதிப்பிழந்து விட்டனர். இதன் காரணங்களால்தான் மக்கள் படவுலக கலைஞர்களை, மியூசியத்தில் பலவற்றையும் பார்ப்பது போல பார்ப்பதுடன் ஒரு தனி இனத்தவராகக் கருதுகிறார்கள்.

அதிர்ஷ்டவசமாக தெலுங்கு படவுலகில் சில நல்ல கலைஞர்கள் பட்டதாரிகள் இருக்கிறார்கள். மக்களுடன் கலந்து பழக வேண்டும், அவர்களுக்

குத் தங்களால் இயன்ற சேவை செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்ட பல பட்டதாரிகள் பல உத்தியோகங்களையும் உதறிவிட்டுப் படவுலகில் நுழைந்திருக்கிறார்கள்.

மேற்சொன்னவர்களில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய ஒருவர்தான் தாரக ராம ராவ் பி. ஏ. தாரக ராம ராவ் என்று படவுலகில் யாருமே கிடையாதே என்கிறீர்களா? பிரபல ஆந்திர நடிகரும், பி. ஏ. பட்டதாரியும், மாஜி சர்க்கார் உத்தியோகஸ்தருமான என். டி. ராமராவ் தான் தாரக ராம ராவ் என்பது உங்களில் பலருக்கும் தெரிந்திருக்க நியாயமில்லை.

ராம ராவுக்குப் பலருடனும் கலந்து பழகும் தன்மையும் சமூக சேவை செய்ய வேண்டுமென்ற ஆர்வமும் நிறைய வுண்டு. தாரக மந்திரத்தை பெயருக்கு முன்னால் கொண்ட இந்த நடிக, சமூக ஊழியர் நமது படவுலகுக்கு ஆந்திரத்தின் நன்கொடையாகும்.

தான் ஒரு பிள்ளைக்குத் தகப்பனார் ஆகிவிட்டால், அந்த மனிதரின் பெருமையை அளவிட முடியாது. தனக்குக் குழந்தை பிறந்திருக்கிறதாக மாமியார் வீட்டிலிருந்து (ஆசையும், பாசமும், பணமும் கொண்டு மனைவியை மாமனார் வீட்டுக்கு அனுப்பாத மாப்பிள்ளையைப் பற்றி நான் குறிப்பிடவில்லை!) கடிதம் வந்தவுடனே அந்த மனிதர் தலைநிமிர்ந்து நடப்பார். உலகத்திலே யாரும் சாதிக்க முடியாத எதையோ தான் சாதித்து விட்டதைப் போலப் பெருமை கொள்ளுவார்! தனக்கு உலகிலே ஒரு வாரிசு அவதரித்து விட்டதை நினைத்து நினைத்துப் பூரித்துப் போவார். இப்படிப் பூரித்துப் போகும்படியான ஒரு சந்தர்ப்பம் லக்ஷ்மய்யா என்பவருக்கு ஏற்பட்டது. இந்த லக்ஷ்மய்யா ஆந்திர தேசத்தில் கிருஷ்ணா ஜில்லாவைச் சேர்ந்தவர். நெம்மகூர் என்ற கிராமத்து நல்ல மனுஷர்.

தாரக ராமராவைப் பற்றி ஆரம்பித்துவிட்டு, லக்ஷ்மய்யா என்பவரைப் பற்றிச் சொல்லுகிறீரே என்று கோபிக்க வேண்டாம். எல்லாம் ராமராவின் அவதாரத்துக்கு ஆதிகாரணமே இந்த லக்ஷ்மய்யாதான். 1923-ம் வருஷம் ஜூன் மாதம் 15-ம் தேதி லக்ஷ்மய்யா-வெங்கடராவம்மா தம்பதிகளின் திருக்குமாரராக நெம்மகூரில் பிறந்தார் ராமராவ்.

சாதாரணமாக நாடக உலகிலோ மற்றெந்தக் கலையுலகிலோ பிரவேசித்தவர்களில் பலரும், இளமையில் கிராமத்தில் நான்காவது அல்லது ஐந்தாவது வகுப்பில் படிக்கும் போதே, வீட்டில் சொல்லாமல் 'ஓடி' விட்டவர்களாகவே இருப்பார்கள். அவர்களது பெற்றோரும் அவர்களது படிப்பைப் பற்றி, கனவு காணும் அளவுக்கு, நடைமுறையில் சிரத்தை காட்டமாட்டார்கள். அனேக தகப்






பன்மார்கள் பிள்ளைகளை அவர்கள் ஓடிப்போன இடங்களிலிருந்து, அழைத்துவர முயற்சித்து, தோல்வியுற்றுக் கடைசியில், 'எக்கேடாவது கெட்டுத் தொலையட்டும்' என்று விட்டுவிட்டார்கள் இதைத் தான் பல கலைஞர்களின் வாழ்க்கையில், நடந்தவை என்று கேட்டிருக்கிறோம். படித்திருக்கிறோம்.

இவ்வழக்கத்துக்கு நேர்மாறானது ராமராவின் வாழ்க்கை. அவரது தகப்பனார் தனது பிள்ளை சினிமாவில் சேரவேண்டும்' என்று நினைக்கவில்லை. ராமராவும் படவுலகைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கவில்லை. இதற்குக் காரணங்கள் அவருக்கு கல்வியிலிருந்த ஆர்வமும் அக்கறையும்தான். இளம் வயதிலே கிராமப் பள்ளிக் கூடத்திற்கு ஒழுங்காகப் போய், நன்றாகப் படித்தும் வந்தார் ராமராவ், பள்ளிக்கு நேரத்திற்குப் போய்ச் சேர்ந்துவிடுவார் அவர். வகுப்பில் பாடங்களைச் சிரத்தையுடன் படிப்பார். உபாத்தியாயர் சொல்வதைக் கவனமாகக் கேட்டு மனதில் பதிய வைத்துக் கொள்ளுவார். தினசரி நேரந்தவறாது வந்து அக்கறையுடனும் படிக்கும் ராமராவிடம் உபாத்தியாயர்களுக்கு மிகுந்த அன்பு உண்டு. அதே சமயம், 'எதைக் கேட்டாலும் எழுந்து 'டக்' கென்று பதில் சொல்லி நம்மை முட்டாள்களாக்குகிறானே', என்று ராமராவ் மீது வகுப்பு மாணவர்கள் பலருக்கும் அசாத்திய ஆத்திரமும் பொறாமையும் உண்டு. விளையாட்டுக்களும் படிப்பும் தவிர மற்ற எதையும் பற்றிக் கவலைப்படாத நிலையில் ராமராவ் பள்ளிக்குப் போய் வந்து கொண்டிருந்தார்.

கிராமப் படிப்பு முடிந்தது. பிள்ளையின் நல்வாழ்வில் அக்கறை கொண்ட லக்ஷ்மய்யா குடும்பத்துடன், 1933-ம் வருஷத்தில், ராமராவின் பத்தாவது வயதில் ராமராவின் மேல் படிப்புக்காக விஜயவாடாவுக்கு வந்தார். விஜயவாடாவில் பிள்ளையின் படிப்பைத் தவிர வேறு வேலை லக்ஷ்மய்யாவுக்கு கிடையாது. ராமராவும் அந்தப் பொறுப்புணர்ந்து மிகவும் கவனமாகப் படித்து வந்தார்.

விஜயவாடாவில் பள்ளிப் படிப்பின் போதே கலையுலகுடன் ராமராவ் தொடர்பு கொள்ளும் சந்தர்ப்பம் வாய்த்தது. பெஜவாடா (அப்போது பெஜவாடா என்றுதானே அதற்குப் பெயர். ஏன் இப்போது கூடப் பலரும் பெஜவாடா என்றுதான் கூறுகின்றனர்) நவஜோதி அமெச்சூர் ஆர்ட்ஸ் என்ற ஒரு சபை அங்கு நடைபெற்று வந்தது. அனேகமாக அறிஞர்களும் மாணவர்களும் அதில் அங்கத்தினர்களாக இருந்தனர். அந்தச் சபையினர் பல நாடகங்களை அவ்வப்போது நடத்தி வந்தனர். பள்ளியிலே படிப்பதிலே புகழ்பெற்ற ராமராவ், நாடகங்களிலே நடிக்க அழைக்கப்பட்டார். பாடங்களைக் 'கடம்' அடித்துப் பழகியிருந்த அவர் நாடக வசனங்களை ஓரிருமுறை படித்த வுடனேயே அரங்கேற்றத்துக்கு தயாராகிவிடுவார். நல்ல அழ




கும் உடல்கட்டும் கொண்டிருந்த அவர் பிரதம பாகங்களில் நடித்து தானும் புகழ்பெற்று, சபைக்கும் கௌரவத்தைத் தேடிக் கொடுத்தார்.

இந்த இடத்தில்தான் பல கலைஞர்களின் வாழ்க்கையிலிருந்து ஒதுங்கிப் போகிறது ராமராவின் வாழ்க்கை. நமது கலைஞர்களில் பலரும் முதலிலேயே படிக்காமல் 'ஓடி' வந்துவிட்டவர்கள். (இப்படி நான் குறிப்பிடுவது அவர்களை இழிவுபடுத்துவதாக யாரும் நினைக்கமாட்டார்கள் என்று நம்புகிறேன். அவர்கள் தாங்கள் வைத்த குறியில் தவறாது வெற்றி பெற்றதற்கு பாராட்டத்தான் வேண்டும்.) மற்ற சிலர் படித்து வந்த போது கலையுலகில் ஈடுபட்டு, படிப்பை நிறுத்திவிட்டு கலையுலகிலேயே ஈடுபட்டு விட்டார்கள். ராமராவ் விரும்பியிருந்தால் அப்போதே கலைஞனாகி விட்டிருக்கலாம். நிறைய பணம் சம்பாதித்திருக்கலாம். ஆனால் கல்வியை முக்கியமானதாகவும். கலையை இரண்டாவது பக்ஷமாக-- ஒரு முக்கியமான பொழுது போக்காகவும் கொண்டிருந்தார் ராமராவ்.

கல்வி கற்பது என்றும் வீணாகி விடாது. இன்றில்லாவிட்டாலும் நாளை நிலையான உத்தியோகம் கிடைக்கும். கல்வியறிவுடன் கலையுலகில் ஈடுபட்டால் கௌரவமாகவும் இருக்கும் என்றெல்லாம் தீர்மானம் செய்த ராமராவ், படிப்பை முக்கியமாகக் கொண்டு மேலும் மேலும் கவனம் செலுத்தி படித்து வந்தார். இந்தச் சிரத்தை காரணமாக பள்ளிப் படிப்பு கல்லூரிப் படிப்பாகி, ராமராவை 1947-ம் வருஷத்தில் பி. ஏ. பட்டம் பெற வைத்து விட்டது. பி. ஏ. டிகிரி வாங்கிக் கொண்டு வெளியே வந்த ராமராவ் தன் முயற்சிக்குத் தன்னைத்தானே பாராட்டிக் கொண்டார்.

ஒருவர் தனது எதிர்காலத்தைப் பற்றி ஏதாவது திட்டம் போட்டு வைத்திருப்பார். செயலளவில் அது நிறைவேறாது. அப்படிச் செயலாகி விட்டாலும் பூர்த்தியடையாது. சிலர் என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருப்பார்கள். அவர்களுக்கு ஏதாவது ஒரு வசதி ஏற்பட்டு யோசனைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடும். ஆனால் இந்த இரண்டு அயிடங்களிலும் சேராதவர் ராமராவ். படிப்புக்காகச் சிரமப்பட்டோம். படித்துப் பட்டம் பெற்றாகி விட்டது என்ற திருப்தியுடனிருந்தார். பெற்றோருக்கு அவர் படித்துப் பட்டம் பெற வேண்டுமென்று கொள்ளை ஆசை அந்த ஆசையைச் செயலளவில் நிலை நிறுத்தியாகிவிட்டது. தான் படித்து முன்னுக்கு வரவேண்டுமென்ற ஆவலும் அவருக்குப் பூர்த்தியாகி விட்டது. ஆக விருப்பம், கடமை இவைகளைப் பூர்த்தி செய்தாகி விட்டது. ஆனால் அவர் யோசித்தாலும் யோசிக்காவிட்டாலும் அவர் சினிமா உலகில் பிரவேசித்தாகவேண்டியிருந்ததை யாரால் தடுக்க முடியும்? இத்தனைக்கும் அவர் அரசாங்க உத்தியோகத்திற்கு விட்டார் விருப்பப்படி மனுவும் போட்டிருந்தார்.

(73-ம் பக்கம் பார்க்க)



கிருஷ்ணா பிக்சர்ஸ்

# மருமகள்

காட்சி 1

பள்ளிக்கூடம் விட்டவுடனே சிறுவர் சிறுமியர், கூடு நோக்கிச் செல்லும் பட்சி ஜாலங்களைப் போல வீடு நோக்கிப் பறந்து செல்கின்றனர். குமார் உஷாவுடன் ரயில்








## பாத்திரங்கள்


| | |
|---|---|
| என். டி. ராம ராவ் | குமார் |
| டி. ஆர். ராமச்சந்திரன் | சூரி |
| லலிதா | சாந்தா |
| பத்மினி | உஷா |

| வசனம் : | டைரக்ஷன் : |
|---|---|
| ஏ. எஸ். ஏ. சாமி | யோகானந்த் |

வண்டியாக மாறி 'ஜூக்ஜூக்' என்று கத்திக்கொண்டே கிருஷ்ணசாமியின் வீட்டுக்குள் நுழைகிறான்.

கிருஷ்ணசாமி, ராமசாமி இருவரும் கிராமத்திலே மிகவும் நெருங்கிய நண்பர்கள். கிருஷ்ணசாமிக்கு





உஷா என்ற பெண்ணும், ராமசாமிக்கு துரை, குமார், ரூபா மூன்று குழந்தைகளும் இருக்கிறார்கள். ராமசாமியின் மனைவி குணலக்ஷ்மியும் கிருஷ்ணசாமியின் மனைவி ராஜம்மாவும் சகோதரிகள் போலப் பழகுகிறார்கள். உஷாவும் குமாரும் பாடிக்கொண்டே விளையாடுகிறார்கள். கிருஷ்ணசாமி மாட்டுக்குத் தவிடு கலக்கியபடி அதை ரஸிக்கிறார். ராமசாமி அப்போது கலப்பையுடன் அங்கு வருகிறார்.

கிரு: *ராமசாமி! பார்த்தியா குழந்தைகளை? எவ்வளவு அன்பா, அன்னியோன்னியமா பழகி விளையாடுதுங்க. நம்பகூட சிறு பிள்ளையிலே இப்படித்தான் இருந்தோம். ஞாபகம் இருக்கா?*

ராம: *ஞாபகமில்லாமெ என்ன? எல்லாம நேத்து நடந்த மாதிரி இருக்கு. அப்போ நீ ஒல்லியா இருப்பே. இப்போ தடிச்சுப் போயிட்டே! நான் குள்ளமா இருப்பேன், இப்போ கொஞ்சம் வளர்ந்துட்டேன்.*

கிரு: *வாழ்க்கையும் அப்படித் தானே ராமசாமி! குட்டை நெட்டையாகுது. மேடு பள்ளமாகுது. நல்லவன் கெட்டவனாகிறான். இதெல்லாம் சகஜமாப்போச்சு.*

உஷாவும் குமாரும் தகப்பன்மாரிடம் ஓடி வருகின்றனர்.

ராம: *கிருஷ்ணசாமி! மூணு தலை முறையா நம்ம குடும்பம் ஒண்ணுக்குள்ளே ஒண்ணப் பழகி வருது. ஆனா சம்பந்தம் செய்யத்தான் யாருக்கும் வயசுப் பொருத்தம் இல்லாமெப் போயிடுச்சு. இப்போதாவது எங்க குமாருக்கும் உங்க உஷாவுக்கும் ஒரு கல்யாணத்தைப் பண்ணி கண்ணாலே பார்த்துடணும். ஏன் உஷா! குமாரை நீதானே கல்யாணம் பண்ணிக்கப் போறே?*

உஷா: *போ மாமா!..... கேலி.*

இறங்கி ஓடுகிறாள். குமாரும் ஓடுகிறான்.

ராம: *இப்பவே இப்படின்னா... தம்பதிகளாயிட்டா?*

கிரு: *உம்,, நம்மளும் பொழைச்சிக் கிடந்து குழந்தைகளும் பெரிசானா அப்புறம் பார்த்துக்கிடலாம்.*

ராம: பார்க்கலாம்னு சொல்றீங்களே. செய்யலாமின்னு சொல்லுங்க

கிரு: அதுக்கென்ன ராமசாமி! அந்தப் பள்ளத்து நிலம் நல்லாப் பயிரிட்டது போல் இருக்கே.

ராம: ஆமா. ஒரு வருஷம் விளைஞ்சா ஒன்பது வருஷத்துக்கு ஒண்ணும் இருக்காது. அதனாலெ அந்த விவசாயத் தொழிலுக்கு ஒரு முழுக்குப் போட்டுட்டுப் பட்டணம் பக்கம். ....

கிரு: அங்கே மட்டும் என்ன வாழுதாம்! கை நிறைய பணம் வச்சிருக்கிறவங்களுக்குத்தான் பட்டணம் சுகம். உன்னைப்போல என்னைப் போல உள்ளவங்க அங்கே வேலை தேடிப்போய் படுற அவஸ்தை இருக்குப்பாரு அதைவிட நம்ம உழுத பூமியிலே ஆழமா குழிதோண்டி, உள்ளே குதிச்சு உயிரெ விட்டுடலாம்.

ராம: வாஸ்தவந்தான் கிருஷ்ணசாமி. ஆனா எனக்கு அந்தக் கஷ்டம் இருக்காது. கண்டிராக்டர் கண்ணாயிரமுன்னு ஒரு சொந்தக்காரர். அவர் தனக்கு வர்ற காண்டிராக்டுகளிலே சிலதையும் தந்து அதுக்குரிய பண உதவியும் செய்றேன்னு சொல்லியிருக்காரு.

கிரு: அட பின்னே என்னாப்பா? பொழைக்கிறதுக்கு ஒரு வழியையும் காட்டி அதுக்கு வகையும் செய்றாங்க. போயி உன் அதிருஷ்டத்தைத்தான் ஒரு கை பாரேன்.

கிருஷ்ணசாமி வற்புறுத்தி, தன் மனைவியின் கழுத்துச் சங்கிலியை விற்று சென்னைக்குச் சென்று காண்டிராக்ட் வேலையைக் கவனிக்கச் சொல்லி ராமசாமியிடம் கூறுகிறார். அதன் மேல் சென்னை சென்ற ராமசாமி விரைவிலேயே காண்டிராக்ட் வேலையினால் பெரிய பணக்காராகிறார். அவர் குடும்பம் சென்னைக்குப் போகிறது. குமார் சென்னையில் படிக்கவே உஷாவையும் சென்னையில் படிக்க வைக்கிறார் கிருஷ்ணசாமி. கால வேகத்திலே பருவப் பதுமைகளாக மாறுகின்றனர் குமாரும் உஷாவும். அவர்கள் இதயங்களிலே காதல் மலர் பூத்துக் குலுங்குகிறது. நந்தவனத்தில் மனம் விட்டு கொஞ்சி இருவரும் பேசுகின்றனர்.





குமா: உண்மைக் காதல் என்பது உறுதியான மலை போன்றது. அதைத் துப்பாக்கியால் தாக்க முடியாது. பீரங்கியால் பிளக்க முடியாது. அணுகுண்டாலும் அசைக்க முடியாது. அதற்குப் பயமே கிடையாது.

உஷா ஒரு துரும்பால் காதில் சீண்டுகிருள்.

குமா: ஆ...

உஷா: சிறு துரும்பு குமார், காதல் இன்பம் கதிகலங்கிப் போச்சே.

குமா: வம்புக்காரி, சிறு பிள்ளைக் குறும்பு கூடவே வந்து விட்டது.

உஷா: வம்புக்காரி. குறும்புக்காரி! அப்புறம்?

குமா: புரட்சிக்காரி...

உஷா: நானு?

குமா: செய்த கிளர்ச்சிகூட இன்னும் அடங்கவில்லை.

உஷா: எங்கே குமார்?

குமா: என் உள்ளத்திலே உஷா! பருவம் உன் மேனியிலே காட்டும் அழகுப் புரட்சி; அது என் நினைவிலே கிளப்பும் இன்பப் புரட்சி.

உஷா: புரட்சி...கவிதை அடுத்தது..

குமா: பசி...

## காட்சி 2

குமாரின் மூத்த சகோதரன் துரைக்கு கல்யாணம் நடக்க ஏற்பாடாகிறது. ஆனல் பணத்திமிர் படைத்த குணலக்ஷ்மி கல்யாணத்தின் போது கிருஷ்ணசாமி ராஜம்மா இருவரையும் அவமானப் படுத்தவே கோபித்து வெளியேறுகிருர் கிருஷ்ணசாமி. நல்லம்மா, தங்கம்மா என்ற இரு விதவைகளுக்கு ஊரில் 'நாரதர்' வேலைதான். இரண்டு பேர் சந்தோஷமாக இருந்தால் அவர்களுக்குச் சகிக்காது. அவர்களால் வந்த வினைதான் இதெல்லாம். குமாரும் உஷாவும் பலவந்தமாகப் பிரிக்கப்படுகின்றனர். அதற்குப் பதிலாக துரையின் மனைவி சாந்தா குணலக்ஷ்மியைச் சரியான பாடு படுத்துகிருள்.


(84-ம் பக்கம் பார்க்க)



சமீபத்தில் வெளிவந்த அருணையின் இரண்டாவது தயாரிப்பான குமாஸ்தாவில் பண்டரிபாய் பிரதான கதாநாயகி பாத்திரமேற்றுத் திறமபட நடித்திருக்கிறார். குமாஸ்தாவாக வந்து அமைதியாகவும் அற்புதமாகவும் நடித்துள்ள நாகய்யாவின் உணர்ச்சி மிகுந்த நடிப்புக்கு அடுத்தபடியாக, பண்டரிபாயின் உருக்கமான நடிப்பு ரஸிக உள்ளங்களை நெகிழச் செய்து விடுகிறது.

கிழட்டுத் தந்தை, முரட்டு அண்ணன், ஆகியவர்களுடன், ஏழை குமாஸ்தாவான தன் மூத்த சகோதரனின் குடும்பத்திலே வாழும் பேதை சுசீலாவுக்கும் காதல் உணர்ச்சி ஏற்படுகிறது. ஆனால் அந்தோ அவள் 'வாழ்ந்தது' ஒரே நாள்–இல்லை, ஒரே இரவு–அதுவுமில்லை–ஒரே வினாடி தான். அதன் பலன் அவள் தன் வாழ்க்கையையே முழுக்க முழுக்க இழந்து விட்டாள். மாங்கல்யத்தைப் பறித்தது மடமையின் விதி; மானத்தைப் பறித்தது மனிதர்களின் சதி! அவள் வாழ்வு–வாழ்வா அது?—ஒரு பயங்கரப் புயல்–ஒரு புதிர்! சந்தோஷம் எனபதையே அறியாத அவள், உலகம் தன்னை ஒரு சத்தியவதி என்று ஒப்புக் கொண்டால் போதும் என்கிறாள்! கணவனை இழந்து, குழந்தையைப் பிரிந்து, பழியைச் சுமந்து, தன் தமையனின் அவநம்பிக்கையையும் ஏற்றுத் துடிக்கிறாள் சுசீலா. இந்த விசித்திரமான பாத்திரத்திலே வெற்றிகரமாக நடித்திருக்கிறார் பண்டரிபாய்.

ஹிந்திப் படமான 'பஹார்'ருக்குப் பிறகு, முதல் முறையாக முழு சந்தர்ப்பமும் குமாஸ்தாவில்தான் கிடைத்திருக்கிறது அவருக்கு. அந்தச் சந்தர்ப்பத்தை பண்டரிபாய் நன்கு பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். குமாஸ்தாவின் டைரக்டரான ஆர். எம். கிருஷ்ணசாமி இப்படத்தின் மூலம் ஒரு சிறந்த நடிகையைத் தென்னாட்டிற்கு அளித்து விட்டார்.





## பண்டரிபாய்

## செய்திப் படங்கள்...........


சென்ற மாதத்தில் ஒரு பிரிவுபசாரமும், வர வேற்பு உபசாரமும் படவுலகின் இரண்டு முக்கிய சம்பவங்களாக இருந்தன. சென்னையிலிருந்து கல்கத்தாவுக்கு மாற்றப்பட்டிருக்கும் கே. ஸ்ரீநிவாஸனுக்கு வாஹினியில் நடைபெற்ற பிரிவுபசாரமும், பிலிம் வர்த்தக சபையின் சார்பில் சென்னைப் பிராந்தியத்தின் புதுத் தணிக்கை அதிகாரியாக பம்பாயிலிருந்து வந்துள்ள எஸ். ஏ. ஐயருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பும்தான் அவை. முறையே சென்ற மாதம் 3, 20 தேதிகளில் நடைபெற்றன இவை.





ஸ்ரீநிவாஸனுக்குப் பிரிவுபசாரம்




லிபர்ட்டி
மதனமோகினி

# வெளிவரவிருக்கும் படங்களிலிருந்து காட்சிகள்



அசோஸீயேடட்
புரொட்யூஸர்ஸ் தயாரிக்கும்
படம் நெ. 2.


ஸி. ஸி.
முயற்சி


பிரகாஷ்
பெற்ற தாய்


சந்திரா
ஜெனோவா


சந்திரா
ஜெனேவா


மெட்ராஸ் ஆர்ட்
ரோஹிணி


ஜூபிடர் - லாவண்யா
மனிதன்
காட்சிகள்
PSR



ஜுபிடர்-லாவண்யா கூட்டுத் தயாரிப்பான மனிதன் கலையழகும், கருத்துயர்வும் கொண்ட ஒரு திரைப்படமாகத் திகழுகிறது. டி. கே. எஸ். சகோதரர்களும், மற்றும் மாதுரிதேவி, கிருஷ்ணகுமாரி, எஸ். ஏ. நடராஜன் கே. ராமசாமி முதலியோர் இந்தப் படத்தில் நடித்திருக்கின்றனர். குமாரி கமலாவின் அழகான நடனம்





இருக்கிறது. நெப்டியூனில் தயாரான இப்படம் கே. ராம்நாத்தின் டைரக்ஷனில் வளர்ந்திருக்கிறது. மனிதனில் காமிரா கையாளப்பட்டுள்ள விதம் மிகவும் உயர்தரமாக உள்ளதாம். நாடகமேடையில் மிகப் பிரபலமான இக்கதைக்கு நல்லவரவேற்பிருக்கும் என்று நம்புகிறோம்.








PSR



ஆர். ஆர். பிக்சர்ஸ்

# வாழப்பிறந்தவள்

படக் காட்சிகள்




வாழப் படைத்த கடவுளுக்கு விரோதமாக மனிதன் எனக்கு ஏன் சாக வழிகாட்ட வேண்டும்?' என்கிருள் கீதா; 'மரணம் கூட நாம் வேண்டும் போது நமக்குக் கருணை காட்டாது' என்று அலுத்துக் கொள்ளுகிருள் நிர்மலா. அவள் சாக விரும்பினுள்போலும்.
































89673

'பாடுபடுகிறவன் பசியால் வாட பலனை அனுபவிக்கிறவன் பார்த்துக் கொண்டிருப்பதா?'-சுமதி.

'அவள் அழகு என்னை அயோக்கியனாக்கினால் அதற்கு நான் என்ன செய்ய முடியும்?'-ராஜா.

'இன்பம் புண்ணியத்தில் இல்லை; பாவத்தில்தான் இருக்கிறது' -தயாநிதி.


-600 003.

















எழுத்துப்பித்தன், பம்பாய்

தன் மனைவி பிற நடிகனேடு சேர்ந்து, காதல் கட்டங்களில் நடிப்பதைப் பார்க்கும் உண்மையான கணவனின் மனநிலை எதை ஒத்திருக்கும்?

*தான் இதுகாறும் செய்ததை நடிகர் ஆரம்பித்துவிட்டாரே என்று நடிகன்மீது இரக்கம் கொள்ளும்படியான நிலையை ஒத்திருக்கும்.*

மேடை நடிகனுக்கும் சினிமா நடிகனுக்குமுள்ள வித்தியாசம் என்ன?

*நிஜத்திற்கும், நிழலிற்கும் உள்ள வேற்றுமைதான்.*

கலாபிமானம், நடிப்புத்தன்மை கற்பின் சிகரம். மக்கள் தொண்டு இவைகளுக்கு எடுத்துக்காட்டாக நம் பட உலகில் யாரேனும் இருக்கிருர்களா?

*கஷ்டமான கேள்வி!*

ஸ்ரீ., பெல்லாரி

சந்திரலேகாவில் ஆடும் சர்க்கஸ் கமலா சர்க்கஸா அல்லது பரசுராம் சர்க்கஸா?

*இரண்டும் இல்லை. ஜெமினி சர்க்கஸ்!*

வி. பொ. ரங்கன், சென்னை

பாதாள பைரவியில் நடித்த கே. மாலதி தற்பொழுது எந்தப்படத்தில் நடிக்கிருர்? அவரது வீட்டு விலாசம் என்ன?

*சென்னை, ராயப்பேட்டை, தாண்டவராயன் தெருவிலிருக்கும் தன் வீட்டில் அவர் ஓய்வு பெற்று வருகிருர்.*

ஔவையாருக்குப் பிறகு ஜெமினியின் அடுத்த வெளியீடான சண்டைப்படம் என்ன?

*வர்த்தக மண்டலத்திலே 'யுத்த' (போட்டி) படமாக இருக்கலாம்.*

எம். ஜி. ரா., அம்மன்புரம்

என். டி. ராமராவ் நடிகரிலும், பத்மினி நடிகையிலும் சினிமா உலகில் அழகில் சிறந்தவர் என்பது எனது நோக்கம் தாங்கள் இதை ஒப்புக்கொள்கிறீர்களா?

*பாதிமட்டும்.*

ஏ. ஓ. எஸ். வான்,
கலிஸ்காஸ்டேட்

கன்னிப்பெண்ணைக் காணும் போது சில வாலிபர்கள் அவர்களை வர்ணிக்கிருர்களே அதே போல் வாலிபனைக் கண்டால் கன்னிப் பெண்களும் வர்ணிப்பார்களா?

*வர்ணிப்பார்கள், வாயினலல்ல, கண்களால்,*

ப. நி. ஆ. ஜான், ஆள்வார் திருநகரி

'பணம்' படம் பார்த்து சகிக்க முடியாத படம் என்று என் நண்பர் கூறுகிருரே, இது உண்மைதான?

*உமது நண்பரின் வார்த்தையில் உமக்கே நம்பிக்கை இல்லையா?*

1952-ம் வருஷத்தில் வெளிவந்த படங்களில் மிகச் சிறந்த படம் எது? அதன் டைரக்டர் யார்? அது எந்த ஸ்டூடியோவில் எடுக்கப்பட்டது?

*1953 'பேசும் படம் மல'ரைப் பாரும்.*

என். ஏ. சதக்கத்துல்லா,
கோட்டைக்குப்பம்

பண்டரிபாய்க்கு சகோதரிகள் உண்டா?

*உண்டு.*

தி. கெ. சந்திரசேகரன்,
புனலூர்

வி. கே. ராமசாமி பாட்டுப் பாட அதற்கு அங்கமுத்து அபிநயம் பிடிப்பதாகக் கனவு கண்டேன்...என் கனவு பலிக்குமா ?

*பலிக்கும். ஆனால் தாங்கள் சென்னை – கீழ்ப்பாக்கத்திற்குக் குடியேற வேண்டும்!*

உங்களைக் காக்காய் பிடித்து சினிமாவில் சேர்ந்து விடுவேன் என்று என் நண்பன் ஒருவன் பலரிடம் சொல்லி வருகிறான்...

*நான் பத்திரிகையாளன், பட முதலாளி அல்ல. ஆகையால் காக்காய் பிடிப்பதும் காவடி எடுப்பதும் இங்கே செல்லாதென்று சொல்லும் உம் நண்பருக்கு.*

என். பாண்டியன், புதுவை

பல்லவநாடு தந்த பகுத்தறிவு சிங்கம் சி. என். அண்ணாத்துரையின் சொர்க்கவாசல் என்ன வாயிற்று ?

*இன்னும் திறக்கப்படவில்லை. 'பக்தர்கள்' கைதட்டக் காத்துக் கொண்டிருக்கிறார்கள் !*

மு. நடராசன், நீர்கொழும்பு

வைஜயந்திமாலா, மாதுரிதேவி இந் நடசத்திரங்களுடன 'பாகவதர்' நடிப்பாரா நடிக்க மாட்டாரா?

*பூமி சாஸ்திரப்படி இந்தியாவின் மேற் பகுதியாகிய பம்பாயில் சில படங்களில் நடித்து வருகிறார் வைஜயந்தி. கீழ்ப் பகுதியாகிய சென்னையில் வசிக்கிறார் பாகவதர். இருவரும் சேர்ந்து நடிக்க வேண்டுமானால், வைஜயந்தி கீழே வரவேண்டும் அல்லது பாகவதர் மேலே உயரவேண்டும். இதில் எது சாத்தியம்? புது வாழ்வு என்ற படத்தில் மாதுரியுடன் நடித்து வருகிறார் பாகவதர்.*

எஸ். ராமசாமி, டிகோயா

பராசக்தியில் குணசேகரன், விமலா கனவில் பாடும் "புதுப் பெண்ணின் மனதைத் தொட்டுப் போனவரே" என்ற பாட்டை கதை முடிவில் பாடுகிறான். விமலா கனவு காணும் போது அவன் அங்கேயில்லை. தவிர, அவன் விமலாவின மேல் அப்போது காதலும் கொள்ளவில்லை. ஆகவே குணசேகரன் அந்தப் பாட்டை எப்படிப் பாட முடியும் ?

*சினிமாவில் காதல் ஒரு புதுரகம். எதையும் பிறருக்குப் புரியாத முறையில் சித்தரித்துக் காட்டுவது தான் இங்கே புதுமையாக மேற்கொள்ளப்படுகிறது. ஆகவே, டைரக்டருக்குக் கூட புரியாத ஓர் புதிர்தான் இந்த புதுப் பெண்ணின் மனம்.*

து. பச்சை, மோலூர்கிராமம்

லலிதா, பத்மினி, ராகினி வாழ்க்கைச் சித்திரத்தை சுருக்கி கூறுவீர்களா ?

*ஜனவரி பேசும் படம் படித்தீர்களா ?*

பிப்ரவரி மாதம் வெளிவந்த சிறுவர் பத்திரிகையாகிய பால பாரதியும் 'பேசும் படம்' வெளியீடு தானே?

*அழகிய அதன் அமைப்பையும் அரிய விஷயங்களையும் பார்த்த பிறகுமா சந்தேகம்?*

நடிகைக்கும் டைரக்டருக்கும் சச்சரவு ஏற்பட்டால் என்னவாகும் ?

*தயாரிப்பாளர் தலை முழுக வேண்டியதுதான்.*

ஜெமினிப்பிரியன்,
யாழ்ப்பாணம்

ஜெமினிப் படங்களைத் தவிர, மற்ற படங்களில் ஸ்ரீராம், ராதா நடிக்க மாட்டார்களா ?

*நடிப்பார்கள், ஜெமினியின் அனுமதியோடு.*

தற்பெருமை, கெட்ட குணங்கள் முதலியவை இல்லாமல் தெய்வ பக்தி, நிதானமான போக்குடையவர் நாகய்யா. எம். கே. ராதா என்கிறேன். தங்கள் அபிப்பிராயம்?

*உம்முடையது சந்தேகமா அல்லது தீர்மானமா என்பதை முதலில்கூறும்.*

ஆர். எம். தங்கராஜ், திருச்சி

மணமில்லாத மலர், அழகில்லாத மங்கை, இனிமை இல்லாத கீதம், இவைகளை சிலர் ரஸிக்க காரணம் என்ன, தெரிவிக்கவும் ?

*மூளையில்லாத மனிதனானதால்!*

ஜி. ராதிகா, அரக்கோணம்

ஸ்டுடியோக்களைச் சுற்றி வரும் காமிரா நிபுணரின் புகைப்படத்தை குடும்பத்தோடும் அவர் காமிரா வோடும் உமது பத்திரிகையில் பிரசுரிக்க முடியுமா ?

*நமது காமிரா நிபுணர் ராயலசீமா பிரதேசத்திற்குச் சென்றிருக்கிருர் இளைப்பாற. அவர் வந்தவுடன் தங்களுக்குத் தெரியப்படுத்துகிரும்.*

தங்களுக்கு சினிமாவில் நடிக்க விருப்பம உண்டா ?

*ஏன் ? நீர் கதா நாயகியாக நடிக்கலாம் என்று நினைக்கிறீரா!*

க. கனக செல்வராஜா, சிலோன்

'ராணி' படத்தில் பீமனுக நடித்த ராஜா வகாப் காஷ்மீரி வேறு ஏதேனும் படங்களில் நடிக்கிருரா?

*இல்லையே ராஜா !*

கண்டசாலா, திருச்சி லோகநாதன், ஜெயராமன் இவர்களில் பின்னணியில் தற்போது நனருகப் பாடக்கூடியவர் யார் ?

*கண்டசாலாவும் ஜெயராமனும் தான்,*

என். சிங்கராஜ, யாழ்ப்பாணம்

பேசும் படம் செய்திச் சுருளில் ஒவ்வொரு ஆசிரியர்களையும் போட்டாலென்ன ?

*உமக்கு திருப்தியாக இருக்கும்!*

எஸ். வி. மயில்வாகனன்,

பெரிதாக இருந்த உங்கள் ரஸிகனை ஏன் சிறிதாக்கி விட்டீர்கள்?

*'மடல் பெரிது தாழை' என்ற செய்யுள் படித்திருக்கிறீரா?*

ஞா. வே. ஜெயபாலன், சிலோன்

இசைவாணர் எம். கே. தியாகராஜ பாகவதர் நடித்திருக்கும் சியாமளா படத்தின் திரைக்கதை வசனம் ஏன பிரசுரிக்கவில்லை. அவை தங்களுக்கு. சிறந்ததாக தோன்றவில்லையா ?

*தோன்ருமல் இல்லை. அதைவிடச் சிறந்த சில திரைக் கதை வசனங்களைக் கைப்பற்றியதால்தான்.*

ஆர். வெங்கட்டராமன், சேலம்

சினிமா நடிகை கிரிஜாவின் நிரந்தர விலாசம் என்ன ? எந்த குலத்தைச் சேர்ந்தவர் ? அவருடைய வாழ்க்கை வர்ணனை வெளியிட்டுள்ளதா அல்லது வெளியிடப் போகிறீர்களா ? எப்பொழுது ? கடிதம் எழுதினால் பதில் வருமா ? உண்மை பெயர் யாது ?

*நீர் என்ன பத்திரிகை நடத்துவதாக உத்தேசம் வைத்திருக்கிறீரா? கேள்விகளை 'க்யூ' வரிசையில் அடுக்கி யிருக்கிறீரே !*

வ. சின்னத்தம்பி, சிலோன்

டி. ஆர். ராஜகுமாரியின் தியேட்டரில் நான் சேவை செய்ய விரும்புவதால் எனக்கு இடம் தருவாரா?

*ஒரு ரூபாய் நான்கணு கட்டணம் செலுத்தும் தியேட்டருக்குள் நிச்சயம் இடம் கிடைக்கும். சேவை செய்ய தியேட்டரைத் தேடுவார்களா? ஏதாவது ஆசிரமத்தை அடையும்!*

கே. வாசுதேவன், பெரும்பாவூர்

வில்லன் பாத்திரத்திற்கு பொருத்தமானவர் பாலய்யாவா அல்லது எஸ். ஏ. நடராஜனு ?

*எஸ். ஏ. நடராஜன் நடித்தால்தான் வில்லன். பாலய்யா நடித்தாலும் நடிக்காவிட்டாலும் வில்லன்தான்.*

பேசும் படத்தில் ஆண்களுடைய வாழ்க்கைச் சித்திரம் அதிகமாகக் காணபபடுவதில்லையே, என்ன காரணம ?

*கவர்ச்சி கட்டழகில் குடி கொண்டிருப்பதால். இன்று நடிகர்களை விட நடிகைகள்தான் அதிகமாகவும் சீக்கிரமாகவும் முன்னேறிக் கொண்டிருக்கிருர்கள். அந்த முன்னேற்றத்தின் மறு மலர்ச்சிதான் 'பேசும் படம்' ஏடுகளிலே இடம் பெறுகின்றது.*

கே. பி. கனி, களக்காடு

என். எஸ். கே. யின் தோட்டக்காரன் எப்போது வெளிக்கிளம்புவான்?

*உழைத்து, ஊதியம் பெற்று, ஓய்வு காளன்று உல்லாசத்தோடு வருவான்.*

கோ. ஷண்முகம், காளியப்பநல்லூர்

'அண்ணி'யைப் பார்க்க மிகவும் ஆவலாக இருக்கிறேன்.

*அண்ணாவை சீக்கிரமே கல்யாணம் பண்ணிக்கச் சொல்லுங்கள்.*

வி. எஸ். டி. வேலுசாமி, இலங்கை

பாதாள பைரவியில் பி. லீலாவும் கண்டசாலாவும் பாடியுள்ள "என்ன தான் ப்ரேமையோ" என்ற பாட்டில், "மாமோகமே—வீணாகுமோ? வான் நிலவும் எனையே தகிக்கின்றதே தணலாகவே. தாபம் மீறுதே" என்று பி. லீலா பாடுகிற நேரத்தில் என் உள்ளம் குளிர்கிறதே அதன் கருத்து என்ன?

*இனிமையான கானத்தில் உள்ளம் லயிப்பது இயல்பு. மனக் குளிர்ச்சி அதன் மறுமலர்ச்சிதான். ஆகவே உங்களுக்கு மருந்தொன்றும் தேவையில்லை!*

எம். அருணாசலம், தென்காசி

எனது நண்பர் ஒருவர், ஓர் இரவு, பூங்கோதை முதலிய படங்களில் நடித்து புகழடைந்த நாகேஸ்வரராவுடன் நடிக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறார். அதற்கு என்ன செய்யவேண்டும்?

*கூடுவிட்டுக் கூடுபாயும் வித்தை கற்று உமது நண்பனை, ஓர் நடிகையாக உருமாறச் சொல்லும்.*

ஆர். காளியப்பா, மட்டக்களப்பு

சினிமாவிற்கு ஏற்றதாக ஒரு கதை அனுப்பினால் யாருக்கு அனுப்பலாம்? டைரக்டருக்கா, புரொட்யூசருக்கா?

*பணம், ஆர்வம், திறமை இந்த மூன்றும் படைத்த யாருக்கு வேண்டுமானாலும் அனுப்பலாம்.*

வி. பொ. ரங்கன், விநாயகபுரம்

சி. என். அண்ணாத்துரை, மு. கருணாநிதி இருவரும் எழுதும் கதை வசனம் சமூக நலனுக்கா அல்லது சுயநலத்திற்கா?

*சினிமாவிற்கு!*

என் நண்பர் ஒருவர் பானுமதி—பைத்தியமாகவே இருக்கிறார். அதற்கு நான் செய்ய வேண்டிய உதவி யாது?

*பரணி 'லைலா மஜ்னு' என்ற சினிமாவிற்கு உமது நண்பரை அழைத்துக் கொண்டு போவதுதான்.*

பராசக்தியில் நடித்த சிவாஜி கணேசனுக்கும் பண்டரிபாய்க்கும் பதிவுத் திருமணம் நடந்ததாக என் நண்பர் சொல்லுகிறார். அது உண்தாமைனா?

*பராசக்தியில் தானே? அதில் "ஒரு சொற்பொழிவாளரோடு இரண்டு மலர் மாலைகளை வைத்துக் கொண்டு" செய்யப்படும் சீர்திருத்த திருமணம் நடந்தது படத்தில்.*

எஸ். நாகூர், கொழும்பு

இப்போதைய என். எஸ். கிருஷ்ணன் விலாசத்தை தயவு செய்து தெரிவிக்கவும்.

*'இப்போது' இருக்கும் விலாசம் தானே? 'என். எஸ். கே. பொதுக் கூட்டம், கடற்கரை, சென்னை' என்று எழுதும்.*

என். பி. சாரதி, சென்னை

வாழ்க்கை என்றால் என்ன?

*வற்றாத ஜீவநதி என்றும், வறண்ட பாலைவனம் என்றும் இரண்டு விதமாகக் கூறுகிறார்கள். என்னைப் பொருத்தவரை அது ஓர் சினிமா.*

எஸ். எஸ். குமார், செங்கற்பட்டு

கணவனும் மனைவியும் கதாநாயகனாகவும் கதாநாயகியாகவும் நடித்தால் படம் என்னவாகும்?

குடும்பச் சண்டையாகும்.

தென்னாட்டின் சிறந்த படம் எது?

இனிமேல்தான் வரும்.

டி. சௌரிராஜன், ஆயிரம் விளக்கு

பராசக்தியில் நடித்த ராஜேந்திரன் தற்போது எந்தெந்தப் படங்களில் நடித்து வருகிறார்?

*பிரசாத் ஆர்ட் புரொடக்ஷன் ஸாரின் பெற்றமனம், மனோஹர் பிக்சர்ஸ் மனோஹரா முதலிய படங்களில் நடிக்கிறார் இந்த இளம் நடிகர்.*

# தபால் பெட்டி



## சட்டமும் சினிமாவும்

தற்காலம் சினிமா உலகில் ஒரே சமூக மயம். தற்கால வாழ்க்கையை சித்தரிக்கும் சமூகப் படங்களை முடிக்கும் போதெல்லாம் கதை நியாய ஸ்தலத்தில் வந்துதான் முடிகிறது. இந்த நியாய ஸ்தலக் காட்சி ஒன்றே ஒரு படத்தின் ஹாஸ்யக் களஞ்சியமாக அமைந்து விடுகிறது. உண்மையில் துக்ககரமான சம்பவங்களைச் சித்தரித்தே படம் ஓடினாலும், நியாய ஸ்தலம் நடத்தும் விதத்தைக் கூர்ந்து கவனித்தால் அந்த ஹாஸ்யம் வெளிப்படத்தான் செய்யும். நம் நாட்டுக்கு ஒரு சட்டம் உண்டு. அதனபடிதான் வழக்குகள் நடைபெறுகின்றன என்பதையே படத் தயாரிப்பாளர்கள் மறந்து விடுகிறார்கள்.

பாமரர்களையும் ஓரளவு பகுத்தறிவுள்ளவர்களாக மாற்றும் சிறப்பு வாய்ந்த கலையான சினிமா இந்த மாதிரி சிரிப்புக்கிடமான காட்சிகளைச் சித்தரித்து மக்களிடையே தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்தி சட்டத்தையும் அவமதிப்பது வருந்தத்தக்கது.

சட்டத்தில் காணாத, எதிர்பாராத, இடங்கொடாத அளவுக்கு நியாயாதிபதிகள் காணப்படுகிறார்கள், தற்போதைய சமூகப் படங்களிலே. ஒரு நியாயாதிபதி சட்டத்தில் கண்டுள்ளபடி சர்க்கார், குற்றவாளி ஆகிய இருதரப்பு சாட்சிகளையும் முறையே விசாரணை செய்த பின்பு வாதப் பிரதிவாதங்களைக் கேட்காமல் முதலாவதாக, வழக்குப் பற்றிய வாதம், பிறகு குற்றவாளி தரப்பு சாட்சி, திடீரென கோர்ட்டில் ஆஜராகும் சாட்சி, எல்லாவற்றையும் கதம்ப நிகழ்ச்சிகளாகச் செய்துவிடுகிறார். ஒரு நியாயாதிபதி குற்றவாளியோடு வாதாடுவார். ஒரு நியாயாதிபதி ஒரே சமயத்தில் பல்வேறு குற்றங்களை தனித்தனியே பற்பல காரியங்களில் செய்த குற்றவாளிகளைத் தண்டிப்பார்.

நியாயஸ்தலத்தில் சாட்சிகள் திரை மறைவில் வைக்கப்படுவார்கள். திரைவிலக ஒவ்வொரு சாட்சியாக விசாரிக்கப்படும். சட்டப் பிரகாரம் ஒரு வழக்கில் ஒரு சாட்சி விசாரணையின்போது மற்றொரு சாட்சி நியாய ஸ்தலத்தில் இருக்கக்கூடாது.

ஆனால், மற்ற திரைமறைவிலுள்ள சாட்சிகள் மற்ற சாட்சிகளின் சாட்சியத்தைக் கேட்டுக் கொண்டிருப்பார்கள். இம்மாதிரியாக பல்வேறு விநோத வழக்கு முறைகளை நாம் காணலாம். இம்மாதிரி காண்பிப்பது சட்டத்தையே அவமதிப்பதாகும். குற்றவாளியின் குற்றங்கள் உண்மைதான் என்று ருசுவாகி விட்டபோது திடீரென்று ஒரு புகைப் படம் அவனை நிரபராதியாக்கி விடுகிறது! இது போன்ற அசம்பாவித கட்டங்கள், நம் தமிழ் சமூகப் படங்களில் மலிந்துள்ளது வருந்தத்தக்கது என்பதை மீண்டும் நினைவுறுத்துகிறேன்.

சுருங்கச் சொன்னால் படமெடுப்போர் கூடுமானவரை சட்டம் சம்பந்தப்படாத சமூகப் படமெடுத்தால் சமூகத்திற்குப் பெரிய தொண்டு செய்தவராவார்கள். அப்படி சட்டம் சம்பந்தப்பட்டால் சட்ட நிபுணர்களின் யோசனையின்படியாவது கற்பனையைக் கொண்டுபோவது நலம்.

இ. வி. தசரதராஜன்,
அட்வகேட், செங்கற்பட்டு.

## கலை மேடையில் ஆந்திர தலைநகரமா?

தற்சமயம் தமிழ்ப் படத்தில் ஆந்திர நடிக நடிகைகளின் பிரவேசம் எல்லை மீறிவிட்டது. தமிழ் நாட்டில் நடிக நடிகைகளில் அழகானவர்களும் பாடுகிறவர்களும் இல்லையா? இப்பொழுது அரசியல் சம்பந்தப்பட்ட வரையில் ஆந்திர தலைநகர் பிரச்னை சர்வ கட்சிகளுக்கும் கோபத்தை உண்டாக்குகிறது. அப்படியிருக்கையில் ஒரு ஊரைப் பொருத்தவரையில் வெறுப்பு எப்படி உண்டாகிறதோ அதேபோல் அங்கு உள்ளவர்களையும் வெறுக்க வேண்டும். அநேகமாக நம் நாட்டில் உள்ள நடிகமணிகளையும் பரம்பரையாய்ப் பாடுபவர்களையும் ஒப்பந்தம் செய்து கொள்ளாமல் நயவஞ்சகமாக நடந்து கொள்ளுகிறார்கள் தமிழ்ப் படக்கலை படாதிபதிகள். படத்தில் ஆந்திரர்கள் பேசும்போது நம் குழந்தைகள் பள்ளியில் சேர்ந்து ஒப்புவிப்பது போல் கொச்சை தமிழில் பேசுகிறார்கள். நம் நடிகைகள் அவலக்ஷண ஜன்மங்களா, சங்கீதப் பற்றற்ற ஆந்தைகளா? மேடையில் மட்டும் கற்பனைத் தமிழர்களின்வடநாட்டான் உதவாதுஎன்று தீவிர பிரசாரம்தான் வாய் ஜம்பமாக இருக்கிறதே தவிர செய்கையில் மட்டும் ஹிந்தி டியூன் காப்பி அடிப்பதும் ஆந்திர நடிக மணிகளை நடிக்கச் செய்வதும் பழக்கமாய்விட்டது. படிக்கிறது கம்ப ராமாயணம் இடிப்பது கலைப் பெருமாள் கோவில். எல்லா படாதிபதிகளுக்கும் தொத்து வியாதி பணப் பித்தம்!

கலிகாலன்,

திருவாரூர்.

## தேவை!

நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும், மதப் பற்றற்றதும் கட்சிப் பற்றற்றதுமான சிறந்த கருத்துக்களுள்ள படங்கள் தேவை. நாடும், அதனால் நாட்டு மக்களும் வளம்பெற காலதேச வர்த்தமானத்தை அனுசரித்து படப்பிடிப்பாளர்கள் சிறந்த படங்களை உருவாக்க முனைய வேண்டுமேயல்லாது மாயாஜாலப் படங்களையும், ராஜா ராணிக் கதைகளையும் தயாரிப்பது நன்றன்று. பணத்தை மட்டும் குறிக்கோளாகக் கொள்ளாமல் உயர்ந்த லக்ஷியத்திற்காக படப்பிடிப்பில் ஈடுபட வேண்டும். வறுமை வாட்டும் இந்நாட்டிற்கு வகை செய்ய உயர்ந்த கருத்தினைப் போதிக்கும் படங்கள் தான் தேவை.

எ. எம். எஸ். ஏ. சத்தார்,

தர்மபுரி.

## ஏற்குமா?

ஒரு தமிழன், மேலும் படித்தவன், ஹோட்டலில் ஒரு பெண்ணிடம் நட்புக் கொண்டு அவள் விருப்பத்திற்காக நாட்டிய விடுதிக்குச் செல்கிறான் நாட்டியம் பார்க்க. அப்பொழுது சுயபுத்தியுடன் தான் செல்கிறான். பின்பு அங்கு அவன் ஏமாற்றப்படுகிறான். ஏமாந்த அவன் போலீஸாரிடம் தான் சென்ற இடத்தைக் காண்பித்து குற்றத்தைக் கண்டு பிடிக்க முயற்சித்திருக்கலாம். அதை விட்டுவிட்டு நடுரோட்டில் நின்று கொண்டு, நாட்டையும் நாஸ்திகமாகக் கடவுளையும் கண்டபடி கேவலமாகத் திட்டுகிறான். நாட்டில் நடவாத செய்கை இது. தமிழன் செய்கைக்கே தலைகுனிவு இது.

கே. வி. கிருஷ்ணையன்

ஐயம்பேட்டை

## படாதிபதிகளுக்கு!


தெய்வ நிந்தனையே பிரதானமாகக் கொண்டு சமீப காலத்தில் வெளி வந்த பல தமிழ்ப் படங்கள் அமோகமான பொது ஜன பாராட்டுதலகளைப் பெற்று வரும்போது சமீபத்தில் வெளி வந்து வெற்றியுடன் ஓடிக் கொண்டிருக்கும் 'என் வீடு' படத்தில் நாகையா ஆஸ்திகத்தை புகுத்தியிருக்கிறார். படாதிபதிகளுக்கு இது ஒரு நல்ல வழிகாட்டு. 'தெய்வ வாழ்த்தோடு படம் ஆரம்பமாகி தெய்வ வாழ்த்தோடு படம் முடிவடைகிறது. இனி வரும் படங்கள் இம்மாதிரி இருந்தால் மிகவும் நலமாயிருக்கும்.

வி. கோவிந்தராஜுலு,

திருக்கோயிலூர்.



# "நான் ரஸித்த காட்சி"



*("சினிமா பார்க்கும் போது ஜனங்கள் ஆபாசத்தைத்தான் விரும்புகிறார்கள். மாயா ஜாலப் படங்களும், ஸ்டண்டுகளும்தான் ஓடுகின்றன. அரை நிர்வாண நடனம் இல்லாத படங்கள் தோல்வியடைகின்றன" என்றெல்லாம் கூறும் படமுதலாளிகளை இந்தப் பகுதியைக் கவனமாகப் படிக்கும்படிக் கேட்டுக் கொள்கிறோம். ஜனங்கள் எதை ரஸிக்கிறார்கள்; எதைப் பாராட்டுகிறார்கள் என்று தெரிந்து கொள்ள இப்பகுதி மிகவும் உபயோகமாக அமைந்திருக்கிறது-ஆசிரியர்.)*

### *மருமகள்

சின்னஞ் சிறு வயதில் சிரித்து விளையாடி, சிறு மாளிகையைச் சிங்காரமாக அமைத்து, உலகிலே இருந்து வரும் பொறாமை பூசல் போன்ற தீய செயல்களையொழித்து வாழ்க்கையில் என்றும் ஒற்றுமையாக வாழவேண்டுமென்று கருத்துக்கொண்டு இன்னிசை பாடி பார்ப்போர் உள்ளத்தைப் பரவசப்படுத்துகின்றனர் இரு குழந்தைகள். ஆனால் அவர்களின் வாழ்க்கையின் பிற்பகுதி அனல் கக்கும் காற்றாக மாறியதுடன் அவர்கள் கட்டிய அன்பு மாளிகை சுக்கு நூறாக இடிந்து விடுகிறது. அந்த இடத்தில் மணம் வீசும் மலர்கள் இல்லை. அதற்குப் பதிலாக நாற்றம் வீசும் எருக்கஞ்செடிகள்தான் காணப்படுகின்றன. இந்த உருக்கமான காட்சி 'மருமக'ளில் ரஸிக்கத்தக்கதாயிருக்கிறது.

ஆர். வி. ரங்கராஜன்,
சேலம்.

### *மருமகள்

உஷா ஆஸ்பத்திரியில் குழந்தையுடன் காணப்படுவதைக் கண்ட ராமசாமியும், குணலக்ஷ்மியும் அவள் நடத்தைக் கெட்டவளெனக் கருதி, இனித் தம் வீட்டுக்கு வரக்கூடாதென்று கண்டித்து விட்டு, அங்கிருந்த ரூபாவை, உஷாவுக்குத் துணைக்கு வந்தாளென்று நம்பித் தங்களுடன் அழைத்துப்போய் விடுகின்றனர். இந்த நெருக்கடியான கட்டத்திலும், ஒரு கன்னிப் பெண்ணின் வாழ்வைக் காப்பாற்ற விரும்பி உண்மையை மறைத்து வைக்கும் உஷாவின் தியாகத்தை விவரிக்க வார்த்தைகளில்லை.

எஸ். பாலசுப்ரமணியன்,
பாண்டிச்சேரி.

### *நாம்

குமரனுடைய (நெருப்பால் வெந்த) காயங்களுக்குப் போடப் பட்டிருந்த கட்டுக்களை அவிழ்க்கும் பொழுது அவன் படும் வேதனையும், அவிழ்த்தவுடன் அவன் அடையும் சந்தோஷமும், தன் முகத்தைக் கண்ணாடியில் பார்க்கும்போது அடியோடு மறைந்து விடுகிறது. பல மிருகங்களின் முகங்களாக அவன் மனக் கண்ணாடி முன் தோன்றும் காட்சியும், அதனால் கோபமடைந்து கண்ணாடியை உடைத்தெறிவதும், அவன் அழகு முகத்தினால் காதல் கொண்ட பிரேமா, அவனது தற்போது நிலையைக்கண்டு அருவருப்புக் கொள்வதையும் கண்ட குமரன் 'நீ என் அழகைத்தான் காதலித்தாய்! என் உள்ளத்தைக் காதலிக்கவில்லை' என்று கூறும் காட்சி மனதை உருக்குகிறது.

பொ. நடராஜன,
கோவை.

---

*இககுறியிடப்பட்ட மூன்று கடிதங்களுக்கும் தலைக்கு ஐந்து ரூபாய் வீதம் பரிசளிக்கப்பட்டிருக்கிறது,




பையன்: நீ மாத்திரம் டேட்டி, டேட்டின்னு தினம் சினிமாவுக்குப் போறயே! என்னைமட்டும் அழைச்சுக்கிட்டுப் போகக் கூடாதாக்கும்?

---

## மருமகள்

குமார், தன் மனைவியைப் பற்றி தன் தாய் தந்தையர்கள் அவதூருகக் கூறி அவள் குழந்தையும் கையுமாக ஆஸ்பத்திரியில் இருக்கிறாள் என்றவுடன், அதை நேரிலேயே, உண்மையா என்று அறிய ஆஸ்பத்திரிக்கு அதிவேகமாக காரை ஓட்டிச் சென்ற பொழுது வேக மிகுதியால் நிலைகொள்ளாது காரிலிருந்து கீழே விழுந்து விடுகிறான். அதே சமயத்தில் உஷாவின் அறையில் அவளுக்கு அறிவிக்கும் அறிகுறிபோல் அவன் புகைப்படம் கீழே விழுந்து கண்ணாடி உடைகிறது. 'அதை அபசகுனமாகக் கருதி உஷாவின் உள்ளம் வருந்துகிறது'—சிறந்த உதாரணம்.

பா கிருஷ்ணமூர்த்தி,
திருவிடைமருதூர்.

மருமகள் படத்தில் காலேஜ் மாணவர் மாணவிகள் தன் காலேஜ் நண்பன் குமாருக்கு அவன் காதலித்த பெண்ணை அவர்களே கல்யாணம் செய்து வைக்க ஏற்பாடுகள் செய்து, குமாரின் தந்தையிடமே நிதியும் வசூலித்து, அவரையே கல்யாண விருந்துக்கும் அழைக்கும் காட்சி வெகு பிரமாதம்.

என். துரைசாமி,
சென்னை.

## வேலைக்காரி மகள்

கமலாவின் அத்தை, தாயிடம் அவள் வேலைக்காரியின் மகள் தானே என்று பழித்துக் கூறும் போது தாய் அந்தப் பேச்சு கமலாவின் காதில் விழக்கூடாதென்று அவள் வாயை மூடுகிறாள். ஆனால் அத்தை கால் இடறி விழுகிறாள். கமலா வேலைக்காரிதான் அவளைத் தள்ளியதாக எண்ணி செருப்பால் வேலைக்காரியை நன்றாக அடித்து விடுகிறாள். அப்பொழுதும் தன் மகள் தான் 'கமலா' என்று கூறாமல் தன் தவறுக்கு மன்னிப்பு கேட்பது போலவே நடிக்கும் காட்சி என் உள்ளத்தை உருக்கி விட்டது.

அ. அருணாசலம்,
கோவை.

வேலைக்காரி லக்ஷ்மியின் குழந்தையைப் பணக்கார பார்வதிக்குப் பிறந்ததாக லக்ஷ்மியின் உத்தரவு பேரில் எடுத்துக் கொள்ளுகிறார்கள். ஆனால் இது பணக்காரர் பக்தவத்ஸல முதலியாருக்குத் தெரியாது (பார்வதியின் கணவர்).

பங்களாவில் குழந்தை பிறந்ததாகக் கொண்டாடப் பெண்கள் கூடியிருக்கிறார்கள். அப்போது குழந்தை அழ ஆரம்பிக்கிறது. தனி அறையில் இருந்த லக்ஷ்மி குழந்தையின் அழு குரலைக்கேட்டு ஓடிவந்து குழந்தையை எடுத்து அணைத்துக்கொண்டு பால் கொடுக்கிறாள். இதைக் கண்ட பணக்கார பெண்கள் கேவலமாகப் பேசுகின்றனர். முதலியார் கோபமாகக் குழந்தையை அவளிடமிருந்து வாங்கும் படிக் கூறவும், தன் குழந்தை தானமாகப் போய்விட்டதையுணர்ந்து லக்ஷ்மி நெஞ்சம் குமுறும் காட்சி மனதை வாட்டுகிறது.

ஏ. கிருஷ்ணமூர்த்தி,
சேலம்.

பண்டார வேடத்திலிருந்த ஆறுமுகம் தனக்குப் பிச்சையிட வந்த துர்க்கியைக் கண்டதும், பண்டார வேடத்தையும் மறந்து ஆவேசமுற்று, அவளைப் பழிவாங்க தீர்மானிக்கிறன். இதற்கிடையில் அவளுடைய மாஜி காதலனல் அவள் வஞ்சம் தீர்க்கப்படுகிருள். பழி வாங்க வந்தவன் தன் இளைய மனைவி பிணமாகக் கிடப்பதைக் காண்கிறன். மனைவி என்ற பாசம் அவளுடைய தகாத செயலையும் மறக்கச் செய்கிறது. 'என்ன தவறு செய்தாலும் என் மனைவி' என்று கதறுகிறன். மனித உள்ளம் படைத்தவனுக்கு உண்டாகக் கூடியதைச் சித்தரிக்கும் சிறந்த கட்டம்.

எஸ். பி. சாமி,
துறையூர்.

## மாமியார்

பல நாட்களுக்குப் பிறகு சங்கரன் தன் அருமைத்தம்பியையும் அவன் புது மனைவியையும் சந்தித்து அளவிலா மகிழ்ச்சி கொள்கிறன். அவர்கள் மேல் நாட்டு முறையில் ஸ்பூனும், போர்க்கும் கையாளுவதைக் கண்டு ஆத்திரம் மிகுந்து, "நூற்ளுண்டுகளாக நம்மை ஆண்டு வந்த பிற தேசத்தவரால் அழிக்க முடியாத, நம் பண்பாட்டை நாம் விட்டு விடுவது சரியல்ல' என போதிக்கும் கட்டமும், ஏற்கனவே மூத்த பிள்ளையின் பிரிவை நினைத்து வருந்தும் பெற்ருேர்களிடமிருந்து தன் தம்பி புது மனைவியின் மோகத்தில் பெற்ருேர்களைக் கை விட்டு வந்ததை நினைத்துப் பொருமி, தம்பியையும் அவன் மனைவி, அவர்களை மேல் நாட்டாராக்க முயன்றதையும் தள்ளாத வயதில் கல்வி போதித்ததையும் கண்டிக்கும் கட்டங்கள் மிகவும் ரஸிக்கத்தக்கதாயிருந்தன.

வி. கல்யாணகிருஷ்ணன்,
சென்னை.


ஆதரிப்பாரற்ற அனுதையாயிற்றே, வாழ வசதிபெற வந்தவளாயிற்றே என்ற சிந்தனை சிறிதும் இல்லாமல் மாமியாரும், நாத்தியும் சேர்ந்து மூத்தமருமகளான உமாவைக் கொடுமைப் படுத்துகிருர்கள்; படாதபாடு படுத்துகிருர்கள்.

ஒருநாள் நள்ளிரவில் உமாவின் மாமன் மகன் வெங்கடேசனும், அவள் விதவை நாத்தியும் (சுகுணு) கொல்லைப்புறத்தில் கொஞ்சிக் குலாவிக் களித்திருக்கிருர்கள். தற்செயலாக அதைக் கண்ணுற்ற உமா திடுக்கிட்டு 'அக்கா' என விளிக்கிருள். நடுங்கிப் போகிருள் சுகுணு. வெங்கடேசன் பிடிபட்ட திருடன்போல் விழிக்கிருன், இதற்குள் சந்தர்ப்பத்தைத் தனக்குச் சாதகமாக்கிக்கொண்டு அப்பாவையும், அம்மாவையும் அழைத்து விரைந்து வருகிருள் சுகுணு. நிரபராதியான உமாவின்மேல் அபாண்டமான பழி சுமத்தப்படுகிறது. 'அத்தை நான் ஒரு பாவமும் அறியாதவள். அந்தப் பழிகாரனை யோக்யமாக நடக்கும்படி சொன்னேன்' என்று உமா சொல்லி கண்ணீர் வடித்தும் அதைக் கவனியாது, கொஞ்சமும் கருணை காட்டாமல் மாமியாரும் நாத்தியும் சேர்ந்து அவளை வீட்டை விட்டு விரட்டி விடுகிருர்கள். பெற்ற குழந்தையை எடுத்தணைக்கச் சென்றபோது அவளை அறைக்கு வெளியே தள்ளி தாழிட்டுச் செல்கிருர்கள். இக்காட்சி நம் உள்ளத்தை உருக்குகிறது.

ஆர். கிருஷ்ணசாமி,
கோவை.

வேலைதேடி சென்னை வந்து, வேலையொன்றும் கிடைக்காமல் கைப்பொருளையும் இழந்து கடற்கரையில் அலைமோதும் மனத்துடன் நிற்கும் சங்கரின் முன் அவன் எதிர்கால வாழ்வு எப்படியிருக்கக்கூடும் என்பதை வினவுவதுபோல் தோன்றும் ஒரு கேள்விக் குறியை, வருங்காலம் செழிப்பாகத்தானிருக்கும் என்று இயற்கையே பதிலளிப்பது போல் கடல் அலைகள் அழித்து மறைத்துவிடும் காட்சி குறிப்பிடத்தக்கது.

கே. பி. பால்வண்ணம்,
திருநெல்வேலி.



ஜூபிடர் அழகியில் நடிக்கும் புதுமுகம் மோகன்.

## என் வீடு

என் வீடு தமிழ்ப்படத்தில் வீடு வாசல் இழந்து. தந்தையையும் பிரிந்து, வருந்தும் மூன்று குழந்தைகளையும் அணைத்தபடி அவர்கள் தாய் சாரதா தவிக்கின்றுள் 'அம்மா பசி, பசி' என்று பரிதவிக்கும் தன் சகோதரனையும், சகோதரியையும் மூத்த மகன் கோபி ஜாடையாக அருகே அழைத்து தண்ணியை மொண்டு கொடுத்து, குடிக்கச் சொல்லிப் பசிதீர்க்கும் படலம் உள்ளத்தை உருக்குகிறது.

சந்திரன்,
திருச்சி.

## பணம்

துரை என்ற வேலைக்காரன் வைத்தியர் கந்தசாமி விட்டிலிருக்கும் நல்லம்மாவிடம் தன் மனதிலுள்ளதை வெளியிடுகிருன். தன் வாழ்வில் ஒருமுறை தவறியதை அவன் வெளியிட்டபோது, நல்லம்மாள் தானும் அதேபோல் ஒருமுறை வாழ்வில் சறுக்கி விழுந்ததாகச் சொல்வதை அவன் வெறுப்புடன் கேட்பதுபோல் தன் கண்கள் மூலம் உணர்த்துகிருன்.

'அச்சமயம் ஆணுக்கு ஒரு நீதி; பெண்ணுக்கு ஒரு நீதியா?' என்று நல்லம்மா கேட்பது ஒவ்வொரு ஆண்மகனின் மனதையும் கூசச் செய்கிறது.

ஆனந்தன்,
தெஹிவலை–(சிலோன்).

வரதட்சிணையின் கொடுமைக்காக மாமனுராலும், வாழ்வெல்லாம் சந்தோஷமாக வாழ்வோம் என்று நம்பியிருந்த கணவனுலும் கைவிடப்பட்ட ஜீவா, நேராக தகப்பனுர் வீட்டுக்கு வருகிருள். மகளிடம் விஷயத்தைக் கேட்ட தகப்பனுர் 'ஐயோ! உன் வாழ்நாளெல்லாம் வீணுகி விட்டதே! வரதட்சணை கொடுக்க வழியுமில்லையே!' என்று நினைத்து டாக்டரும் ஜீவாவும் அழும்போது நம் கண்களிலும் நீர் தளும்புகிறது.

பி. சுப்பராயுலு,
திண்டுக்கல்.

குற்றத்தை யுணர்ந்து கண்ணீர் சிந்தி மன்னிப்புக்கோரும் சப்-இன்ஸ்பெக்டர் ஈஸ்வரன் கண்ணீரைக் கண்டு கலங்கி நிற்கும் ஜீவா மன்னிப்பளித்த மறு நிமிடமே கைத் துப்பாக்கியால் தன்னைச் சுட்டுக் கொண்டு கீழே விழுகின்ருன். ஈஸ்வரன் தனக்கு இன்னல் விளைவித்தவன் என்றுகூடப் பாராமல் அண்ணு என்று அலறிக்கொண்டு அவன்மேல் விழும் ஜீவாவின் சோகம் எல்லையை மீறுகிறது.

எஸ். ரஷீத்,
தென்காசி.

## நாம்

குமரனும் அவனுடைய தாயாரும் வயிற்றுப் பிழைப்பிற்காக, ஜமீன்தார் மலையப்பர் மனையிலே வேலைக்காரர்களாக இருக்கின்றனர். ஜமீன்தாருடைய தங்கை மீன வேலைக்காரன் குமரன்மேல் காதல் கொள்ளுகிருள். அவனும் அவளிடம் அன்பைச்செலுத்தினுன். அவர்கள் காதல் ஆரம்பத்தில் ஒரு சிறு செடியாக வளர்ந்து நாளடைவில் பெருஞ்செடியாக மாறி வருவதை உதாரணமாகக் காட்டியிருப்பது பழைய கருத்து.

கே. கே. ராஜன்,
சேலம்.

## பூங்கோதை

மலைவாசத்துக்கு வந்த ஆனந்தனைச் சந்திக்கும் அல்லி, பட்டணத்தில் அறிவு வளர்வதைக்கேட்டு வியப்படைந்து அவனிடம் "பட்டணத்து ஆளெல்லாம் லேசுபோலிருக்கே, பாபு நானும் உன்னோடே பட்டணத்துக்கு வந்துடறேன்" என்கிறாள். "நீயுமா, அங்கே வந்து என்ன செய்வே" என்கிறான் ஆனந்தன். "நானு! பூப்பறிப்பேன். செண்டு கட்டுவேன். ஒம் பெண்சாதி தலையிலே வைப்பேன். விளையாடுவேன்" என்கிறாள். "யார் தலையிலே?"—'ஒன் பெண்சாதி தலையிலே!'—"எனக்குக் கல்யாணமே ஆகல்லியே—" 'அப்ப நீயும் என்னைப்போலத்தானா? போனாபோவுது ஒரு கல்யாணம் பண்ணிக்கோ!"—'உனக்காக நான் கல்யாணம் பண்ணிக்கணுமா?"—என்று சொல்லும்போது அவளுடைய அறியாமையையும், கள்ளங்கபடமற்ற உள்ளத்தையும் கண்டு நமக்கு சிரிப்புதான் வருகிறது.

பழனி,
*பாண்டிச்சேரி.*

தன் காதலன் தன்னிடம் சொல்லிக்கொள்ளாமல், ஏமாற்றிவிட்டு தன் ஊருக்கு தன் மனைவியையும் குழந்தையையும் பார்க்க ஓடிவிட்டான் என்றும், தான் வஞ்சிக்கப்பட்ட தாயும் உணருகிறாள் பேதை அல்லி. தன்னால் தன் குடும்பத்திற்கு ஏற்பட்ட இந்த அவக்கேட்டுக்குத் தன்னைக் கத்தியால் குத்திக்கொன்று விடும்படி தந்தையின் கையில் கத்தியைக் கொடுத்து கோபம் அடங்குவதற்குள் தன்னைக்கொன்று விடச் சொல்லுகிறாள். பெற்ற பாசம், குடும்ப மானம் இரண்டுக்கும் இடையில் தவிக்கிறது தந்தையுள்ளம். யாரும் எதிர்பாராதபடி தானே கத்தியால் குத்திக்கொண்டு தற்கொலை செய்து கொள்ளுகிறான் தந்தை. இந்த எதிர்பாராத காட்சியை கண்ட அல்லி பிரமித்து கூப்பிட நா எழும்பாமல் 'கிறீச்'சிட்டுக்கொண்டு வெளியே ஓடிவரும் காட்சி உணர்ச்சியின் சிகரத்தை எட்டிப் பிடிப்பதாக இருக்கிறது.

ஆர். கோபாலன்,
*சென்னை.*

## மருமகள்

அமெரிக்காவிலிருந்து திரும்பும் குமாரை, ஆள் பழையபடி இருப்பதாக, சாந்தா கூறுகிறாள். அவள் கணவன் துரை தலையிடும்போது, அவள் இடைமறித்து, தாரா விஷயமாகக் கூறவே துரை, குமாரை மாடிக்குத் தள்ளிக் கொண்டு போய்விடுகிறான்.

கோணங்கி,
*காஞ்சிபுரம்.*




நடிகையின் மகன்: *நீ நடிச்ச படத்தை மாத்திரம் நான் பார்க்கக்கூடாதுங்கறயே! அது ஏம்மா?*

## ஸ்டூடியோ......

(14-ம் பக்கத்தொடர்ச்சி)

'ஆஸ்ப்ரோ' என்பது பிரசித்தி பெற்ற தலைவலி மாத்திரையின் பெயர்.

வாஹினிக்கு டெலிபோன் செய்து "இன்று என்ன படப்பிடிப்பு நடக்கிறது?" என்று ஒரு நாள் கேட்டேன்.

"ஆஸ்ப்ரோ ஸார்!" என்றார் அங்கிருந்தவர்.

ஆஸ்ப்ரோ தலைவலி மாத்திரையாயிற்றே! ஒரு வேளை சமீப சில தமிழ்ப் படங்கள் தலைவலியை உண்டு பண்ணி வருவதால், அதற்கு ஏற்ற வைத்தியமாக 'ஆஸ்ப்ரோ' என்ற தலைவலி நிவர்த்தி மாத்திரையின் பெயரைக் கொண்டே ஒரு படம் தயாராகி வருகிறது போலும் என்று நினைத்தேன் நான்.

"ஆஸ்ப்ரோவா? அப்படி ஒரு படம் தயாராகி வருகிறதா? யாருடையது அந்தப் படம்" என்று கேட்டேன். போனிலே சிரிக்கும் சப்தம் கேட்டது.

"நீங்க நினைக்கிறது போல் இது ஒரு புதுப்படமோ, அல்லது புதுப் படக்கம்பெனியோ இல்லை ஸார். அஸோஸியேட்ட் புரொட்யூஸர்ஸ் என்ற இரண்டு ஆங்கில வார்த்தைகளின் முதல் வார்த்தையில் இரண்டு எழுத்துக்களையும், இரண்டாவதில் மூன்றையும் சேர்த்து சுருக்கமாக 'ஆஸ்ப்ரோ' என்று சொல்லுகிறோம். விஷயம் உங்களுக்குத் தெரியாது போலும்!" என்று சொல்லி விட்டு சிரித்தார் அந்த டெலிபோன் ஆசாமி.

"நாசமாய்ப் போயிற்று! இதற்குத் தானா ஊர்பட்ட அமர்க்களம்!" என்று நினைத்துக் கொண்டு கிளம்பினேன்.

ஒரு தேயிலைக் கடை காட்சி அன்றைய தினம் படமாக்கப்பட்டு வந்தது. மற்றபடி விசேஷமாக இந்தக் காட்சியில் குறிப்பிடுவதற்கு எதுவுமில்லை.

கிரிஜா, சத்யநேசன், பாலய்யா முதலியோர் 'ஆஸ்ப்ரோ' படத்தில் நடித்து வருகின்றனர். ஜி. ஆர். ராவ் டைரக்ட் செய்து வரும் மலையாளம், தமிழ் இரு பாஷைப்படமான இது பாதியளவுக்கு வளர்ந்திருக்கிறதாம்.

* * *

"ஆரணியில் வறுமை தாளாது ஒரு குழந்தை விற்கப்பட்டது; குடியாத்தத்தில் மூன்றே ரூபாய்களுக்கு குழந்தை விலை போனது" போன்ற செய்திகளை நாம் தினசரிகளில் அன்றாடம் படிக்க நேராவிட்டாலும், அவ்வப்போது பார்வைக்குத் தட்டுப்பட்டு வருகின்றன என்பதை மறுக்க முடியாது.

இதை இங்கு எதற்குக் குறிப்பிட வந்தேனென்றால் சினிமாவுலகிலும் 'குழந்தைகள் விற்கும் படலம்' தற்போது ஆரம்பமாகி விட்டது.

'நமது நக்ஷத்திரங்களில் பெரும் பாலோருக்கு விவாகமே ஆக வில்லையே. குழந்தைகளுக்குப் போய் விட்டீரே!" என்று ஒரு குறும்பு நேயர் வம்புக்கிழுக்கிறார்.


சமீபகாலமாக நமது படங்களில் கோர்ட் ஸீன், ஆஸ்பத்திரிக்காட்சி, ஒரு கோயில் காட்சி போன்றவை தவறாமல் இடம் பெற்று வருகின்றன. இந்த 'ஸீரிஸி'ல் புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருப்பதுதான் 'பிள்ளைவிற்கும்' படலம்.

டைரக்டர் பிரஸாத் தயாரித்து வரும் பெற்ற மனம் படத்தில் இம்மாதிரியான ஒரு காட்சி வருகிறது.

ஒரு ஏழை தம்பதிகள். அவர்களுக்கு இரண்டு குழந்தைகள். மூத்தவன் மோகன், ஒரு சிறுவன், அடுத்தது ஒரு கைக்குழந்தை.

இக்குழந்தைகளின் தாயார் ஆஸ்பத்திரியில் படுத்திருக்கிறாள். அவளுக்குத் தேவையான மருந்துகளையும், ஆகாரங்களையும் வாங்கித் தருவதற்கோ, அல்லது ஆஸ்பத்திரிக்கான கட்டணத்தைச் செலுத்தி அவளை அழைத்து வருவதற்கோ, அவளது கணவனிடம் ஒரு செல்லாக் காசுகூடக் கிடையாது. இந்நிலையில் கைக்குழந்தையை விலைக்குக் கேட்கிறாள் வேலூரம்மா.

வேலூரம்மா ஒரு பெரிய பணக்காரி. குழந்தையில்லாத குறையை



'அவள்' படப்பிடிப்பில் ஒலிப்பதிவாளரும், மேக்-அப்மேனும், இதரரும.

தீர்க்க அவள் இப்படிச் செய்ய நினைக்கிருள். ''இத்தகைய கஷ்டத்தில் குழந்தையை வளர்க்க முடியாமல் திண்டாடுவதைக் காட்டிலும் குழந்தையை விற்றுவிடுவதே மேல்; குழந்தையும் கஷ்டப்படாமல் இருக்கும். எல்லாவற்றுக்கும் மேலாக ஆஸ்பத்திரிக்குத் தேவையான கட்டணங்களைச் செலுத்திவிட்டு மனைவியையும் அழைத்து வரலாம்'' என்ற எண்ணம் அவனிடம் துளிர்விடுகிறது. குழந்தையை வேலூரம்மாவுக்கு விற்று விடுகிருன், அந்தப் பணத்தைக்கொண்டு மனைவியை வீட்டுக்கு அழைத்து வருகிருன்.

வீட்டுக்கு வந்த அவள் தன் கைக்குழந்தை எங்கே என்று கேட்கிருள். விஷயத்தை அவளிடம் விவரமாகக் கூறுகிருன் கணவன்.

அவள் நாகப்பாம்பென சீறுகிருள். பெற்றமனம் பற்றி எறிகிறது. ''போ! உடனே எங்கிருந்தாகிலும், எப்பாடு பட்டாலும் பணம் தேடி என் குழந்தையை மீட்டுவா!'' என்று சொல்லி அவனைத் துரத்துகிருள்.

இதைத் தொடர்ந்துதான் நான் பார்த்த காட்சி வருகிறது.

பணத்திற்காக தான் வேலை செய்து வரும் முதலாளியிடம் வருகிருன் அவன். சிறிது பண உதவி செய்யும் படிக் கேட்கிருன்.

முதலாளிகள் என்ருல் கல்நெஞ்சு படைத்தவர்களாகத்தானே இருக்க வேண்டும் என்பது சினிமா நியதி!

இந்த முதலாளியும் அவனுக்கு உதவி புரிய மறுக்கிருர். அதற்குப் பதிலாக இரவு வேளையிலும் வேலை செய்யும்படியும், அப்படிச் செய்தால் அதற்குத் தனிக் கூலி கிடைக்கும் என்றும் சொல்லுகிருர்.

வேறு வழியில்லாத அவன் இரவு வேளையில் வேலை செய்யப் புறப்பட்டுப் போகிருன்.

அவன் செய்யப் போனது கட்டிட வேலை. படிக்காமலேயே அவன் செய்ய முடிந்த வேலை அதுதான்!

ஆனால் அவனது துரதிருஷ்டம் குறிப்பாக அவன் மனைவியினுடைய துரதிருஷ்டம் – இப்படியாகவா முடிய வேண்டும்? அந்த இரவு வேளையில் அவன் கொல்லத்து வேலை செய்து வரும்போது ஒரு பெரிய இரும்பு தூலம் அவன் மீது விழுகிறது. அவனது வாழ்க்கையை முடித்து விடுகிறது அது.

பெற்ற மனத்தில் வரும் ஒவ்வொரு காட்சியும் ஒரே உணர்ச்சிப் பிரவாகம். இதிலே மாண்டு போகும் அந்த ஏழையாக டைரக்டர் பிரஸாத் வருகிறார். அவரது மனைவி பாத்திரதாரி புஷ்பவல்லி.

மு. வரதராசனார் பெற்ற மனம் திரைக்கதையை எழுதியிருக்கிறார். இப்படம் தெலுங்கிலும் தயாராகி வருகிறது.

*　　*　　*

சென்ற மாதத்தில் ஸ்டாலின் பற்றிய செய்தி பெரிய பரபரப்பை உண்டுபண்ணியது. சோவியத் யூனியன் தலைவரான மார்ஷல் ஸ்டாலின் காலமான செய்தியைப் பற்றி நான் சொல்ல வரவில்லை. நாம் இருப்பது சினிமா உலகம்; இதிலே அரசியலையும் போட்டுக் குழப்புவானேன்?

'ஏன் படங்களில் மாத்திரம் அவை வருகின்றனவே?' என்று பழைய குறும்பு நேயர் மீண்டும் என்னைக் குத்தலாகக் கேட்கிறார்.

படங்களில் வந்தால் அதை கவனிக்க வேண்டியது சென்ஸார்களின் வேலை. அது சரி, நான் சொல்ல வந்ததைச் சொல்லி விடுகிறேன். நான் சொல்ல வந்ததும் ஒரு சென்ஸார் அதிகாரியைப் பற்றித்தான். சென்னை பிராந்திய தணிக்கை அதிகாரியான 'ஸ்டாலின்' ஸ்ரீநிவாஸனைப் பற்றித்தான்.

'ஸ்டாலின்' என்ற அடைமொழியினால் பிரசித்தி பெற்ற 'மணிக்கொடி' கே. ஸ்ரீநிவாஸன் சென்னையிலிருந்து கல்கத்தாவுக்கு மாற்றப்பட்டிருப்பது குறித்து அவருக்கு ஒரு பிரிவு உபசாரம் வாஹினியில் நடைபெற்றது.

இந்த வரவேற்பைப் பற்றி இந்தப் பகுதியில் வழக்கத்திற்கு மாறாகக் குறிப்பிடவேண்டிய அவசியம் என்ன என்று நீங்கள் நினைக்கலாம்! ஆனால் இந்த வரவேற்பைப் பார்க்கப் போனபோதுதானே நான் கோட்டைப் பிரவேசத்தை வாஹினியில் நடத்த முடிந்தது.

இந்தக் கோட்டை எந்தக் கோட்டை என்று தெரியுமா? சென்ற மாதத்தில் எனது ஸ்டுடியோ விஜயத்தின் போது வாஹினியின் திறந்த நிலப் பரப்பில் சந்திரஹாரம் படத்திற்காக ஒரு கோட்டை கட்டப்பட்டு வருகிறது என்று சொல்லியிருந்தேனே, அதே கோட்டைதான்!

ஆகாயத்துக்கும் பூமிக்குமாக — வான முகட்டை எட்டிப் பிடிக்கும் வகை



'ரோஹிணி'யில் ஒரு காட்சி.

'பெண்'
அஞ்சலிதேவி



யில்—பிரம்மாண்டமான அளவில் இந்தக் கோட்டை வாயில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

கோட்டை வாயிலின் இரு புறமும் குதிரைமீது ஆரோகணித்தவாறு சிப்பாய்கள் பலர் காவல் காத்து வந்தனர். அவர்கள் கையிலே ஈட்டிகள் இருந்தன. ஈட்டியின் கூரிய முனை 'பள பள'வென வெள்ளி போலமின்னிக் கொண்டிருந்தது.

கோட்டை வாயிலைத் தாண்டி ஏராளமான கடைகள் காணப்பட்டன. வளையல் கடைகள், மிட்டாய் கடைகள் இப்படியாகப் பல வகைப்பட்ட கடைகள் அங்கு காணப்பட்டன.

ஜனங்கள் சதாசர்வ காலமும் வந்துகொண்டும் போய்க் கொண்டுமிருந்தார்கள். ஒரே ஜனத் திரள்தான்!

எந்த தினத்திலும் காணப் படாத இந்த உத்வேகம் அன்று மக்களிடையே காணப்பட்டதற்கு காரணமென்ன? கோட்டை வாயில் வழக்கத்திற்கு மாருக அதிக சுறுசுறுப்புடன் காணப்பட்டது ஏன்?

அந்த நாட்டு ராஜாவுக்கு எல்லா சுக போகங்களும் இருந்தன. நாட்டை நல்ல வழியில் நடத்திச் செல்ல மதி மந்திரிகளின் துணை அவருக்கு இருந்தது; எதிரிப் படைகளை கதிகலங்க அடித்து சிதறிச் சின்னு பின்னமாக்க திறமை வாய்ந்த பயிற்சி பெற்ற படைகள் இருந்தன; அன்பிற் சிறந்த அழகிய மனைவி இருந்தாள்; நாட்டில் பஞ்சமில்லை; பயிர்கள் பெருகின. கலகமில்லை; கவலையற்று மக்கள் வாழ்ந்தனர்.


இருந்தும் இத்தகைய சூழ்நிலையிலும் அரசரின் மனதில் அமைதியில்லை; எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனைச் சூருவளி அவரை பேயைப் போல் பிடித்து உலுக்கியது.

இத்தனைக்கும் காரணம் இந்த ஒரே குறைதான். அரசனுக்கு குழந்தைகள் கிடையாது. எதிர்காலத்தில் நாட்டையாள அவர் சார்பில் ஒரு வாரிசு கிடையாது.

இதைக் குறித்து அரசர் கவலைப் படாத நாட்களில்லை; செய்யாத பிரார்த்தனைகள் இல்லை; கொடுக்காத தானங்களில்லை.

கடைசியில் அரசர் ஒரு யோகியைக் காண நேர்ந்தது. அவர் ஒரு மாம்பழத்தை அரசருக்குக் கொடுத்தார், மனைவியிடம் கொடுத்து புசிக்கச் சொல்லும்படியும், குழந்தைப்பேறு உண்டாகும் என்றும் கூறினர்.

அரசர் அந்த யோகியின் கட்டளையை சிரமேற் கொண்டார்.



'ஜெனேவா'வில் ஒலிப்பதிவாளர்.

விஜயா புரொடக்ஷன்ஸ் தயாரித்து வரும் சந்திரஹாரம் ஒரு பிரம்மாண்டமான தயாரிப்பு என்ருல் அது மிகையல்ல. தமிழ், தெலுங்கு இரு பாஷைகளிலும் தயாராகி வரும் இந்தப் படத்தை காமேஸ்வர ராவ் டைரக்ட் செய்து வருகிருர்.

என். டி. ராமராவ், எஸ். வி. ரங்கராவ், ஸ்ரீரஞ்சனி, சாவித்ரி முதலிய நக்ஷத்திர நடிகர்கள் இந்தப் படத்தில் நடித்து வருகின்றனர்.

அவரை வணங்கினுர். அவர் கொடுத்த மாம்பழத்தை பய பக்தியோடு வாங்கிச் சென்று தன் மனைவியிடம் கொடுத்தார். யோகி சொன்னதை ஒன்றுகூட விடாமல் அவளிடம் சொல்லி மாம்பழத்தைப் புசிக்கும்படி சொன்னுர்.

இறுதியில் அரசரது மனே வியாதிக்கு மருந்து கிடைக்கிறது. யோகியாரின் மாம்பழத்தால் அரசரது மனைவி கர்ப்பவதியாகி ஒரு பிள்ளைக் குழந்தையையும் பெறுகிருள். அரசருக்குத் தாங்க முடியாத சந்தோஷம். குருடனுக்கு கண் கிடைத்த விதத்தைப் போலத்தான!

அரசர் குழந்தையின் பெயரீட்டு வைபவத்தை ஒரு பெரிய விழாவாகவே கொண்டாடிவிட முடிவு கட்டி, அதன்படியே நாட்டு மக்களுக்கும் விளம்பரப் படுத்துகிருர். இந்தச் சம்பவத்தாலேயே அந்த பிரம்மாண்டமான கோட்டைவாயிலும், கிளர்ந்தெழுந்து வந்த ஜன சமுத்திரத்தின் முன் மிக மிக சிறிதாகிவிட்டது.

'சந்திரஹாரம்' என்ற விலை மதிப்பற்ற அணியைச் சுற்றி ஒரு சுவாரஸ்யமான கதை பின்னப்பட்டிருக்கிறதாம். அவர்களது பாதாள பைரவியைப் போலவே இதுவும் ஒரு சாகஸப் படமாக இருக்குமாம்.

பி. நாகிரெட்டி, சக்ரபாணி தயாரித்து வரும் 'சந்திரஹாரம்' முடிவடையும் தறுவாயிலிருக்கிறது. விரைவிலேயே வெள்ளித் திரைகளை அலங்கரிக்க இந்த சந்திரஹாரம் வந்துவிடும் என்று நினைக்கிறேன். எனது இந்த எண்ணத்தை, தயாராகி வரும் 'சந்திரஹாரம் விளம்பரப் போஸ்டர்கள்' ஊர்ஜிதம் செய்வதாக அமைந்துள்ளன.

* * *

"கழுகுக்கு மூக்கில் வியர்ப்பது போல் உங்கள் காமிராவுக்கும் ஏதாவது உணர்ச்சியுண்டோ!" என்று கேட்டுக் கொண்டே வாஹினி நண்பர் ஒருவர் என் முன் தோன்றினுர். நான் விஷயம் புரியாமல் திகைக்கவும்

''நடிகர்கள் யாவரும் இப்பொழுது தான் டிபன் சாப்பிடத் தயாராயிருக் கிறார்கள்! சொல்லி வைத்தாற்போல் நீங்களும் வந்துவிடவே, உங்கள் பங்கையும் பெற்றுக்கொள்ள வேண் டியதுதானே!'' என்று சொல்லிக் கொண்டே மேற்படி நண்பர் என்னை யும், நண்பரையும் டிபனுக்கு அழைத் துச் சென்றார். நக்ஷத்திரங்களுடன் நாங்களும் அமர்ந்தோம்.

யாவரும் அவரவர்கள் வயிற்றுப் பாட்டை சிரித்துக் கொம்மாள மடித் துக்கொண்டு கவனித்து வந்தபோது, என் காமிரா (தன் வயிற்றைத் தான் பிலிம் ரோலைச் சுற்றி நிரப்பியாய் விட்டதே, இனி தன் வேலையைக் கவனிப்போமென்று) தான் பாட் டிற்கு அரட்டை யடிக்கும் நக்ஷத்திரங் கள் ஒரு சிலரை தன் பூதக் கண் ணுடிக் கண்களால் பார்த்துப் பதிவு செய்து கொண்டு விட்டது. பி. கே. சரஸ்வதி, புஷ்பவல்லி, சாவித்திரி மூவரும் சிற்றுண்டி உண்பதை படம் பிடித்த காமிரா, மறுபுற மிருந்த ஸ்ரீராமமூர்த்தி, ராஜேந்திரனையும் சேர்த்து பிடித்துக் கொண்டது.

சிற்றுண்டி உண்ணும் படலம் முடிந் ததும் நண்பரும் நானும் காமிராவுடன் ஸெட்டுகளைக் காணச் சென்றோம். நண்பருக்கு ஷூட்டிங் பார்ப்பதில் கனகுஷி.

உதவி டைரக்டர் ஒருவர் எங்களை அழைத்துக் கொண்டு தங்கள் பட மான பெற்ற மனம் ஸெட்டுக்கு அழைத்துப் போனார். நோய்வாய்ப் பட்ட தாய், தன் இளைய குமாரனிடம் (தான் உயிருக்கு மன்றாடும் போது தான்) தன்னால் விலைக்கு விற்கப் பட்ட குழந்தை தான் பெற்றதே என் றும், அவனுடைய கூடப் பிறந்த சகோதரனே என்றும் சொல்லி பெற்ற பாசத்தை வெளிக்காட்டும் காட்சி அன்று படமாக்கப் பட்டுக் கொண்டிருந்தது.

தாயார் பாகத்தில் புஷ்பவல்லியும், இளைய குமாரனாக ஸ்ரீராமமூர்த்தியும் பெற்றமனத்தின் தெலுங்குப் பதிப் பில் நடித்துக் கொண்டிருந்தனர். தமிழ் கதாநாயகனான ராஜேந்திரன் தான் பேசவேண்டிய பாகத்திற்கான வசனத்தை, செய்யுள் வாத்தியாருக் குப் பயந்து செய்யுளை உருப்போடும் மாணவன் போல மனப்பாடம் செய்து கொண்டிருந்தார்.

'அத்தை மகள்' உருவாகிறாள் அடி சுடும் வெயிலிலே



இதற்கிடையில் நண்பரை ஒரு நிமிஷம் இருக்கச் சொல்லி விட்டு புஷ்பவல்லியுடன் பேசச் சென்ற நான் புஷ்பவல்லியின் விபரீதமான கேள்வி ஒன்றினால் தாக்குண்டேன். ஆனால் நான் சொன்ன பதிலைக் கேட்டு புஷ்பவல்லியும் திகைத்ததைக் கவனித்துக் கொண்ட நண்பர் எங்கள் வாக்குவாதத்தைப் பற்றிக் கேட்டு நச்சரித்தார்.

''ஸ்வாமி! 'பாவம் ஓரிடம், பழி யோரிடம்' என்பார்களே, அதைப் போல் வேறு ஒரு பத்திரிகை தான சாமர்த்தியமாகச் செய்து விட்டதாக எண்ணும் ஒரு அசட்டுத்தனத்திற்கு என்னைப் பொறுப்பாளியாக நினைத்து விட்டார் புஷபவல்லி; தவறை எடுத்துக் கூறவும்தான் அவர் மனம் மாறியது!' என்று சொல்லவும்தான் நண்பர் சமாதானமடைந்தார்.


''ஸைலன்ஸ், ஸைலன்ஸ் என்று சப்தம் வருகிறதே! அங்கே போகலாம் வாருங்கள்!'' என்று வந்த விஷயத்தில் என்னைவிட கவனமாக இருந்த நண்பர் எனக்கு முன்பாக 'வாழப் பிறந்தவள்' ஸெட்டுக்குள் நுழைந்து விட்டார்.

அழகாக அலங்கரிக்கப்பட்ட. நடன மேடையில் பொருத்தப்பட்டிருந்த 'பாரத தேசத்தின்' முன்பு 'எல்லோரும் புகழும் இந்திய நாடே' என்ற பாட்டுக்கு 'பாரத நாட்டில் வாழப் பிறந்தவள்' என்ற பெருமை தாங்காமல் அபிநயம் பிடித்துக் கொண்டிருந்தார் குசலகுமாரி. நடன ஆசிரியர் ஹீராலால் அவ்வப்போது மேடையேறி குசலகுமாரிக்கு அபிநயம் போதித்து வந்தார். டைரக்டர் ராமண்ணா வைத்த விழி வாங்காமல் ஸெட்டைக் கவனித்துக் கொண்டிருந்தார். அதற்குள் நண்பர் ''சரி, அடுத்தபடி எங்கே போகலாம்?'' என்றொரு கேள்வியைப் போட்டார்.

''நீர் என்ன மனிதரையா? மெஷின் மாதிரி ஓடிக்கொண்டேயிருப்பீர் போலிருக்கே!'' என்று அவர் அவ


## வீட்டிலே சினிமா புரொஜக்டர்

ஏ. ஸி. அல்லது டி. ஸி. மின்சாரத்தாலோ, டார்ச்சின் உதவியாலோ




இயங்கக் கூடியதும், 35. அல்லது 16 மி. மீ. பிலிம்களை உபயோகிக்கக் கூடியதுமான அழகிய புரொஜக்டர். 4 x 3 அடி அளவு திரையில் உங்கள் வீட்டிலேயே படங்களை (வர்ணங்களோடுகூட) பார்க்கலாம். ஸிலைடுகளையும் காட்டலாம். 3 அடி இனாம். விலை ரூ. 12-8-0. வி.பி.பி. சார்ஜ் 2-8-0. அதிகப்படி பிலிம் ஒரு கெஜம் அணா 8.

## தானாகவே இயங்கும் பிஸ்டல்

(ஆறு ரவை கொண்டது)

தானாகவே இயங்கும் குதிரையுடன் கூடிய அமெரிக்கன் மாடல் பிஸ்டல்.




அதன் சப்தமும், ஜ்வாலையும், புகையும் காட்டு மிருகங்களைக் கூட ஓட்டவல்லது. விபத்தில் உதவும் சிறந்த துணை.

விலை ரூ. 8-8-0. வி. பி. பி. செலவு ரூ. 1-12-0 தனி. 12 ரவைகள் இனாம். அதிகப்படி ரவைகள் டஜன் ஒன்றுக்கு விலை ரூபாய் 1-4-0. பிஸ்டல் பெட்டி ரூ. 2-8-0.

மலாயாவிலிருந்து வரும் ஆர்டர்களுடன் பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர்களையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

கடிதப்போக்குவரத்து ஆங்கிலத்தில்தான் இருக்கவேண்டும்.

**MILAP TRADING CO., (P. P. M.)**
Kanwariganj - Aligarh- U. P. (INDIA)



'அவள' படப்பிடிப்பிலே அகப்பட்டவர்கள்.

சரத்தை லேசாகக் கண்டித்தேன் நான்.

"நான் சாதாரண மனிதன்தான்! லாவண்யாவின் 'மனிதன்' என்று நினைத்து விட்டீரா' இனிமேல் தானே அந்த 'மனிதனை'ப் பார்க்கப் போகிறோம்!' என்று தன் பதிலுக்குள்ளேயே 'காமிராவுக்கு' அடுத்த படியாக ஒரு வேலையைக் கொடுத்து வைத்தார் நண்பர். இந்த மனிதனின் ஆசையைப் பூர்த்தி செய்வதற்காக அந்த 'மனிதனை'ப் பார்க்க நெப்டியூனை நோக்கிச் சென்றேன்.

மனிதன நாளொரு ஸெட்டும் பொழுதொரு ஷூட்டிங்குமாக வளர்ந்து விரைவில் திரையில் நடக்க தயாராகிக் கொண்டிருந்தான். ஆனால் நானும், நண்பரும் பார்த்த போது, நடனக் காட்சிதான் ஜோடிக்கப்பட்டிருந்தது. மனிதனை மனிதனாக நடத்த வேண்டிய பொறுப்பை மேற்கொண்ட டைரக்டர் கே ராம்நாத், அந்த மனிதனின் வாழ்வுக்கான சூழ்நிலையை அமைத்துத் தரும் ஆர்ட் டைரக்டர் சேகருக்காகக் காத்திருந்தார்.

'மனிதன்' நடந்து செல்லவேண்டிய கானகம் சேகரின் தயாரிப்பில உருவாகிக் கொண்டிருந்தது. இந்தக் கானகக் காட்சி என் கண்களையும் நண்பரின் கவனத்தையும் கவர்ந்த தோடன்றி, என் காமிராவின் கண்ணையும் கவர்ந்துவிடவே அது தன் கண்ணை ஒருமுறை சிமிட்டி திறந்தது. காமிரா கண்மூடிக் கண் திறந்த நேரம் அதனிடம் அந்த கானகக் காட்சி அழியா ஓவியமாய்ப் பதிந்து விட்டது. அக்காட்சியை உருவாக்கிய சேகரையும் காமிரா தன் பார்வையில் சேர்த்துக் கொண்டது.

அந்த ஸெட்டை விட்டுக் கிளம்பிக் கொண்டிருந்தபோது. கூட வந்த நண்பரைக் காணவில்லை. மனிதர் எங்கே போனார் என்று சுற்றுமுற்றும் பார்க்கையில் "ஸார்! இதோ இங்கே இருக்கிறேன்! வாருங்கள் வாருங்கள்! சீக்கிரமாய் வாருங்கள்" என்று வேறொரு ஸெட்டிலிருந்து கத்

தினர் ஸ்ரீமான் பிரண்ட். அவரை நெருங்கிச் சென்றதும் "ஸார்! மனோஹரா ஷூட்டிங் முடியப் போகிறது. அடுத்தது 'அழகி' யிருக்கிறதாம்." என்று சொல்லிக் கொண்டே, ஸ்டுடியோவில் நீண்ட நாள் அனுபவசாலி போல் அவரே என்னை 'மனோஹரா' செட்டுக்குள் அழைத்துச் சென்றார். படை யெடுப்பில் வெற்றிமாலை சூடித் திரும்பிய மனோஹர். தன் நாட்டுக்கு வந்ததும் தன் தாய் வீற்றிருக்க வேண்டிய சிம்மாசனத்தில், தாசி ஒருத்தி விற்றிருப்பதைக் கண்டு சீற்றம் கொள்ளுவதால, அவனை சமாதானப் படுத்தும்படி அவனது காதலியான விஜயாவைக் கேட்டுக் கொள்ளுகிருள் மனோஹரின் தாய். இந்தக் காக்ஷியை டைரக்டர் பிரஸாத் அன்று படமாக்கிக் கொண்டிருந்தார். சிவாஜி கணேசன் மனோஹர் பாத்திரமேற்று, தாயாக வந்த கண்ணும்பாவுடன் உணர்ச்சி ததும்பப் பேசினர். கண்ணும்பா. மனோஹரின் மனைவியாகப் போகும் விஜயாவான கிரிஜாவிடம். மனோஹரின் கோபத்தைத் தணிக்கும்படி வேண்டுகிருர். அத்துடன் அன்றைய காக்ஷி முடியவிருப்பதால் என் காமிரா அந்தக் காக்ஷியைப் படமாக்கிக் கொண்டது. மனோஹரா பாத்திரதாரிகள் சுயரூபமெடுக்கு முன்பாக அவர்கள் யாவரையும் ஒன்ருக நிறுத்தி அதைப் பார்த்து அனுபவிக்க என் காமிராவுககு ஆசை. ஆகவே அவர்கள் மேக்-அப் கலைப்பதற்குள் அவர்கள் முன் ஓடிச்சென்று 'குரூப்'பாக மனோஹரா பாத்திரதாரிகளைப் படமாக்கிக் கொண்டு விட்டது.

"அந்த 'அழகி'யை மட்டும்ஒருமுறை இந்தக் கண்களால் பார்த்து விட்டால் ..." என்று அபிலாஷை தீராமல் பேசினர் நண்பர். அதற்குள் இருவரும் மேக்-அப் ரூமை அடைந்துவிடவே உள்ளே நுழைந்தோம். 'அழகி' பாத்திரதாரிகள் தங்களை அழகுபடுத்திக் கொள்ளும் காட்சி பார்ப்பதற்கே தனி அழகாயிருந்தது. கணேசா மில் முதலாளியின் செல்வப் புதல்வனுக வந்து மில்லின் ஆபீஸ செக்ஷனில் வேலை பார்க்கும் பெண் டைப்பிஸ்டின் மோக வலையில் விழுந்து, அவள் அளிக்கப் போகும் தீராத நோயைப் பரிசாகப் பெற்றுக் கொள்ளத் தன்னை அழகு படுத்திக் கொண்டிருந்தார் எஸ். ஏ. நடராஜன். ஆக்க வேலைகள் நடக்கும்போதே அழித்தலும் அங்கு நடப்பதைப் பார்க்க என் காமிராவுக்குப் பொறுக்கவில்லை. ஒரு பக்கம் படைப்புத் தொழில் நடக்கும் போது மறுபக்கம் அழித்தலும் ஆவதை நிரூபிப்பது போல் எஸ். ஏ. நடராஜன் முகத்தில் சாயத்தை அப்பிக் கொண்டு கண்ணுடி முன் நிற்கும்போது அதே கண்ணுடியின முன் தோன்றி தன் 'மனோஹர்' வேஷத்தை சிவாஜி கணேசனுக மாற்றிக் கொண்டிருந்த காட்சியை என் காமிரா படமாக்கிக் கொள்ளத் தவறவில்லை.

மேக்-அப் போட்டுக் கொண்டு நடராஜன் ஸெட்டுக்குள் நுழைந்ததும், காமிரா கோணத்தை நிர்ணயிக்க ஆழ்ந்து ஆலோசித்துக் கொண்டிருந்தார் அழகி டைரக்டர் சுந்தர் ராவ் நட்கர்னி. 'க்ளிக்' என்றது என் காமிரா. "என் ஷாட் முடிவதற்குள் உங்கள் ஷாட் முடிந்து விட்டதே!" என்ருர் நட்கர்னி!


## GARDEN FOR SALE

In the suburbs of MADRAS about six furlongs from Poonamallee High Road on one side & Kodambakkam Arcot Road on the other: fully fenced SIXTEEN ACRES; with latest pucca terraced house built at a cost of Rs. 10,000/-; hundreds of yielding mango, coconut trees, etc.: four spring wells; paddy, ragi vegetable lands; First offer above Rs. 27,500/- plus cost of sale gets it

(Only one and a half miles from City limits)

Box No. 101

c/o "PESUM PADAM" MADRAS-14.

## ராமராவ்.........

(25-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்றைய தென்னிந்திய பட வுலகின் அதிர்ஷ்டசாலி டைரக்டராகி விட்ட பிரசாத், அந்தக் காலத்திலே வெறும் பிரசாதாக இருந்தபோது, சாரதி பிலிம்ஸாரின் 'ஸ்ரீமதி' என்ற படத்திற்கான நடிகர்களைத் தேர்ந்தெடுக்கச் சுற்றுப் பிரயாணத்திற்குக் கிளம்பினர். இந்தக் காலத்திலே நடிகர்களில் பலரும் சிபாரிசு மூலமோ, நேரில் சென்றோ, முதலாளி டைரக்டர்களிடம் சந்தர்ப்பம் கொடுக்கும்படி பிராணனை வாங்குவதால் இந்த தேர்தல்களுக்கு இப்போது அவசியமே ஏற்படுவதில்லை! பிரசாத் தனது பிரயாணத்தின் போது விஜயவாடாவில் நவஜோதி அமெச்சூர் ஆர்ட்ஸ் சபைக்குச் சென்றார்.

சபையின் வரலாற்றிலே பிரதான புருஷராக விளங்கியவர் மணியம் என்பவர். அந்த சபைக்காக அவர் பலவிதத்திலும் பாடுபட்டு வந்தார். அவர் பிரசாதிற்கு நெருங்கிய நண்பருங்கூட. பிரசாத் மணியத்திடம் சென்றார். மணியம் தனது நண்பர் பிரசாதின் விஜய நோக்கத்தை யறிந்ததும் ராமராவை அவருக்குத் தகுந்த முறையில் அறிமுகம் செய்து வைத்தார். பிரசாத் ராமராவை மேலும் கீழும் பார்த்தார். ஐந்தடி இரண்டு அங்குல உயரம்; வசீகரமான தோற்றம்; நூற்றிருபது பவுண்டு எடை; ஆஜானுபாகுவான—உடல் கட்டு மிகுந்த ஆசாமி. ராமர் வேஷத்திற்கு—இல்லையில்லை; 'ஸ்ரீமதி' யின் பிரதான புருஷனாக நடிக்கத் தகுதியானவர்தான் என்று தீர்மானம் செய்தார். அதற்குப் பிறகு அவர் மேலும் நடிகர் தேர்தலில் ஈடுபட்டாரா இல்லையா என்பது எனக்கு தெரியாது; பிறகு அவரிடமிருந்து எந்தவிதத் தகவலும் ஸ்ரீமதி சம்பந்தமாக இல்லை என்பதுதான் உண்மை.

தேர்தல் பிரயாணம் முடிந்து ஊருக்குத் திரும்பினர் பிரசாத். அவர் யோசனை வேறு விதமாக திரும்பியது. 'நாம் ராமராவைக் கண்டது நமது மூக்குக கண்ணாடியுடன் தானே, இரண்டு கண்களால் கண்டு மதிப்பிடுவதை நான்கு கண்களால் பார்த்ததால் ராமராவின் திறமையை அநியாயமாக இரண்டு மடங்கு மதிப்பிட்டுவிட்டோமோ,' என்று நினைத்து விட்டார் போலும். ராமராவுக்குக் கடிதமே எழுதவில்லை. இதற்கு அவர் மீது முழுக்க முழுக்க குற்றம் சொல்ல முடியாது. படவுலகில் சர்வசகஜமான விஷயமல்லவா இது?

அனேகமாக மக்களுக்கு ஒருவித குணமுண்டு. அதாவது அகாரணமாகத் தாங்கள் ஏமாற்றமடையும்படி ஏதாவது நேர்ந்து விட்டால் அதை அவர்களால் சகிக்க முடியாது. ஒருவர் சினிமாவுக்கு அழைத்துச் செல்வதாகத் தன் நண்பர் ஒருவரிடம் கூறுவார். அந்த நண்பர் தன் பணத்தில் சினிமா பார்க்கக்கூடாதென்ற விரதம் கொண்டவராக இருப்பார்! படங்களுக்குப் போயாக வேண்டும் என்றும் அவர் ஆசைப்படுபவரல்ல; அந்த மனுஷனைப் போய் ஆசையைக் கிளறி விட்டுவிட்ட முதல்வர் சந்தர்ப்பவசத்தால் அவரைப் படத்திற்கு அழைத்துச் செல்ல முடியாதபடி நேர்ந்துவிடும். அதோடு அது பற்றி—தான் இயலாத நிலையிலிருப்பதைச் சொல்லவும் முடியாதபடி அவருக்கு ஏதாவது வேலை வந்துவிடும். ஆசையோடு காத்திருக்கும் நண்பர் அவதிப்படுவார். 'மனுஷன் நம்மை ஆசை காட்டி மோசம் செய்து விட்டான்' அப்படி இப்படி என்று பொருமுவார். அதுபற்றி தெரிந்தவர்கள் அவரைக் கேலி செய்வார்கள். கிணற்றில் கல் போட்ட மாதிரி நண்பர் இருப்பதற்குக் காரணம் புரியாமல் திகைப்பார் ஓசியில் படத்திற்குப் போக ஆசைப்பட்டவர்!

டைரக்டர் பிரசாதும் கிணற்றிலே கல்லைப் போட்டார். அவரிடமிருந்து தகவலே இல்லாததால் ஆசையுடனிருந்த ராமராவ் மனமுடைந்து போய்விட்டார். அவர் தன்னையறியாமலே அரசாங்கத்திற்குப் போட்டிருந்த உத்தியோக விண்ணப்பத்துக்குப் பதில் கிடைத்தது. தபால்காரன் தனக்குத் தபால் வந்திருப்பதாகக் கூறியபோது அது பிரசாதிடமிருந்துவந்திருக்கும்என்று ஆவலோடு வாங்கியிருப்பார். ஆனல் சப்ரிஜிஸ்தாராக நியமிக்கப்பட்டிருப்பதாக அரசாங்க முத்திரையுடன் வந்த ஆர்டர் கூறியது. 'சரி, படித்துப்

பட்டம் பெற்றோம். உத்தியோகம் கிடைத்திருக்கிறது; உதறித் தள்ளுவானேன்' என்று நினைத்து ஏற்றுக் கொண்டார்.

யாராவது, யாருக்காவது, எதையாவது, எதற்காகவாவது தானம் செய்திருப்பான். அது சப்ரிஜிஸ்திரார் ராமராவிடம் வரும். படத்தில் சந்தர்ப்பம் கிடைக்கவில்லையே என்ற ஆத்திரத்தில் அழுத்தி முத்திரை குத்திக் கையெழுத்திட்டு அனுப்புவார்! கிரயம், விக்கிரயம், அடமானம், விவகாரம் எல்லாம் சப்ரிஜிஸ்தார் ராமராவிடம்தான்! எல்லா விஷயத்தையும் முத்திரை குத்தி கையெழுத்திடும் சப்ரிஜிஸ்திரார் ராமராவுக்குச் சினிமா ராமராவாக வேண்டிய காலம் வந்துவிட்டது.


ரூ. 5க்கு
15 ஜுவெல் கைக்கடிகாரம்



ரூ. 5-க்கு ஒரு பவுண்டன் பேனவும், 15 ஜுவெல் கைக்கடிகாரமும் அடையலாம். அழகுக்கும், உறுதிக்கும் 15 வருஷ உத்தரவாதம்.

AMERiCAN SWISS
WATCH SUPPLIER

Putli Ghar (P.P.M.) Amritsar.

ரூ. 5க்கு ஒரு ரேடியோ

மின்சாரமோ, பாட்டரியோ இல்லாமல், ஸ்பஷ்டமான, இனிய நாதத்தைக் கொடுக்கும். எமது புதிய திட்டத்தை பிரபலப்படுத்தவே இவ்விதம் கொடுக்கிறோம். குறைந்த அளவே ஸ்டாக் உள்ளது. ஏமாற்றமடைவதைத் தவிர்க்க உடனே விண்ணப்பித்துக் கொள்ளவும்.

AMERICAN CORPORATION

P. B. No. 86, (P. P. M.) AMRITSAR


பிரசாத் ராமராவுக்குக் கடிதம் எழுதினார், எதிர்பார்த்த போது வராத கடிதம். இன்று வந்தது. அந்தக் கடிதமும் சொந்தக் கடிதம் என்று நினைக்காமல் சப்ரிஜிஸ்திரார் முத்திரை குத்தி விட்டிருக்கலாம். யார் கண்டார்கள்! அவர் உத்தியோகம் ஏற்று இருபத்தியோரு நாட்கள்—மூன்று வாரங்களே ஆகியிருந்தன. சிலர் சொல்வது போல் 'காயமான (பர்மனண்ட் என்று சொல்லுவார்கள்!) கவர்ன்மெண்ட் உத்தியோகம்; இதைவிட்டு விடுவதா? தன் கல்வியறிவுக் கண் கொண்டு எதிர்காலத்தைப் பார்த்தார் ராமராவ். உடனே ராஜினாமா கடிதத்தை எழுதி அனுப்பி விட்டார். இது நடந்தது 1948-ம் வருஷம் ஜனவரி மாதத்தில். ராமராவ் தன் மனச்சாட்சியின் விருப்பப்படி—அன்புக் கட்டளைப்படி உத்தியோகத்தை மகிழ்ச்சியுடன் ராஜினாமாச் செய்து விட்டார். எதிர்கால வாழ்க்கையைப் பற்றிய அவரது நினைவு—கனவு என்று வேண்டுமானாலும் கொள்ளுங்கள்—பலித்து விட்டது. பட உலகின் முக்கிய கதாநாயகர்கள் ஜாபிதாவில் சுலபமாக ராமராவுக்கு இடம் கிடைத்து விட்டது.

சோபனசலா ஸ்டுடியோவில் எம். ஆர். ஏ. புரொடக்ஷன்ஸார் 'மனதேசம்' தெலுங்குப் படத்தைத் தயாரித்து வந்தனர். பிரசாத் அந்தப் படத்தில் நடிப்பதற்கு ராமராவை வரவழைத்தார். 'பிரசாத் நம்மை மறக்கவில்லை. பல நாளுக்கு முன்பு சொன்னதை இன்று செயல வடிவில் காட்டியிருக்கிறார். ஆகையால் நம் எதிர்காலத்திற்கு அவரை நிச்சயம் நம்பலாம்' என்ற நம்பிக்கையும் ராமராவின் ராஜினாமாவுக்கு ஒரு காரணமாக இருந்திருக்கலாம். சென்னை வந்து சேர்ந்த ராமாராவுக்கு 'மனதேச'த்தில் சப் இன்ஸ்பெக்டர் உத்தியோகம் கிடைத்தது. சப்ரிஜிஸ்தார் உத்தியோகத்தைவிட, இந்த உலகில் கிடைத்த உத்தியோகத்தின் மூலம் நல்ல வருமானம் வந்தது. சப்இன்ஸ்பெக்டர் ராமராவின் முகவெட்டும் நடிப்புத் திறமையும் அவருக்குப் பட உலகில் நிறைய சந்தர்ப்பங்களைப் பெற்றுத்தர ஆரம்பித்து விட்டன.

ஆந்திரர்களிடம் ஒரு அபாரமான சக்தி உண்டு; கட்டுப்பாடு உண்டு ஆந்திர நாட்டிலிருந்து ஒருவர் ஏதாவது காரியமாகச் சென்னை வந்துவிட்டாலும் தங்கள் நாட்டுக்காரர்களை எக்காரணம் கொண்டும் விட்டுக் கொடுக்க மாட்டார்கள். ஏதாவது ஒருவகையில் அந்த மனிதருக்கு உதவி செய்யத் தவறமாட்டார்கள். பட உலகிலும் இதே கொள்கைதான். ஆந்திரத்திலிருந்து சென்னைக்கு இறக்குமதியாகும் எந்த கலைஞருக்கும் சென்னை ஆந்திரப் பட உலகம் நல்ல வரவேற்பளித்து உற்சாக மூட்டி ஆதரிக்கும் அவர்களை நமது தமிழ்ப்பட முதலாளிகளும், கட்டுப்பாடில்லாத காரணத்தால், அமோகமாக வரவேற்பார்கள். தமிழ்க் கலைஞர்களை, தங்களது தெலுங்கு. தமிழ்ப் படங்களுக்காக— ஏன், தமிழ்ப் பதிப்புக்கு மட்டும்கூட ஏற்பாடு செய்யமாட்டார்கள் ஆந்திர பட முதலாளிகள். ஆனால் விழுந்து விழுந்து ஆந்திர கலைஞர்களையே தமிழ்ப் படங்களுக்கு ஏற்பாடு செய்வார்கள் தமிழ்ப்பட முதலாளிகள். அந்தக் கட்டுப்பாடும் ஒற்றுமையும். இருந்ததனால் தான் சாகும்வரை உண்ணாவிரத மிருந்த பொட்டி ஸ்ரீராமுலுவை மரணமடையும் வரை தடுக்க முயற்சிக்க விடவில்லை. ஆந்திரர்களில் ஒருவர் கட்டுப்பாடாக இருக்க ஆரம்பித்தால், நல்லதானாலும் கெட்டதானாலும் புகுந்து தடுக்க மாட்டார்கள்.

சென்னை மனதே என்று கூறுவதற்காகச் சென்னைக்கு வரவில்லை. ராமராவ் 'மனதேசம்' படத்தில் நடிக்கத்தான் வந்தார். 'மனதேச'மே சென்னையில்தான் உற்பத்தியாகும்போது ஆந்திரத்தில் நமக்கு என்ன வேலை என்று நினைத்தும் கிளம்பி வந்திருக்கலாம். முதல் படம் மனதேசத்தில் ஒரு உபபாத்திரத்தில் நடித்த ராமராவுக்கு, அடுத்த படத்திலேயே பிரதம பாகத்தில் நடிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது.

சோபனாசலா பிக்சர்ஸாரின் 'பல்லட்டூரி பில்லா' தெலுங்கு படத்தில் கதாநாயகனாக நடித்தார் ராமராவ். பி. ஏ. சுப்பராவ் இந்தப் படத்தை டைரக்ட் செய்தார். ராமராவ். அதிலே தனது திறமையை நன்கு வெளிப்படுத்தினார். அது கிராமப் பெண் எனற பெயரில் தமிழிலும் வெளியிடப்பட்டது. சாதனா பிலிம்ஸார் தெலுங்கு சம்சாரம்' படத்தை தயாரிக்க ஆரம்பித்தபோது கதாநாயகன் கோபுவாக நடிக்க ராமராவ் ஏற்பாடு செய்யப்பட்டார்.

கோபு ஒரு குடும்பி. சம்சார வாழ்க்கை இன்பமயமானது என்று கனவு கண்டவன். அந்த அமைதியான சாகரத்தில் மாமி, நாத்தி என்ற கோரப்புயல் வீசி ஓடத்தைக் கவிழ்த்து விடும்போது, மனமுடைந்து வீட்டை விட்டு வெளியேறி அல்லல் படுகிறான். அல்லலுறும் அவன் கடைசியில் புயல் ஓய்ந்த பின் நீந்திக் கரை (குடும்பத்

*Manufacturers of* **HIGH CLASS DRINKS**

★

*Enquiries for supply of drinks in*

Parties, Marriage functions, etc., solicited.

**GEMINI SODA FACTORY**

REGD TRADE MARK

**54, Jani Jankhan Road, Royapettah, MADRAS - 14.**

அரிய நாவல்! படிக்கப்படிக்கத் திகட்டாதது!




தனிப்பிரதி வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

தபால் செலவு தனி.

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை.
25% கமிஷன் உண்டு.

## ஸ்ரீராம நிலையம்

30, ஆறுமுகம் தெரு,

ஜி. டி., சென்னை — 1




துடன்) சேருகிறுன். இந்த ஒரு குணசித்திர பாகத்தில் ராமராவ் மிகவும் நன்ருக நடித்து ரஸிகர்களின் ஏகோபித்த பாராட்டுதலையும் அபி மானத்தையும் பெற்று விட்டார். தான் கட்டிய தாலியை மனைவி கழற்றிக் கொடுக்கும் போது, தாங்க முடியாத வேதனையுடன் வாங்கும் போதும், உத்தியோகம் போனபின், வீட்டிற்கு ஓடி வந்து பணத்தைக் காணுமல் வெளியேறும் போதும் அல்லலுற்ற பின் மனைவியைக் கண்டு உணர்ச்சி வசப்படும் போதும் ராமராவின் நடிப்பு சிறப்பாக இருந் தது. அந்தப் படம் பிரசாத் டைரக் ஷனில் மகத்தான வெற்றி கண்டது. ராமராவுடன் நாகேஸ்வரராவ், லக்ஷ்மிராஜ்யம், ரேலங்கி, புஷ்பலதா, சுரபி பாலசரஸ்வதி ஆகியோர் சம் சாரத்தில் நடித்தனர். அந்தப் படத் தில் நடித்த அத்தனை பேரும் ரஸிகர் களுக்கு நன்கு அறிமுகமாயினர்.

'மாயா ரம்பா' விலும் ராமராவ் நடித் தார். ரகுராமய்யா கதாநாயகனுகவும் அஞ்சலிதேவி கதாநாயகியாகவும் நடித்த அந்தப் படத்தில் ராமராவ் இரண்டாவது கதாநாயகனுக கன கச்சிதமாக நடித்தார். டி. பி. சுந்தரம் டைரக்ட் செய்த இந்தப் படம் தோல்வியுற்றுலும் ராமராவின் நடிப்பு தரமாகத் தான் இருந்தது. தமிழிலும் இதே படம் வெளியிடப்பட்டது.

விஜயா புரொடக்ஷன்ஸார் தங களது முதல் முயற்சியாக 'சாவுகார்' தெலுங்கு படத்தைத் தயாரித்தனர். வாஹினியின் நிர்வாகம் அவர்கள் கைக்குவந்த பின் சாவுகாரும் தயா ராகியது. சாவுகார் அவர்கள் எதிர்பார்த்ததை விடப் பிரமாதமாக அமைந்து விட்டது. விஜயாவின் திக் விஜயமும் பட உலகில் ஆரம்பமாகி விட்டது. ராமராவ், இன்று 'சாவுகார்' ஜானகியாகி விட்ட எஸ். ஜானகி, டாக்டர் சுப்பாராவ் முதலியோர் நடித்த இந்தப் படம் பிரசாத் டைரக் ஷனில் தயாரிக்கப்பட்டது. சாவுகார் கண்ட வெற்றியைப் பார்த்துத்தான் சாதன பிலிம்ஸார் சம்சாரத்தை பிரசாத் டைரக்ஷனில் தயாரித்தனர் என்பது குறிப்பிடத் தக்கது.

ராமராவின் திறமையையும் முக வெட்டையும் நன்கு பயன்படுத்திக்



தம்பியோடு

கொள்ள, வெற்றியின் ரகசியம் தெரிந்த விஜயாவினர். தவறவில்லை. அவர்களது பிரம்மாண்டமான தயாரிப்பான 'பாதாள பைரவி'யில் ராமராவ் கதாநாயகன் தோட்ட ராமனாகத் தோன்றி பிரமாதமாக நடித்தார். பாதாள பைரவி ஆந்திர, தமிழ்நாடுகளில் அதுவரை கண்டிராத அளவிலே வசூலில் புரட்சியைக்கண்ட படமாகும். தமிழ்: தெலுங்கு தவிர ஹிந்தியலும் இது தயாரிக்கப்பட்டு வடக்கே சுமாரான பெயரைப் பெற்றது. ராமராவ், எஸ். வி ரங்கராவ், ரேலங்கி, கே. மாலதி முதலியோர் நடித்த இந்தப் படத்தை பிரபல டைரக்டர் கே. வி. ரெட்டி டைரக்ட் செய்தார்.

வாஹினி பிக்சர்ஸாரின் தயாரிப்பான 'மல்லீஸ்வரி'யில் ராமராவ் கதாநாயகனாகவும் பானுமதி கதாநாயகியாகவும் நடித்தார்கள். இருவரும் அற்புதமாக நடித்தனர். மிகுந்த திறமை பெற்ற பி என். ரெட்டி அவர்கள் மல்லீஸ்வரியை மகத்தான படமாகத் தயாரித்திருந்தார். தமிழ் நாட்டிலே தமிழ் விளக்கத்துடன் அந்தப் படம் ஓடியது பாதாள பைரவியிலிருந்து ராமராவின ஸ்தானம் உயர்ந்து நக்ஷத்திர நடிகராக அவர் கருதப்பட்டார் அதற்கு முற்றிலும் தகுதியுடையவராகவும் தன்னை ஆக்கிக்கொள்ள, தன் நடிப்புத் திறமைக்கு மெருகிட்டுக் கொண்டார்.

பாதாள பைரவியின் வெற்றியைத் தொடர்ந்து விஜயா புரொடக்ஷன்ஸார் தங்களது மூன்ருவது தயாரிப்பான 'கல்யாணம் பண்ணிப்பா'ரில் கதாநாயகனாக ராமராவை நடிக்கச் செய்தனர் பைத்தியமாக நடிக்கும் போது ஓரளவு 'ஓவர்' என்று சொல்லும்படியிருந்தாலும் மொத்தத்தில் தரமாகவே நடித்தார். ராமராவுடன் ஜி. வரலக்ஷ்மி, எஸ். வி. ரங்கராவ், சாவித்திரி முதலியோரும் நடித்தனர், பிரசாத் டைரக்ஷனில் தயாரான இந்தப் படம் 'பெள்ளிசேஸி சூடு' என்ற பெயரில் தெலுங்கிலும் தயாரிக்கப்பட்டு ஆந்திராவிலும் வெளியிடப்பட்டது. சென்ற வருஷ வெளியீடுகளிலேயே 'கல்யாணம் பண்ணிப்பா'ரும் 'பராசக்தி'யும்தான் அதிக வசூல்தந்த—அதிக நாள் ஓடிய படங்கள் எனபது குறிப்பிடத்தக்கது.

பீபிள்ஸ் ஆர்ட் புரொடக்ஷன்ஸாரின் 'பல்லட்டூரு' தெலுங்கு படத்தில் ராமராவ் பிரதமபாகத்தில் தோன்றி நடித்தார் ஆந்திரத்தில இது சுமாரான வெற்றி கண்டது.

சம்சாரத்தின் மூலம் புகழ் பெற்ற ஜோடியான ராமராவ்–லக்ஷ்மிராஜ்யம் இருவரும் மீண்டும் 'தாஸி' மூலம் அதை ஸ்தாபித்தனர். லக்ஷ்மிராஜ்யத்தின் சொந்தக் கம்பெனியான ராஜ்யம பிக்சர்ஸின் முதல் தயாரிப்பு 'தாஸி' தெலுங்குப் படம். பெல் பிக்சர்ஸார் அதை 'வேலைக்காரி மகள்' என்ற பெயரில் தமிழில் வெளியிட்டனர். ஜட்கா ஆறுமுகமாக வரும் ராமராவ் ஒரு அசல் ஜட்காவாலாவாகவே மாறிவிட்டார் பீடியுடன், தொப்புளுக்குக் கீழ் துணியுடுத்தி நிற்கும் ஆறுமுகம், மனைவியைச் சந்தேகித்து துரத்தும் போது அவன் அறியாமையைக்கண்டு வருந்துகிறோம். இரண்டாம் மனைவியிடம் சந்தோஷமாக இருக்கவிடாத மகன் சுப்பனிடம் பாட்டுபாடித் தூங்கச் செய்யும் போதும் மனைவி ஓடிவிட்டபின், ஆண்டியாகிவிடும் அவன் அவள் கொலை செய்யப்பட்டது கண்டு கதறும்போதும், கோர்ட்டில் உண்மையைக் கூறும்போதும், கடைசியில் மனைவியைக்கண்டு உணர்ச்சி வசப்படும் போதும்—குறிப்பாக சம்பந்திகளிடம் ஜட்கா ஆறுமுகம் என்று தன்னை அறிமுகப் படுத்திக்கொள்ளும்போதும், அந்தப் பாத்திரத்தோடு ஐக்கியமாகிவிட்ட ராமராவிடம் நமக்குத் தனிக்கௌரவம் ஏற்படுகிறது.

ராமராவ் நடித்துக் கடைசியாக வெளிவந்த படம், கிருஷ்ணபிக்சாஸின் 'மருமகள்' அவருக்கு அந்தப் படத்தில் போதிய சந்தர்ப்பங்கள் அளிக்கப்படவில்லை. இருந்தாலும் கடைசியில் பெற்ருேரின் மூலம் தன் மனைவி மகவுபெற்று இலுப்பையூரில் (தெலுங்கில் சூரன்பேடு என்று ஞாபகம்) இருப்பதாக அறிந்து கிளம்பும் போதும், கார் விபத்துக்குள்ளாகி மயக்கமுற்றுக் கிடந்து, தெளிந்தபின் 'உஷா உஷா' என்று கதறி ஓடும் போதும் திறமையை வெளிப்படுத்தும் வகையில் நடித்திருக்கிருர் ராமராவ். மருமகளில் லலிதா, பத்மினி, எஸ் டி. சுப்புலக்ஷ்மி, ஸி. டி. ராஜகாந்தம், சுரபி பாலசரஸ்வதி, என். டி. ராமராவ், எஸ் வி. சகஸ்ரநாமம், டி. பாலசுப்ரமணியம், பி. ஆர். பந்துலு லக்ஷ்மிபிரபா, சரோஜா, டி. ஆர். ராமச்சந்திரன், வி. கே. ராமசாமி (நடிகர் ஜாபிதா போதுமா?) முதலிய நக்ஷத்திரக் குவியல் நடித்தது. யோகானந்தம் டைரக்ட் செய்த இப்படம் தெலுங்கிலும 'அம்மலக்கலு' என்ற பெயரில் வெளியிடப் பட்டது.

தற்போது விஜயாவின் பிரம்மாண்ட தயாரிப்பான 'சந்திரஹாரம்' இருமொழிப் படத்தில் பிரதம பாகத்தில் நடிக்கிருர் ராமராவ். காமேஸ்வர ராவ் டைரக்ட் செய்யும் இப்படத்தில் ராமராவுடன் ஜூனியர் ஸ்ரீரஞ்சனி, சாவித்திரி, எஸ். வி. ரங்கராவ் முதலியோர் நடிக்கின்றனர். பானுமதியின சொந்தப் படமான சண்டிராணி முப்பாஷைப் படத்திலும் ராமராவ் நடிக்கிருர். பானுமதி அவருடன் பிரதம பாகத்தில் தோன்றுகிருர். ஏவி. எம். 'பெண்' தெலுங்குப் பதிப்பில் மட்டும் ராமராவ் நடிக்கிருர். ரோஹிணியின் புதுப் படத்திலும் நடிக்க ஒப்பந்தமாகி யிருக்கிருர் ராமராவ்.

ராமராவுடன் பிறந்தவர் ஒரே ஒரு தம்பிதான். திருவிக்ரம ராவ் என்ற அவரும் என். டி. ராமராவ் என்றே சுருக்கமாக வைத்துக் கொண்டிருப்பதால் அவரை சின்ன ராமராவ் என்றும் ராமராவை பெரிய ராமராவ் என்றும் அழைப்பார்கள். ராமராவ் 1942-ம் வருஷம் மே மாதம் உலகப் பிரளயமான இரண்டாவது மகா யுத்தத்தின்போது நெம்மகூரில், தாய்



தன் முதலாவது குழந்தையுடன்

மாமன் மகள் பஸவராமதாரகம் என்பவரை கொட்டு மேளத்துடன் மணந்து கொண்டார். மனுஷனுக்கு என்ன சுயநலம் பாருங்கள்! நெம்மகூரில் அவரது தாய் மாமனுன செஞ்சய்யா கிராம மணியமாதலால் கல்யாணம் ஜாம் ஜாம் என்று நடந்தது. தற்போது ராமராவ் தம்பதிகளுக்கு வாரிசுகளாக மூன்று குழந்தைகள் இருக்கின்றனர். ராமகிருஷ்ண என்ற முதல் பையனுக்கு ஏழு வயதாகிறது. ஜெய் கிருஷ்ண இந்த உலகத்தில் மூன்று வருஷ அனுபவம் பெற்றவன். லோகேஸ்வரி எட்டு மாதங்களான பாப்பா. மனைவியுடன் அமைதியான வாழ்க்கை நடத்தி வருகிருர் ராமராவ் அவரது தம்பியும் மணமாகி குடும்பத்துடன் அண்ணனுடனேயே இருந்து வருகிருர். அவர்களது பெற்ருேர் பிள்ளைகளை அன்பர் பணி செய்ய ஆளாக்கி விட்டுவிட்ட பெரு மகிழ்ச்சியோடு ஓய்வுபெற கிராமத்தில் போய்த் தங்கி யிருக்கிருர்கள்.

ஓய்வு நேரங்களில் முன்பெல்லாம் அவர் வர்ணம் தீட்டுவதில் ஈடுபட்டிருந்தார். சித்திரம் அவருக்குப் பிரியமான ஒருகலை ஆனல் இப்போது அதற்கு நேரமில்லை. அவருக்கு

ஆங்கிலத்திலும் தெலுங்கிலும் சிறந்த தேர்ச்சியுண்டு. ஹிந்தியும் தமிழும் சுமாராகத் தெரியும்.

முதன் முதலில் நான் குறிப்பிட்டது போல் ராமராவ் நிறைய பொதுக் காரியங்களில் ஈடுபட்டு அரிய தொண்டு புரிந்திருக்கிறார். ஆந்திர பஞ்சத்தின் போது ஜி. வரலக்ஷமியுடன் அவர் ஆந்திரர்களுக்குச் செய்த தொண்டு மறக்க முடியாததாகும் நேஷனல் ஆர்ட் தியேட்டர்ஸ் என்ற கலை ஸ்தாபனத்தை அவர் நடத்தி வருகிறார். அதன் ஆதரவில் ஏராளமான நிகழ்ச்சிகளை நடத்தி, ஆந்திராவில் சுற்றுப் பிரயாணம் செய்து ஒரு லக்ஷம் ரூபாய் வசூல் செய்து 1952-ம் வருஷம் மே மாதம் 25-ம் தேதி தொழில் மந்திரி கனம் யு. கிருஷ்ணராவ் தலைமையில் அதை ஆந்திர பஞ்ச நிவாரணத்திற்காகக் கொடுத்தார். அவருடைய சகோதரரும் இந்த ஸ்தாபனத்தில் இருக்கிறார்.

நடிப்பது ஒரு கலை; அதைப் போல பலருடனும் சகஜமாகப் பழகி நடப்பதும் ஒரு கலைதான். நடிகர்களும் மக்களும் தனித் தனிச் சமூகத்தினர்களாகப் பாவிக்கப்படாமல் ஒரே சமூகத்தினராகக் கலந்து பழக வேண்டும் என்று விரும்புகிறார் ராமராவ். மக்களின் ஆதரவினால்தான் கலைஞர்கள் சுகவாழ்வு வாழ முடிகிறது அதற்குப் பிரதியாக மக்களுக்குத் தங்களாலான சேவை செய்ய வேண்டும் என்ற உயர்ந்த நோக்கம் கொண்டவர் அவர். தன் கல்வி பட உலகிற்கு மட்டுமின்றி சமூக சேவைக்கும் பயன்பட வேண்டுமென்று விரும்புகிறார் அவர்.

சுமார் ஐந்தடி ஆறு அங்குல உயரமும் வசீகரமான தோற்றமும் உடற்கட்டும் சிவந்த நிறமும் கொண்டவர் தாரக ராமராவ். எந்தப் பாத்திரத்திற்கும் பொருத்தமான தேக அமைப்பு அவருடையது. நடிப்புத் திறன் இந்த அவரது தன்மைகளை மேலும் சோபிக்கச் செய்கிறது. பட உலகில் கேள்விப்படும் ஆசாபாசங்களினின்று ஒதுங்கி அமைதியான வாழ்வு வாழும் நடிகர் என். டி. ராமராவுக்கு மகத்தான எதிர்காலமிருக்கிறது.

—எஸ். வி. ஸம்பத்குமார்.


## அறிஞர் அண்ணாவின் நூல்கள்

| | |
|---|---|
| அண்ணாவின் எழுத்தும் கருத்தும் | 0 - 6 - 0 |
| அண்ணாவின் பொன்மொழிகள் | 0 - 8 - 0 |
| ஏ, தாழ்ந்த தமிழகமே | 0 - 8 - 0 |
| தமிழரின் மறுமலர்ச்சி | 0 - 8 - 0 |
| அண்ணாவின் நகைச்சுவை | 0 - 3 - 0 |
| அண்ணாவின் முத்துக்குவியல் | 0 - 4 - 0 |
| அறிவுலகச் சிற்பி அறிஞர் அண்ணா | 0 - 8 - 0 |
| பறித்த பூக்கள் | 0 - 4 - 0 |
| எமிலிஜோலா | 0 - 4 - 0 |


## ஏழை பட்ட பாடு

(லெஸ் மிஸ்ரபில்)

விக்டர் ஹ்யூகோ எழுதிய அற்புத நாவல் 1 - 8 - 0

## முத்தமிழ் நிலையம்

சென்னை - 1




## வாழப்பிறந்தவள்

வாஹினி ஸ்டுடியோவில், டைரக்டர் ராமண்ணா உருவாக்கி வரும் 'வாழப் பிறந்தவள்' ஒரு நல்ல படம் என்பதாக ஸ்டுடியோவாசி ஒருவர் தெரிவித்தார். இந்த தீர்ப்பை பொது ஜனங்கள் கொடுக்க நீண்ட காலம் பிடிக்காதாம். 'வாழப் பிறந்தவள் மட்டுமல்ல நான், நல்ல படம் என்ற பெயருக்கும் உரியவளாவேன்' என்று உரிமை பாராட்டிக் கொண்டு விரைவிலேயே வெளிவரப் போகிறாள் அவள். பி. எஸ். சரோஜா – ஸ்ரீராம் இருவரும் இதில் காதலர்களாக ஜோடி சேர்ந்திருக்கின்றனர். பாலய்யா வழக்கமான வில்லன் வேஷத்தில் வந்து சில ஸ்டண்டு வேலைகளை இதில் செய்திருக்கிறார். தயாரிப்பாளரான டி. ஆர். ராஜகுமாரியும் படத்தின் பிரதான பாத்திரமொன்றை ஏற்று நடித்திருக்கிறார். ஹாஸ்யச் சுவைக்கு கே. சாரங்கபாணி தயாராக இதில் காத்திருக்கிறார். மகாபலிபுரத்தில் கற் சிற்பங்களுக்கு ஈடாக, கட்டழகியர்களை ஆடச் செய்து அருமையான நடனக் காட்சியை படத்திற்குச் சிருஷ்டித்திருக்கிறார்கள். வாழப் பிறந்தவள் ரஸிகர்கள் விரும்பும் பெண்ணாகவே இருப்பாளாம்.

## சத்திய சோதனை

எதற்கெடுத்தாலும் கண்டிரோல், ரேஷன் என்ற அளவிற்கு இன்றைய உலகம் வந்துவிட்டபோது அதில் சத்தியம் தலைகீழ் ஆடுவதும் அபூர்வம் தானே! தவிர கிடைத்த உண்மையும் உண்மையானதா(!) என்று பரிசிலனையும் செய்ய வேண்டியிருக்கியிருக்கிறது. ஏவி. எம். ஸ்டுடியோவில் தயாராகியிருக்கும் சத்திய சோதனை படத்திலும் இப்படியாக உண்மை ஆராயப்படுகிறதாம். ராஜா ராணி கதை என்பது மட்டுமல்ல, கரடி போன்றவைகளின் பிரவேசமும் இச்சோதனைப் படத்தில் உண்டென்று தெரிய வருகிறது. கர்நாடக குப்பி கம்பெனியார் இந்தப் படத்தை தயாரித்திருக்கின்றனர். குணசாகரி என்ற இதன் கன்னடப் பதிப்பு இரண்டு மாதங்களுக்கு முன்பு திரையிடப்பட்டு விட்டது. நீண்ட காலத்திற்குப் பிறகு ஹொன்னப்ப பாகவதர் சத்தியசோதனையின் மூலம் திரையில் காட்சியளிக்கப் போகிறார். பண்டரிபாய் அவருடன் கதாநாயகியாக நடித்திருக்கிறார். பாலய்யா, ஜெயம்மா, டாக்டர் ஜி. வி. சுப்பாராவ், கிருஷ்ணகுமாரி முதலியோரும் 'சத்திய சோதனை'க்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். படத்தை ஸின்ஹா டைரக்ட் செய்திருக்கிறார். சத்திய சோதனை ரஸிகர்கள் தன்னைக் காணச் செய்வதற்காக விரைவிலேயே வரப்போகிறது.

## குமாஸ்தா

சென்ற மாதத்தில் அருணா பிலிம்ஸாரின் குமாஸ்தா வெளியிடப்பட்டிருக்கிறது. அருணாவின் இரண்டாவது தயாரிப்பான இப்படம் நெஞ்சை நெகிழச் செய்யும், உணர்ச்சி மிகுந்த உருக்கமான சித்திரம். நாகய்யா, மனோஹர், நரசிம்மபாரதி, பண்டரிபாய், ஜெயம்மா போன்ற நக்ஷத்திரங்கள் குமாஸ்தாவில் சுடர்

விட்டுப் பிரகாசிக்கின்றனர். படத்திற்காக இவர்களது நடிப்புக்கு, பட்டை தீட்டிய கைங்கரியம் ஆர். எம். கிருஷ்ணசாமியைச் சேர்ந்தது.

## சந்திரஹாரம்

கோட்டைகளும், கொத்தளங்களும் உருவாகி வரும் அமைப்பையும், அளவையும் பார்த்தால் விஜயாவின் சந்திரஹாரம் ஒரு பிரம்மாண்டமான தயாரிப்பு என்பது ஊர்ஜிதப்பட்டு விடும். சமீபத்தில் ஸ்டுடியோவின் திறந்த வெளியில் இப்படத்திற்கென ஒரு பெரிய காட்சி ஜோடனையை சிருஷ்டித்திருந்தார்கள். அவர்களது பாதாள பைரவியைப் போன்றே சந்திரஹாரம் பயங்கர சாகஸச் செயல்கள் மிகுந்த ஒரு கதை. என். டி. ராமராவ் இப்படத்தில், ஸ்ரீரஞ்சனியுடன் பிரதம பாகத்தில் நடித்து வருகிருர். சாவித்திரி மயக்கு மோகினியாக வருகிருர். எஸ். வி. ரங்கராவுக்கும் இப்படத்தில் வேஷமுண்டு. காமேஸ்வரராவ் டைரக்ட் செய்து வரும் இப்படம் விஜயாவின் நான்காவது தயாரிப்பாகும். இதுவே விஜயாவின் அதிகப் பொருட் செலவில் தயாரிக்கப்பட்டு வரும் படம் என்றும் சொல்லிக் கொள்கிருர்கள்.

## ஆனந்தமடம்

வட இந்தியாவிலிருந்து தமிழ்ப் படுத்தப்பட்ட மற்ெருரு படம் சென்ற மாதம் சென்னையில் திரையிடப்பட்டிருந்தது. பில்ம்ஸ்தானின் தயாரிப்பான ஆனந்த மடம் தான் அது. பக்கிம் சந்திர சட்டர்ஜியின் இக்கதை தேசியப் புரட்சியை அடிப்படையாகக் கொண்டு எழுதப் பட்டது. பிருதிவிராஜ், கீதாபலி, பிரதிப்குமார், பாரத்பூஷன் போன்ற வட இந்தியாவின் முன்னணி நடிகர்கள் 'ஆனந்த மடம்' நடிகர் பட்டியலில் காணப்படுகிருர்கள். பி. எஸ். ராமய்யா படத்தின் தமிழ் வசனங்களை எழுதியிருக்கிருர்.

## ஆதித்யா–ஜூபிடர்

ஜூபிடர்–மேகலா கூட்டுத் தயாரிப்பான நாம் வெளியேறிய போது, மற்ெருரு ஜூபிடர் கூட்டுத் தயாரிப்பு ஸ்டுடியோவுக்குள் நுழைய வேண்டியதுதானே முறை! இப்பொழுது ஜூபிடருடன் கூட்டாக படமெடுக்க முன் வந்திருப்பவர்கள் ஆதித்யா கம்பெனியார். இவர்களும் ஜூபிடரும் சேர்ந்து எடுக்கும் இப்படம் நெப்டியூனில் தயாராகும். இதற்கான கதை, வசன அமைப்பு, மற்றும் இதர ஆக்க வேலைகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. கே. சுப்ரமண்யம் இப்படத்தை டைரக்ட் செய்வார் என்பதாக ஒரு செய்தி உலவி வருகிறது.

## பெண் தெய்வம்

என் தங்கை படத் தயாரிப்பாளர்களான அசோகா பிக்சர்ஸார் அடுத்தபடியாக பெண் தெய்வம் என்ற படத்தை தயாரிக்க திட்டமிட்டிருக்கிருர்கள். ரத்தபாசம் கதை எழுதிய ஸ்ரீதர் இப்படத்திற்கான கதை, வசனங்களை எழுதி யிருக்கிருராம். அவர்களது தெலுங்கு என் தங்கை படமான 'நா செல்லலு' ஆந்திர நாட்டில் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறதாம்.

## மனிதன்

இம்மாதம் முற்பகுதில் வெள்ளித் திரையை அலங்கரிக்க ஜூபிடர் லாவண்யா கூட்டுத் தயாரிப்பான மனிதன் வெளிவந்துவிடுவான் என்று சொல்லிக் கொள்கிருர்கள். மனிதன் ஒரு மனிதனிடம் குடி கொண்டிருக்க வேண்டிய நற்பண்புகளைச் சித்தரிக்கும் படம். காதல் கதையாளுலும் கருத்து மிகுந்தது. கருத்து மிகுந்த இக்கற்பனையை கண் கவர் திரை ஓவியமாக உருவாக்கி யிருக்கிருர் டைரக்டர் கே. ராம்நாத். மனிதனை மேடையில், அரங்கேற்றிய டி. கே. எஸ். சகோதரர்களே படத்திலும் அதே பாத்திரங்களை ஏற்று நடித்துள்ளனர். நீண்ட காலத்திற்குப் பின் திரையுலகம் அவர்களை மீண்டும் ரஸிகர்களுக்கு அறிமுகப் படுத்தப் போகிறது. சகோதரர்களுடன், மாதுரிதேவி, கிருஷ்ணகுமாரி, எஸ். ஏ. நடராஜன், கே ராமசாமி முதலானோரும் மனிதனில் நடித்து வருகின்றனர். மனிதன் படமாக உருவாவது நெப்டியூனில்.

## மாடர்ன் தியேட்டர்ஸ்

வளையாபதிக்கு பின்னர் வாய்மூடி மௌனியாகிவிட்டதே மாடர்ன்

தியேட்டர்ஸ் என்று எல்லோரும் நினைக்கலாம். 'நீறு பூத்த நெருப்பு' போல் ஓசைப்படாமல் காரியங்கள் அங்கு நடந்து வருகின்றன. கருணாநிதி ஒரு படத்திற்கான வசனங்களை எழுதி வருகிருராம். சிவாஜி கணேசன், பி. எஸ். சரோஜா முதலியோர் இப்படத்தில் நடிப்பார்களென்று தெரியவருகிறது. டி. ஆர். சுந்தரம் படத்தை டைரக்ட் செய்யப்போவதாகக் கேள்வி. அவர்களது ஸ்டுடியோவில் தயாரான 'காடு' ஆங்கிலப் படம் விரைவிலேயே வெளிவரவிருக்கிறது.

## பெற்ற தாய்

தாயினும் சிறந்த கோயிலில்லை என்பது பழமொழி. அதேபோல் பெற்ற தாயின் பாசமென்னும் பரந்த மனப்பான்மைக்கும், அன்புக்கும் ஈடு இணை என்பது கிடையாது. இவற்றையெல்லாம் வெகு அழகாக எடுத்துச் சொல்லும் படமாக இருக்குமாம் பிரகாஷ் புரொடக்ஷன்ஸாரின் பெற்ற தாய். 'அண்ணி'யை டைரக்ட் செய்து நமக்களித்த பிரகாஷ் ராவ் இப் படத்தை தயாரித்திருக்கிருர். டி. டி. வஸந்தா, நாகேஸ்வர ராவ், நம்பியார் முதலியோர் ஜி. வரலக்ஷ்மியுடன் இதில் நடித்து வருகின்றனர். தமிழ், தெலுங்கு இருபாஷைப் படமான இது, கோடம்பாக்கத்திலுள்ள அவர்களது சொந்த ஸ்டுடியோவில் உருவாகியிருக்கிறது.

## கோடீஸ்வரன்

பணக்காரன் ஏழையாக விரும்பமாட்டான்; ஆனுல் ஒரு ஏழை அப்படி நினைக்கமாட்டான். அதாவது அவன் பணக்காரனுக விரும்புவான் என்பது மட்டுமல்ல; அதற்காக தன்னுலான முயற்சிகளையும் செய்வான். ஒரு ஏழை குமாஸ்தாவின் வாழ்க்கை ஏட்டிலிருந்து சம்பவங்களைத் திரட்டி படமாக்கிய அருணு பிலிம்ஸார், தங்களது அடுத்த தயாரிப்புக்காக ஒரு கோடீஸ்வரனைத் தேர்ந்தெடுத்திருப்பதும் நியாயந்தானே? இந்தக் கோடீஸ்வரன் கோடானு கோடி ரஸிகர்களைக் கவரும் சித்திரமாக உருவாக வேண்டும் என்று அருணு பிலிம்ஸாரின் அவா மட்டுமல்ல; நமது விருப்பமும் கூடத்தான்!

## தோட்டக்காரன்

எனெஸ்கேயின் தோட்டக்காரன் மீண்டும் மண்ணைக் கிளற ஆரம்பித்துவிட்டான். அதாவது வாஹினியிலே அவர் காமிராவுக்குள் 'ரீல் ரீலா'க அடைபட்டு வருகிருர். என். எஸ். கிருஷ்ணன் டைரக்ட் செய்து வரும் இதில் (ஜெமினியின் அனுமதியோடு) எம். கே. ராதா நடித்து வருகிருர். தோட்டக்காரன் ஹாஸ்ய ரஸனை நிறைந்த கதை மட்டுமல்ல; படிப்பினையும் கொண்ட கதை.

## ஜெனோவா

கிறிஸ்து சம்பந்தப்பட்ட படங்கள் நமது தமிழ் மொழியில் அதிகம் தயாராவதில்லை. ஞானசௌந்தரிக்குப் பின்னதாக இந்தப்பாதையில் அடியெடுத்து வைக்கிருள் ஜெனோவா. ஜெனோவா அரசிளங்குமாரி; அபாரபக்தி அவளுக்கு கிறிஸ்துவின்மீது. பக்தர்கள் என்ருல் சோதனைகள் பல ஏற்படுவதும்நியாயந்தானே?முடிவில கிறிஸ்துவின் பரிபூரண அருள் அவளுக்குக் கிடைக்கிறது. பி. எஸ். சரோஜா ஏகபக்தையாக இதில் வருகிருர். அவரது கணவராக எம். ஜீ. ராமச்சந்திரன் தோன்றுகிருர். வீரப்பாவுக்கு இதில் கிடைத்திருப்பது ஒரு விலலன் பாத்திரம். சந்திரா பிக்சர்ஸ் என்ற முத்திரையில், நாகூர் டைரக்ஷனில் தயாராகியிருக்கும் ஜெனோவா ஏப்ரல் வெளியீடு என்பதாக விளம்பரப்படுத்தப்பட்டிருக்கிறது.

## தணிக்கை அதிகாரி மாற்றம்

இதுநாள் வரை சென்னை பிராந்திய தணிக்கை அதிகாரியாக சேவை செய்து வந்த கே. ஸ்ரீநிவாஸன் கல்கத்தாவிற்கு மாற்றப்பட்டிருக்கிருர்.

இதையொட்டி சென்ற மாதம் 3-ம் தேதியன்று வாஹினி ஸ்டுடியோவில் அவருக்கு ஒரு பிரிவு உபசாரம் நடைபெற்றது. தென்னிந்தியாவின் பல சினிமா ஸ்டுடியோக்கள், படத்தயாரிப்புக் கம்பெனிகள் ஆகியவை சார்பில் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஜெமினி அதிபர் எஸ். எஸ். வாஸன் தலைமை வகித்தார்.

எச். எம். ரெட்டி ஒரு பிரிவு உபசார உரையை விழாவை ஏற்படுத்தியிருந்த படத்துறை ஸ்தாபனங்களின் சார்பாக வாசித்தளித்தார்.

## மருமகள்..........

(29-ம் பக்கம் தொடர்ச்சி)

குண் : சாந்தா...... சாந்தா...... அடியே சாந்தா!

சாந் : அதுதான் வந்திகிட்டிருக் கேனே, ஏன் இடியா மொழங்கணும்?

குண : ஏண்டி! சிவி சிடுக்கெடுக்கிற நேரமா இது?

சாந் : ஏன், அதுக்குக்கூட நாள் நட்சத்திரம் இருக்கா?

குண : நாள் நட்சத்திரமில்லே. பாக்கி வேலே கெடக்கேடீ.

சாந் : ஓ அப்படியா? இன்னும் என்ன வேலே பாக்கியாம்?

குண : அதா? முதல்லே நாலு நடை தண்ணி எடுத்துக்கிட்டு வந்து அண்டாவையும் கொப்பரையையும் ரொப்பிட்டு. அப்புறம் அடுப்பிலே உலே வைச்சு... அரிசியை அரிச்சு போட்டுட்டு, ஒரு சாம்பார், ஒரு ரசம், ஒரு அவியல், ஒரு பொரியல்... ஒரு கருவப்பிலே தொவையலும் அரைச்சுப் போட்டுட்டு அப்புறமா நீ சிவிச் சிங்காரி.

சாந் : வேலே இவ்வளவு தானு? இன்னமும் இருக்கா?

குண : இதை செய்யம்மா முதல்லே.

சாந் : உழறவன் ஏமாளின்னு, எருது மச்சான்முறை கொண்டாடுமாம்.

குண : என்னடி அளக்குறே?

சாந் : இந்தா, இந்தாடீ, சி எல்லாம் நம்பகிட்டே வேண்டாம். ஓங்க மகனுக்குப் பொண்டாட்டியா வந்திருக்கேன். இந்த வீட்டு வேலேக்காரியா வரலே. தெரியுமா?

குண : வீட்டு வேலேயெல்லாம் நீ செய்யலேன்னு ஓங்கப்பனு வந்து செய்வான்?

சாந் : ஏன், நீ உன் புருஷன் வீட்டுக்குப் போகும்போது ஓங்கப்பன்கூட வந்தானு வீட்டு வேலே செய்யறதுக்கு? ரொக்கமா எண்ணி வாங்கினீங்களே பத்தாயிரம் ரூபா, அதுலே ரெண்டு ரூபா கொடுத்து ஒரு வேலேக்காரியை வைக்கிறதுக்கென்ன கேடா?

குண : நீ என்னடி எனக்கு யோசனே சொல்றது?

சாந் : நீ என்ன என்னே அதிகாரம் பண்றது? பார்க்கிறவரைக்கும் பார்ப்பேன். பிறகு மாமியார்ங்கிற மரியாதையிலே மண் விழுந்து போகும், ஆமா!

துரை : உலக மகா யுத்தங்களுக்குக்கூட ஒரு முடிவு ஏற்பட்டுப் போகுது. உங்க சண்டை மாத்திரம் ஓயவே மாட்டேங்குதே? சாந்தா! நீ தான் சின்னப் பொண்ணு, கொஞ்சம் அடங்கிப் போகப்படாதா?

சாந் : ஏன், வயசுக்குப் பெரியவங்க அதைச் செய்யறதுக்கு என்னவாம்?

குண : பாரப்பா! ஒரு குடம் தண்ணி கொண்டுவரச் சொன்னதுக்கு இந்த அல்லி தர்பார்,

துரை : எல்லாம் சொல்லற விதமாச்சொன்னு...

குண : உடனே கேட்டுவிட்டுத்தான் மறுவேலே பார்ப்பா ஓம்பொண்டாட்டி.

துரை : இப்ப என்னம்மா? உனக்கு ஒரு குடம் தண்ணி தேவை. அவ்வளவுதானே? பேசாமெ இரு.

அவனுக்காக குடத்துடன் கிணற்றடிக்குச் செல்கிருள் சாந்தா. நல்லம்மாவும் தங்கம்மாவும் வத்தி வைக்கிருர்கள். அவள் வருமுன் அவர்களுக்குப் பொழுது போகவில்லே. வாயாடிகளல்லவா?

நல் : நாமும் இவ்வளவு நாழியா நம்ம ஹெட் ஆபீஸிலேயே இருக்கோம்.

தங் : நம்ம பிஸினஸ்ஸுக்கு அடுத்த ஆளே இன்னும் காணேம்.

நல் : வர்ருடி...... (சாந்தா வந்ததும்) என்னம்மா அனியாயம் இது? சேச்சே! கொளுத்திற வெயிலிலே கொஞ்சமும் இரக்கமில்லாமெ.

தங் : மல்லிகைப்பூ மாதிரி நடத்த வேண்டிய மருமகளை......

நல் : மாடாட்டமா வேலை செய்ய வைக்கிருளே, பாவி!

தங் : இந்தக்காலத்துலேயும் மாமி யாருக்கு அடங்கிட மருமகள் இருக் காளே அதைச் சொல்லு.

சாந் : என்னமோம்மா! நான் கேட்டுவந்த வரம் அப்படி.

நல் : உன்னை ஏம்மா நீ நொந்துக் கறே? நீ என்ன வெறுங்கையை வீசியா இவ வீட்டுக்கு வந்திருக்கே?

தங் : இல்லே சாதாரணக் குடும் பத்திலே பிறந்தவளா நீ?

நல் : இவங்கள்ளாம் சக்ரவர்த்தி பரம்பரையைச் சேர்ந்தவங்கடீ.

நல்ல : ஏம்மா சாந்தா? மாமியார் இப்படியெல்லாம் கொடுமை பண் ருன்னு புருஷன் காதிலே ஒரு வார்த்தை போட்டு வைக்கக்கூடாது. உம்.....

சாந் : என்ன பிரயோஜனம்? எம் புருஷனை பொம்மையா ஆட்டி வைக்கிரு. அவ புருஷனை பம்பரமா சுத்த வைக்கிரு. யாரும் என்னமும் சொன்ஞ உடனே பத்திரகாளி அவ தாரம் எடுத்திடரு. நான் என்ன செய்யட்டும்?

தங் : என்னமோம்மா, குணலக்ஷ்மியின் அதிர்ஷ்டம் நீ இவ்வளவு பொறுமைசாலியா இருக்கே.

சாந் : உங்களுக்கு இருக்கிற ஈவிரக்கங்கூட அந்த அரக்கிக்கு இல்லே. சமயம் வரட்டும் சரியான பாடம் படிச்சுக்குடுக்கறேன். வரட்டுமா?

இருவரும் : போயிட்டு வாம்மா,

**சாந்தா அவர்கள் தூபத்தால் தண்ணீர் முழுவதையும் கீழே கொட்டி விட்டு வீட்டுக்குப் போய் குடத்தை தொப்பென்று வைக் கிருள்.**

குண ; ஏண்டி! தண்ணிக்குப் போனவ வெறுங் கொடத்தைக் கொண்டுவந்து டப்புன்னு போடு றியே? தண்ணி எங்கேடீ?

சாந் : அதா, கேணியிலேயே இருக்கு.

குண : அது எனக்குத் தெரியும். நீ ஏண்டி இப்பக் கொண்டு வரலே?

சாந் : கொண்டு வரமுடியாது!

குண : என்ன! முடியாதா?

சாந் : இனிமே தண்ணிக்கின்னு கிணத்துப் பக்கம் ஒரு நடைகூட நடக்கமாட்டேன். தெரிஞ்சுக் கோங்கோ!

குண : நடக்க வச்சுட்டா?

சாந் : அதுதானே உங்களாலே முடியாதுங்கறேன்.

குண : ஏன், பெரிய ஜமீன்தார் வூட்டுப்புள்ளே...

சாந் : ஜமீன்தாருங்க கெட்டாங்க கேடு, நான் சக்ரவர்த்தி பரம்பரை யைச் சேர்ந்தவ. இன்னைக்குத்தான் தெரிஞ்சுக்கிட்டேன். இனிமே ஒரு துரும்பைக்கூட இந்தக் கையாலெ தொடமாட்டேன்.

குண : தொட்டா?

சாந் : எங்க சக்ரவர்த்தி பரம் பரைக்கே அவமானம்,

**பேச்சுமுற்றி ராமசாமி, துரை வந்துங்கூட இருவரும் ஓய்வதில்லை.**

## காட்சி 3

**குமாருக்குக் கொடுக்காமல் உஷாவை வேறு யாருக்காவது மண முடித்து விட கிருஷ்ணசாமி பகீரதப் பிரயத்தனம் செய்கிருர்; பல இடங் களுக்கும் அலைந்த பின் சுபேதார் வீட்டுக்குப் போகிருர். சுபேதாருக்கு உஷாவைத் தன் மகன் சூரிக்கு மண முடிக்க ஆசைதான். ஆனல் அது ஒரு கலைப் பயித்தியம். இங்கே பிள்ளை பார்க்க கிருஷ்ணசாமி வந் திருக்கும் போது சூரி ராமதாஸர் நாடகத்துக்கு ஒத்திகை செய் கிருன், நாடக கோஷ்டி பூராவும் அங்கு இருக்கிறது.**

சூரி: வாசிங்கடா.

சூரி: (ஆரம்பிக்கிருன்) ஏ...... ராமச்சந்திரா!.. என்னய்யா இது, சுதியைச் சதிபண்றே? சரியா வாசி...

ஒரு நடிகன்: இது ஹார்மோனியமப்பா! சுதி வராது...நீதான் எங்கேயோ தாவுரே.

சூரி: என்னப்பா சுதி வச்சிருக்கே?

ஹார்: ரெண்டரை,

சூரி: சரிதான், நான் அஞ்சரையிலேயே பாடிக்கிட்டு இருக்கேன்... உம், சரி பாட்டை அப்புறமா பார்த்திடுவோம்... இப்போ டைலாக்கை ஆரம்பிக்கலாம்.. ஏ! ராமச்சந்திரா!

பசு மாடு கத்துகிறது.

சூரி: நான்சென்ஸ்! ஓத்திகைக்கு இடம் பார்த்தவன் புத்திக்கு உரை தான் தச்சிப் போடணும். சீச்சீ...நம்ப நடிப்புக்கும் தரத்துக்கும் இந்த இடம் லாயக்குப்படாது. மாட்டை அடிச்சு ஓட்டுடா வெளியே.

நடிகன்: மாட்டுமேலே கையை வச்சா, வீட்டுக்காரன் நம்ப ஓடம்பை நீட்டி நிமித்திடுவான். ஓசி வீடு, ஒத்திகை நடக்கற வரைக்கும் ஒழுங்காயிருக்கணும்.

சூரி: சரிதாண்டா. நீ கம்னு இருடா......ஏ ராமச்சந்திரா!

ஒரு ஆடு கத்துகிறது இப்போது. ராமதாஸருக்குக் கோபம் வந்து விடுகிறது.

சூரி: நான்சென்ஸ்! இந்த ஆடு மாடுகளோடே மாரடிக்க நம்மாலே முடியாது. காமா இருக்க வேண்டிய நேரத்திலே ஒரே காட்டுக்கத்தல். கூலா டைலாக் போய்க்கிட்டு இருக்கிறபோது கொளறுபிகேஷன்.

ஒருவன்: மிஸ்டர் சூரி! ராமதாஸ் வேஷம் போட்டு கிட்டு இந்த ஆவேசம் கூடாது. சாந்தம், அமைதி நீங்க கடைப்பிடிக்க வேண்டிய அம்சங்கள்.

சூரி: சாந்தம்..... சாத்வீகம்...... அமைதி...! ஓகே பாய்ஸ்! ஆரம்பிக்கலாமா? ஏ சீதாராமா! நான் இப்படி அடைபட்டுக் கிடக்கலாமா? இந்த தாஸன் பக்தியில் நீ என்ன குறை கண்டாய்? அடே, ஆபத்பாந்தவா! ஆறு லட்சம் ரூபாய் செலவிட்டு இப்பொழுதுதானே ஆலயம் கட்டினேன். அதற்குள் அடைபட்டுக் கிடக்கிறேனே. இது நியாயமா? ராமச்சந்திரா!

சுபேதார் அங்கு வருகிருர்.

சுபே: டேய்...

சூரி: எந்தக் கழுதைடா அது?

ஒரு நடிகன்: ஓங்க அப்பாடா!

சூரி: ஓங்க அப்பாதாண்டா கழுதை, ஆடு, மாடு, கோழி, குரங்கு, கோட்டான் எல்லாம், நான்சென்ஸ்.

சுபே: சபாஷ்...

சூரி: (கவனியாமல்) பின்னே என்னடா?...ஓ...


## GARDEN FOR SALE

In the suburbs of MADRAS about six furlongs from Poonamallee High Road on one side & Kodambakkam Arcot Road on the cther; fully fenced SIXTEEN ACRES; with latest pucca terraced house built at a cost of Rs. 10,000/-; hundreds of yielding mango, coconut trees, etc.: four spring wells; paddy, ragi vegetable lands; First offer above Rs. 27,500/- plus cost of sale gets it.

(Only one and a half miles from City limits)

Box No. 101

c/o "PESUM PADAM"
MADRAS-14.

அவளை இழுத்து வருகிறார் சுபே தார். அவன் மணக்க விரும்பாத கலைஞ(!)னைதால் ராமர் வேஷத் துடன் வந்து தன் வெறுப்பைக் காட்டி கோணங்கித்தனம் செய் கிறான். கிருஷ்ணசாமியும் சுபே தாரும் பேசிக் கொண்டிருக்கிறார் கள்.

கிரு : என்னமோ நீங்க எனக்கு சம்பந்தியாகிறதுன்னு அது என் முன் னோர்கள் செய்த புண்ணியந்தான்.

சுபே : நீங்க ஓங்க மாப்பிள்ளை யைப் பார்க்க வேண்டாமா? டேய் சூரியநாராயணு! வாடா இப்படி.

சூரி : பிதா, ஆக்ஞை! தந்தையே வந்தனம்!... ஜனக மகாராஜரே! எனது மாட்சிமை தங்கிய எதிர் காலத்து மாமனார் அவர்களே! சிறு வன் நமஸ்கரிக்கின்றேன். ஹே... மாதா... மைந்தன் மண்டியிடுகின் றேன்.

கிரு : சுபேதார்வாள்...

சுபே : இந்த ஊர்லே சம்பூர்ண ராமாயணம் போட்டா. அதிலே பையன்தான் ராமர்...

சூரி : (விருத்தம்) ஆதௌ ராம தபோவனுகமனம்—வைதேஹி ஹர ணம்—ஜடாயு மரணம்—வாலி நிக்ர ஹணம்-லங்காபுரி தஹனம்-ராவண கும்பகர்ண...ஹே மாமா...

சுபே : இவ்வளவுதான்னு நினைக் காதிங்க. ஷேக்ஸ்பியர் எழுதினதை கரைச்சிக் குடிச்சிருக்கான். எங் கேடா தம்பி, ரெண்டு வரி சொல்லு!

சூரி : எஸ் டாடி! டுவிட் டுவிட் டுவி...வில் யூ லிஸன் டு மீ...தர்டி டேஸ் ஆப் செப்டம்பர்-ஏப்ரல் ஜூன் அண்ட் நவம்பர்...ஆல் தி ரெஸ்ட் ஹேவ் தர்டி ஒன் — எக்ஸெப்டிங் பிப்ருவரி எலோன்.

கிரு : (தலை வேதனை பொறுக் காமல்) இதுதான் ஷேக்ஸ்பியருங் களா?

சூரி : அப்பா... அப்பா...

சுபே : (தோளில் கிள்ளிவிட்டு) பெரியவங்க பேசும்போது குறுக்கே பேசாதப்பா. தம்பி...போ...போ...

சூரி : ஜாக் அண்ட் ஜில் வெண்ட் அப் டுதி ஹில்—டு பெட்ச் எ பைல் ஆப் வாட்டர்—ஜாக் பெல் டௌன்— அண்ட் புரோக் ஹிஸ் க்ரௌன்.

சுபே : மாப்பிள்ளையைப் பத்தி...

கிரு : அதுதான் இந்தக் காலத் துலே நகை நட்டுலே, உடு பொட வையிலே எத்தனையோ பாஷன் இருக் குல்லே. அந்தமாதிரி மாப்பிள்ளை களிலே இது ஒரு பாஷன் போலே யிருக்கு. அப்போ நான் வரட்டுமா?

இதற்கிடையே ராமசாமி குடும் பத்தோடு சென்னைக்கே சொந்த வீட்டுக்குப் போய் விடுகிறார்.

## காட்சி 4

குமாரின் கல்லூரி நண்பர்கள் அவனுக்கும் உஷாவுக்கும் ரிஜிஸ்டர் மணம் நடத்த தீர்மானிக்கின்றனர். குமாரிடம் இந்த நண்பர்கள் இதைப் பற்றிக் கூறுகின்றனர்.

பால கவி : குமார்! ஏன் இப்படி வருத்தப்பட்டுக்கிட்டிருக்கே? உனக் குச் சம்மதம். உஷாவுக்கும் சம்மதம். குறுக்கே நிக்கிறது பெத்தவங்க தானே?

கமலா : பெத்தவங்களைச் சம்ம திக்க வைக்கிறது ரொம்ப கஷ்டம். அதெல்லாம் எதுக்கு? ஓங்கரெண்டு பேரையும் ஹஸ்பெண்டு அண்ட் ஒய்ப் ஆக்குறதுக்கு நாங்களே ஏற் பாடு செய்தா?

குமா : எனக்கு ஒரு ஆக்ஷேபணையு மில்லே.

சரோஜா : அப்போ லீலா! நீ சுசிலா வீட்டுக்குப்போய் விஷயத்தை அவளிடம் சொல்லி அவ காரிலேயே நடுக்கிராமத்துக்குப் போயி உஷாவை அழைச்சிண்டு வரணும்.

லீலா : ஓ. கே.! லீவிட் டு மீ. கமான்!

பாலகவி : அதுக்குள் நம்ம ஒரு நன்கொடை லிஸ்டு தயார் செய்து கல்யாணச் செலவை இவங்கப்பா ராமசாமிகிட்டே வசூல் பண்ணிட லாம். எப்படி என் யோசனை?

ஒருவன் : பிரமாதம்...

யாவரும் போய் விடுகிருர்கள். பின்னான்படி நடுக்கிராமத்துக்கு சுசிலாவும் லீலாவும் செல்கின்றனர்.

உஷா : லீலா! சுசிலா! வாங்க வாங்க!! எங்கே என்னைத்தேடி இவ்வளவு தூரம்?

லீலா : எல்லாம் காரியமாத்தான்.

உஷா : அம்மா! இவ லீலா! இவ சுசி! ரெண்டுபேரும் பட்டணத்துலே எங்கூட படிச்சவங்கம்மா!

ராஜம்மா : அப்படியா? சந்தோஷம்! கொஞ்சம் பேசிக்கிட்டு இருங்க. இதோ காபி கொண்டு வர்றேன்.

சுசி : அதுக்கு நேரமில்லேம்மா.. உஷா! உன் கிட்டே ஒரு முக்கியமான விஷயம் பேசணம். உள்ளே வர்றியா.

உள்ளே விஷயத்தைக் கேட்டதும் பயப்படுகிருள் உஷா.

உஷா : நடக்கற காரியமா இது?

சுசி : மாணவர் உலகம் மனசு வச்சா நடக்காதது எது உஷா? மலை மணலாகும்... கடல் கட்டாந்தரையாகும்.

உஷா : குமார்.....!

லீலா : உலகமே எதிர்த்தாலும் உன்னைத்தான் கட்டுவேன்னு ஒரே உறுதியாய்ச் சொல்லிட்டான்.

சுசி : நாளைக்கே கல்யாணத்தை நடத்திப்போடுறதுன்னு ஒரே முடிவாத் தீர்மானித்து விட்டோம்.

உஷா : நாளைக்கே......

சுசி : ஆம்.. நாளைக்கே சென்னையில் ரிஜிஸ்திரார் முன்னிலையில்...

உஷா : அப்பா, அம்மா?

சுசி : சம்மதிக்கமாட்டார்கள், அதற்காகச் சிறு சாணக்கிய வேலை.

லீலா; சுசிலாவுக்குக் கல்யாணம் என்று உன்னைக் கூட்டிக்கிட்டுப் போகிருேம்.

சுசி : காலமும் சந்தர்ப்பமும் அந்த ஒரு வழிதான் காட்டுகிறது.

உஷா : பெற்ருேர்களுக்குத் தெரியாமல் திருமணம்...

லீலா : தயங்காதே உஷா! சட்டபூர்வமாகத் திருமணம் நடந்து விட்டால், அந்தத் திருமணம் உன் வாழ்வை இன்பபுரியாக்குமானுல், அதைத் தடுக்க உன் பெற்ருேர்களுக்கு உரிமை இடையாது.

உஷா : (தயக்கத்துடன்) ஒரு வகையில் இது பலாத்காரமாச்சே சுசி!

சுசி : உன் பெற்ருேர்களைப் புறக்கணிக்க நாங்கள் தூண்டவில்லை. கல்யாணத்திற்குப் பின் நீ நடந்து கொள்ளும் விதத்தில் நீ செய்ததே சரி என்று அவர்கள் ஆமோதிக்க வேண்டும். அது உன் கையில் இருக்கிறது.

லீலா : உஷா என்ன சொல்கிருய்?

சுசி : சொல்வதற்கு என்ன இருக்கிறது? திட்டம் சிறந்தது. திடம் மட்டும்தான் வேண்டும். அதுவும் தானுக வந்து விடும். வா, உஷா!

நிதி வசூல், அது, இது என்றெல்லாம் சொல்லி, கல்வியறிவற்ற ராமசாமியிடம், ரிஜிஸ்தர் மணத்துக்குச் சம்மதம் பெற்ற நன்கொடை லிஸ்டில் கையெழுத்து வாங்கி வந்து மணமுடித்து விடுகின்றனர் நண்பர்கள். மண விழாவுக்குத் தலைமை வகிக்க குடும்ப சகிதம் வருகிருர் ராமசாமி!

ஒரு மாணவன் : விழாத் தலைவர் விமரிசையாக வந்து இறங்குகிருர்.

கம : நீங்க ரெண்டு பேரும் கொஞ்சம் ஒளிஞ்சிருங்க.

உஷாவும் குமாரும் மறைந்து கொள்கிருர்கள்.

சரோ : வாங்க... வாங்க ... உட்காருங்க. உங்களைத்தான் எதிர்பார்த்துக்கிட்டிருந்தோம்.

ராம; கல்யாணமெல்லாம் நடந்தாச்சா?

பால : தங்கள் தயவால் தகுந்த சுபவேரத்தில் மங்களகரமாக நடந்தேறியது.

ராம: ஆமா! பந்தல், கிந்தல், மேள தாளம்...?

சரோ: அதெல்லாம் கிடையாது! சீர்திருத்தத் திருமணம். சிறப்பாக நடந்தது ரிஜிஸ்திரார் ஆபீஸிலே!

குண: ஆபீஸா? கல்யாணம் பண்றதுக்குக்கூடவா கவர்ன்மெண்டிலே ஆபீஸ் வச்சிருக்காங்க?

பால: காலம் மாறிவிட்டது; கருத்து மாறிவிட்டது. அதனல் நாகரீகம் வந்துவிட்டது. சட்டப்படி இந்த கல்யாணத்தை யாரும் அசைக்க முடியாது.

ராம: அவ்வளவு இஸ்ட்ராங்கு.

இந்திரா: அதோ தம்பதிகள் வர்ருங்க.

ராம: ஆ..... என்ன இது? கேலியா பண்றீங்க?

இந்: உங்க வயசென்ன, உங்க தரமென்ன? போயும் போயும் உங்க கிட்டத்தானு கேலி செய்யணும்?

கம: இதோ சர்டிபிகேட்.

ராம: (அதைப் பிடுங்கி கசக்கியபடி) சர்டிபிகேட்டாம், சர்டிபிகேட்டு. இந்த கலயாணத்தை நாங்க ஒருக்காலமும் ஒப்புக் கொள்ளவே மாட்டோம்.

சரோ: பேப்பரை எறிஞ்சுட்டா கல்யாணம் ரத்தாகி விடாதுங்க. காபி எடுக்க ரூபா ஒண்ணேதான் செலவு.

குண: என்னங்க இது. பார்த்துக்கிட்டு சும்மா யிருக்கீங்களே? நேரே வைக்கல் கிட்டப்போயி, ஒரு கேஸை கிஸைப் போட்டு இவங்களை யெல்லாம் புடிச்சு ஜெயில்லே தள்ளுங்க.

சரோ: அம்மாடி! அதெல்லாம் ஒண்ணும் நடக்காது. இந்த கல்யாணத்துக்கு நீங்களும் உடந்தை என்கிறதுக்கு உங்க கையெழுத்து நேத்து நன்கொடை லிஸ்டிலே போட்டது இருக்கு.

ராம: இந்தக் கல்யாணத்துக்குன்னு நன்கொடை அழுதேன். ஏதோ அனுதை, புறம்போக்கு, தாலி கட்ட கதியில்லேன்னு சொன்னீங்க. தண்டத்துக்கு தந்துத் தொலைச்சேன்.

பால: சினத்தை அடக்கி சிறுவர் எம்மைப் பாராட்டி, மணமக்களை வாழ்த்துவதே முறை.

குண: நீங்க செய்த காரியத்துக்கு உங்களையும் பாராட்டி, அவங்களையும் வாழ்த்த வேண்டியதுதான்.

ராம: ஏண்டா, உனக்கு வெக்கமில்லே? நீ மட்டும் வீட்டு வாசப்படியிலே காலெடுத்துவை. அப்புறம் பாத்துக்கறேன்.

கிரு: இவன்தான் ஸார்!

இன்ஸ்பெக்டர்: குமார்......

குண: இவன் இல்லேங்க. எல்லாம் இந்தத் தலை தெறிச்சதுகள் செய்த வேலை.

இன்: யாரம்மா நீ? சும்மாயிரு... மிஸ்டர்! ஒரு பெண்ணைக் கடத்திக் கொண்டு வந்த குற்றத்திற்காக உம்மை அரஸ்ட் செய்கிறேன்.

சரோ: இன்ஸ்பெக்டர் ஸார்! குமார் உஷாவைக் கடத்திக் கொண்டு வரல்லே, ஏற்கனவே அவர்கள் காதலர்கள். மனமொத்து ரிஜிஸ்டர் மேரேஜ் செய்திருக்காங்க.

துரை: (அப்பாவின் காதோடு) அப்பா, ரொம்ப ஆபத்து! இந்த சமயம் உங்க சம்மதத்தோடேதான் கல்யாணம் நடந்ததுண்ணு நீங்க சொல்லலே, தம்பிக்கு விலங்கு மாட்டிக் கொண்டு போயிடுவாங்கப்பா.

ராம: ஆமாமா! அவங்க கல்யாணம் செய்துகிட்டாங்க.

இன்: எங்கே சர்டிபிகேட்?

குண: ஏண்டி முழிக்கிறே? சொல்லேண்டி வாயைத் தெறந்து, சம்மதத்தோட நடந்த கல்யாணமுன்னு.

**இன்ஸ்பெக்டர் சர்டிபிகேட்டைப் பார்த்த பின் ஒன்றும் சொல்ல முடியாமல் குமாரிடம் மன்னிப்பு பெற்றுச் சென்று விடுகிருர். குமாரும் உஷாவும் வீட்டுக்கு வருகிருர்கள்.**

* * *

வீட்டில் உஷாவை வரவேற்கிருள் 'கோபக்காரி' சாந்தா!

சாந்: *நீ மஹா கெட்டிக்காரி! குமாருக்கு வர்ற பொண்ணு பதினு யிரம் கொண்டு வருவா. இருபதினு யிரம் கொண்டு வருவான்னு ஒரெ இறுமாப்புலே இருந்தாங்க. நீ மஞ்சக் கயிறுக்குக்கூடச் செலவில்லாமெ மனசுக்குப்புடிச்ச மாப்பிள்ளையைக் கட்டிக்கிட்டே. அவுங்க மூஞ்சிலேயும் சரியானபடி கரியைப் பூசினே!*

குண: என்னடியிது! ஏகமா வர்ணிக்கிறே? எவெடீ சொன்னது நான் வரதக்ஷிணைக்கு வழிபார்த்தி ருந்தேன்னு? வரதக்ஷிணை வாங்கு வேன். வாங்காமெ இருப்பேன். அது என்னிஷ்டம்.

சாந்: ஆமா. வாங்குவீங்க! கல்யாணமாகி பொண்ணும் வீட்டுக்கு வந்தபிறகு, கட்டுக்கட்டா கொண்டு வந்து கொடுப்பாங்க. கோட்டை நீங்க ளும் ரொக்க ரொக்கமா எண்ணி வாங்குவீங்க. எங்கப்பா மாதிரி பத்தா யிரமுங்கொடுத்து, இந்தப் பாழும் நரகத்திலே தள்ள, பைத்தியக்காரங்க யாரும் இனி கிடையாது.

குண: பாழும் நரகமாத்தாண்டி போச்சு இந்த வீடு. பிசாசாட்டமா எண்ணைக்கு நீ காலெடுத்து வச்சியோ......

சாந்: யாரு? நீதான் பிசாசு. கிழப் பிசாசு. மாமியாப் பிசாசு. வாயாடிப் பிசாசு!

துரை வந்து மனம் வெறுத்துப் பேசுகிருன். உஷா சாந்தாவைச் சாந்தப்படுத்தப் போக அவள் உஷா மீதே திரும்புகிருள். எதிலும் தலையிடக்கூடாது என்று உஷாவை உஷார்ப்படுத்தி எச்சரிக்கிருன் குமார்.

* * *

வீட்டிலே நிம்மதியில்லாததால் தாரா என்ற நடன மாதுடன் நட்பு கொள்கிருன் துரை. சூரி வீட்டை விட்டு பணத்துடன் ஓடி வந்து ஒரு படக்கம்பெனியை ஆரம்பிக்கிருன். அவன் மூலம் தாரா-துரை சினேகம் வளர்கிறது. துரை மணமாகாதவன் என்று நினைத்தே அவன் மீது அன்பு கொள்ளுகிருள் தாரா. சூரி ஒரு நாள் துரையைப் பார்க்க வந்த இடத்தில் ரூபாவின் மனதை மாற்றி தன் மீது அன்பு கொள்ளச் செய்து விட்டுப் போய் விடுகிருன். அவள் அடிக்கடி அவனிருப்பிடம் சென்று திரும்புகிருள்.

## காட்சி 5

ஒருநாள் கல்லூரியிலிருந்து ஒரு பையன் மூலம் உஷாவுக்கு குமார் அனுப்பிய கடிதத்தை, உஷாவிட மிருந்து குணலக்ஷ்மி வாங்குகிருள்.

குண: என்னடா இது?

பையன்: குமார் எஜமான் இந்த லெட்டரை உஷா அம்மா கிட்டே கொடுக்கச் சொன்னுரு.

குண: சரி போ...எல்லாம் கோண எழுத்தால்ல இருக்குது. இந்தா, இது என்னமோ நீயே படி.

உஷா படித்து விட்டு மகிழ்ச்சி யால் பூரிக்கிருள்.

குண: என்னடியிது, நீயா பூரிச் சுப் போறியே? அதிலே என்னதான் எழுதியிருக்குன்னு சொல்லேன்.

துரை: என்னம்மா இது?

குண: இந்தாப்பா, இதைக் கொஞ்சம் படிச்சுச் சொல்லு.

துரை: (படித்து விட்டு) ஆ... லக்கி...லக்கி...வெரி லக்கி பெலோ!

ராம: (வந்து கொண்டே) ஏ...ஏ ...என்னடா இது? விஷயத்தைச் சொல்லாமெ லக்கி, கிக்கின்னு கெடந்து குதிக்கிறியே?

துரை: அப்பா! நம்ம குமாருக்கு அயல்நாட்டுப் படிப்புக்காக ஸ்காலர் ஷிப் ஆர்டர் வந்திருக்கு.

ராம: எங்கே நம்ம ஆர்பர்லே வந்திருக்கா?

துரை: இதுக்குத்தான் படிக்க ணும்னு சொல்றது. கவர்ன்மெண் டிலே கொடுக்கிற உபகாரச் சம்பளத் துக்கு ஸ்காலர்ஷிப்புன்னு பேரு. குமாருக்குக் கெடச்சிருக்கிற சான்ஸ் நம்ம குடும்பத்துக்கே பெரிய கௌர

வம். கையிலேயிருந்து ஐயாயிரமோ பத்தாயிரமோ செலவானுலுங்கூடப் பரவாயில்லே. தம்பியை அனுப்பிட வேண்டயதுதான். உங்க அபிப்பிராயம் என்னப்பா?

ராம: அதெல்லாம் எங்களுக்கென்னடா தெரியும்? படிச்சவங்க. நீங்களே யோசிச்சு ஒரு முடிவு செய்யுங்க.

குண: ஆமா! கல்யாணமாகிறதுக்கு முன்னுலே இந்த ஆர்டர் வந்திருந்தாலாவது அதைப்பத்தி யோசிக்கலாம். இப்ப மேல்படிப்பு படிச்சுத்தான் என்ன லாபம்?

சாந்: ஆமாமா. பாவம்! இப்ப ஒண்ணும் லாபமில்லேதான். கல்யாணம் ஆகாமெ இருந்திருந்தா ஒரு அம்பதினுயிரமாவது வாங்கி யிருக்கலாம்.

குண: போதும் வாயை மூடு.

துரை: அதிகப் பிரசங்கி!

**விமான நிலையத்திலே குமாரை வழியனுப்பிவிட்டுத் திரும்பும்போது உஷா தன் சினேகிதி கமலாவைச் சந்திக்கிருள். இலுப்பையூர் ஆஸ்பத்திரியில் அவள் லேடி டாக்டராக நியமிக்கப்பட்டிருப்பதை யறிகிருள் உஷா.**

* * *

**சாந்தா தன் அறையில் ஆத்திரத்துடனிருக்கிருள். குழந்தை அழுகிறது.**

சாந்: நல்ல மனுஷனுக்கு வாழ்க்கைப் பட்டாலல்ல நல்ல கெதி கிடைக்கும். அவர்தான் புத்தியில்லாமெ சுத்திகிட்டுத் திரிஞ்சா, பெத்தவங்களுமா செத்துப்போனுங்க? ரெண்டு வார்த்தை கேட்டுக் கண்டிச்சா என்னவாம்? (குழந்தையை **அடித்து**) இந்தா ஏண்டி கத்துறே? தூங்கித்தொலே!

உஷா: அக்கா...அக்கா. அதை ஏன் அடிக்கறே? அத்தான் செய்றதுக்குக் குழந்தை என்ன செய்யும்?

சாந்: எம்பிள்ளேயை நான் அடிப்பேன், கொல்லுவேன். நீ என்னடி எனக்குப் புத்தி சொல்றது? பெரிய மனுஷியாட்டம் வந்துட்டா.

உஷா: (**துரை வரும் சப்தம் கேட்டு**) அக்கா, அக்கா! அத்தான் வார்ருரு. மனசிலே கோபம் இருந்தாலும் அதை மறைச்சி சந்தோஷமா சிரிச்ச முகத்தோடு வரவேற்கணும். என்ன?

சாந்: எம் புருஷனே வரவேற்க எனக்குத் தெரியுண்டீ. நீ போடீ!

**துரை வரவே உஷா வெளியே போகிருள்.**

சாந்: இந்தாங்க...ஊஹும். வாய்கூட அடைச்சுப் போச்சா? அடைக்கும். அடைக்கும்! திங்கிற நேரந்தவிர வீட்டிலே தங்குறது கிடையாது. இப்படி கண்டபடி திரியறதாயிருந்தா ஏன் கல்யாணம் பண்ணனும்? குடும்பத்தை நடத்த முடியல்லேன்னு குழந்தை குட்டி ஏன் பெறணும்?

துரை: ஆரம்பிச்சுட்டியா அர்ச்சனையை. சரி சரி. அடக்கு வாயை, சனியனே!

சாந்: நான் வாயைத் திறந்தா அர்ச்சனே. பேச ஆரம்பிச்சா சனியன். நல்லா வாழ்க்கைப் பட்டேன் உங்களுக்கு?

துரை: உனக்கு என்ன குறைச்சலாய்ப் போச்சாம் இங்கே? அலுத்து வந்த மனுஷனுக்கு ஆறுதலா ஒரு வார்த்தை கிடையாது. சேச்சேச்சே! கொஞ்சமாவது இந்த வீட்லே நிம்மதியே கிடையாது.

**வெறுப்புடன் வெளியே கிளம்புகிருன் துரை. உஷா தடுக்கிருள்.**

உஷா: அத்தான்! ராத்திரீ வேளேகள்ளே இப்படி வெளியே போனு பாக்கிறவங்க பலதும் பேச மாட்டாங்களா? நீங்க பெரியவங்க, எல்லாந் தெரிஞ்சவங்க. உங்களுக்கு நான் என்ன சொல்ல முடியும்?

துரை: உனக்கு ஒண்ணுந் தெரியாது உஷா! இங்கேயிருந்து ஒரு நிமிஷங்கூட என்னுலே அவதிப்பட முடியாது. நீ ஏதாவது சொல்ல வேண்டியிருந்ததுன்னு அந்த அடங்

காப்பிடாரிக்குச் சொல்லு. நான் போறேன்.

சாந்தா சண்டை போடுகிருள். உஷா அவளுக்கு ஆறுதல் கூறி, கணவனிடம் நடந்து கொள்ளும் விதத்தைப்பற்றி விளக்கிக் கூறி, சாந்தாவை சாந்தப்படுத்துகிருள். சாந்தா-துரை இருவரிடமும் மாறுதல் ஏற்படத்தான் செய்கிறது.

## காட்சி 6

ரூபா-சூரி சினேகம் வலுக்கவலுக்க அதற்கு சாட்சியமும் ரூபாவின் உடலிலே வலுக்கிறது. உஷா இதை ஓரளவு ஊகிக்கிருள். நடு இரவில் ஒருநாள் விடு திரும்பிய ரூபாவை உஷா திருத்த முற்பட்டபோது, அவள் தன் தாயாரிடம் உஷாவைப் பற்றி அவதூருகக் கூறிவிடுகிருள். ஒரு நாள் தாராவின் விருப்பப்படி ரிஹர்சல் ஹாலுக்கு வந்த துரை, தங்கை ரூபாவை அங்கு கண்டு திடுக்கிடுகிருன்,

துரை: ரூபா...! எதுக்கு இங்கே வந்தே?

ரூபா: டான்ஸ் கத்துக்க வந்தேன்.

துரை: (கன்னத்திலறைந்து) சீ! டான்ஸ் கத்துக்க வந்தாளாம். வரக் கூடாத இடத்துக்கெல்லாம் வந்து வம் சப்பேரைக் கெடுக்கிறியா? நாலுபேர் பார்த்தா என்ன சொல்லுவாங்க.

ரூபா: என்ன சொல்வாங்க... அண்ணுவந்த வீட்டுக்கு தங்கை வந்தாள்னு சொல்லுவாங்க.

சாந்தாவும் உஷாவும் அங்கு வருகிருர்கள்.

சாந்: வெரிகுட் ரூபா, வெரிகுட்!

தாரா: இது யார், மிஸ்டர் துரை?

சாந்: நான் இவர் மனைவி!

தாரா: என்ன! உங்களுக்குக் கல்யாணமாகி விட்டதா?

சாந்: ஆமா, ஒரு குழந்தைகூட இருக்கு.

தாரா: மிஸ்டர் துரை! அழகான மனைவி ஒருத்தியிருக்க அவளுக்குத் துரோகம் செய்யத் துணிந்த நீர் பயங்கரமான நம்பிக்கைத் துரோகி, உம்மைப்போன்ற உளுத்துப்போன உள்ளம் படைத்தவர்கள்தான் ஏமாந்த பெண்மையின் எமன்கள். நம்பும் நாரீமணிகளின் நச்சுப்பொய்கைகள். ஒழுக்கத்தின் சத்ருக்கள், சமுதாயத்தின் புல்லுருவிகள். என்வரை நடந்தோடு உமது வஞ்சகம் நிற்கட்டும். இனி எந்தப்பெண்ணையும் ஏமாற்ற எண்ணவேண்டாம்...(சாந்தாவிடம்) அம்மா! கடவுளே உங்களை அனுப்பியதுபோல், நல்ல சமயத்தில் வந்தீர்கள். என்ஞல் உங்கள் மனது புண்பட்டிருந்தால் அதற்குக்காரணம் நானல்ல. என்ருலும் என்னை மன்னித்து விடுங்கள். (துரையிடம்) இதுவரை என் கற்பைக் கெடுக்காமல் இருந்ததற்காக உமக்குக் கோடி வணக்கம். இனிமேலாவது வீட்டிற்குப்போய் அன்புடன் நடந்து கொள்ளும்.

ரூபா சூரியின் ஆபீஸுக்கு வருகிருள். சூரியிடம் தன் நிலையைச் சொல்லிக் கெஞ்சுகிருள்.

சூரி: ஹல்லோ! எப்ப வந்தே? ஏன் ஒரு மாதிரியாயிருக்கே?

ரூபா: வேறே எப்படி இருக்க முடியும்? என் மானம் போய்விட்டது. இனிமே நீங்க காலங் கடத்தாமெ என்னைக் கல்யாணம் செய்து கொள்ளணும்,

சூரி: கல்யாணமா?

ரூபா: ஆம்! நான் கர்ப்பவதியாகி விட்டேன். என் மானத்தைக் காப்பத்தல்லேன்ஞ, நான் சாக வேண்டியதுதான்.

சூரி: சரிதான் இதென்ன சதாரண விஷயமா? கல்யாணம்னு பெரியவங்க இருந்து நடத்த வேண்டிய காரியமில்லே?

ரூபா: சூரி.. சூரி...இந்தப் பயங்கரமான ஆபத்திலிருந்து என்னைக் காப்பாற்று. நீ எனக்குச் செய்த சத்தியத்தை யெல்லாம் மறந்து விட்டாயா? இவ்வளவுதான உன் காதல்?

அவன் காலைப் பிடித்துக்கொண்டு விம்முகிருள்.

சூரி: அழாதே போ. எழுந்திரு. இப்போ பெரியவங்க இல்லாமெ நாமா எப்படிக் கல்யாணம் பண்ணிக்கறதுன்னுதான் யோசிக்கிறேன். வேறே ஒண்ணுமில்லே.

ரூபா: யோசனை என்ன? எங்கண்ணுவும் உஷாவும் ரிஜிஸ்டர் மேரேஜ் செய்துக் கொள்ளல்லே?

சூரி: ஆல்ரைட், அந்த மாதிரியே செய்துட்டாப் போவுது, வா.

ரூபா: சூரி ..நம்பலாமா?

சூரி: நிச்சயமா நம்பலாம். கவலைப்படாதே. போயிட்டு வா.

அவள் போனதும் சுபேதார் அங்குவந்து சூரியை உதைத்து வீட்டுக்கு இழுத்துச் செல்கிருர். சூரி நேர்மையானவனுனுலும் சந்தர்ப்பம் அப்படிச் சதி செய்கிறது.

ராமசாமியும் குணலக்ஷ்மியும் யாத்திரைக்குப் புறப்படுகின்றனர். அவர்கள் சென்றதும் ரூபாவைக் கவனித்த உஷா உண்மையை நன்கு தெரிந்துகொண்டு விடுகிருள். சூரி போய்விட்ட ஏமாற்றத்தில் படுத்து அழும் ரூபாவுக்கு ஆறுதல் கூறுகிருள் உஷா.

உஷா: ரூபா...!

ரூபா: நீ ஏன் இங்கே வந்தே? போ வெளியே.

உஷா: ரூபா! எங்கிட்டெக் கூடவா உண்மையைச் சொல்லக் கூடாது?

ரூபா: அனுவசியமா என் விஷயத்திலே நீ தலையிடாதே. உன் ஜோலி எதுவோ அதைப்பாரு. ஒராயிரம் தடவை சொல்லிட்டேன்.

உஷா: என் ஜோலிகள்ளே ஒண்ணுதாம்மா உன்னைக் கவனிப்பதும்.

ரூபா: வீணு வார்த்தையை வளர்த்தாதே. என்னை உனக்குச் சரியாகத் தெரியாது.

உஷா: எல்லாம் எனக்குத் தெரியும். தவறு நடந்து விட்டது. கணவனில்லாமல் நீ கருத்தரித்து விட்டாய்.

ரூபா: ஆ ..உனக்கு எப்படித் தெரிந்தது?

உஷா: எப்படியோ தெரிந்தது. ரூபா! பயப்படாதே, இதனுலே எவ்வளவு ஆபத்து வந்தாலும் சரி, நான் காப்பாற்றுகிறேன்.

ரூபா: உன்னை நம்பி ஏமாந்துவிடும் பயித்தியக்காரி நானல்ல உஷா, நானல்ல! பழி தீர்த்துக் கொள்ளச் சமயம் வாய்த்திருக்கிறதென்று பரவசப்படுகிருய். அது முடியாது; முடியவே முடியாது. கர்ப்பத்தில் இருக்கும் கருவைக் கரைப்பேன்; சிசுவைச் சிதைப்பேன். எதுவும் முடியாவிட்டால் இருக்கிறது விஷம்.

உஷா: பயித்தியக்காரி. விஷம்! அது உன்னை யழிக்கும்; அதனுல் உன் அவமானத்தை யகற்ற முடியுமா? காரியம் மிஞ்சிவிட்டது. அதற்காகக் கண்ணீர் வடித்துக் காலத்தைக் கழிப்பது கூடாது. ரூபா! நான் சொல்வதைக் கேள். கமலான்னு என் சினேகிதி கிராமத்திலே டாக்டரா இருக்கிறு. அவள் உதவியை நாடினு, இதுக்கு ஏதாவது வழி சொல்லுவா, எங்க அப்பா, அம்மாவைப் பார்க்கப் போகிறமாதிரி போயிட்டு வந்துடலாம் ரூபா! தைரியமாயிரு. என்மீது சந்தேகப் படாதே. என்னை நம்பு.

உஷாவும் ரூபாவும் கிளம்புகிருர்கள். இலுப்பையூரிலே கமலாவிடம் விஷயங்களைக் கூறுகிருள் உஷா. கருவைச் சிதைப்பதை விட்டு, வளர்த்து பிள்ளைப் பேருக்கி போட்டோவில் கண்டவரிடமே ஒப்படைக்க கமலா திட்டமிடுகிருள். ரூபா கருவளர்வதை தவருக நினைக்கிருள்.

உஷா: ரூபா! இந்த மருந்தைச் சாப்பிடு.

ரூபா: மருந்து! கள்ளி! என் கவலையைப் போக்குவதாகக்கூறி என் வயிற்றிலே கருவை வளர்த்து

விட்டாய். அதற்கு உடந்தையாக உத்தமி வேஷம் போடும் ஒரு டாக்டர்

உஷா: ஆத்திரப்படாதே ரூபா. மருந்தைச் சாப்பிடு முதலில்.

ரூபா: ஏன், கொழுக்கட்டை மாதிரி குழந்தையைப் பெற்று வைக் கட்டும். புருஷன் இல்லாமல் பிள்ளை பெற்றவள் என்று பத்துபேர் பார்த்து சிரிக்கட்டும் என்றுதானே இந்த நாடகம்? நாசக்காரி, நயவஞ்சகி! நடடி வெளியே. உம்... நடடி

**உஷாவை அடிக்கிருள்.**

உஷா: ரூபா... ரூபா .. என்ன இது?

கம: ரூபா! என்ன மடத்தன மான செயல் இது?

ரூபா: கூட்டுக் கள்ளி! பரிந்து பேச வந்துவிட்டாயா?

கம: ஷட்டப்...!

உஷா: கமலா! அவள் பேதை.

ரூபா: நீ மஹா மேதை! போதும், உன் புத்திமதியாருக்கு வேண்டும். இந்தா மருந்து? நான் இனி உயி ருடன் இருக்க விரும்பவில்லை.

கம: அந்த முடிவைச் செய்ய உனக்கு உரிமையில்லை.

ரூபா: ஏன் இல்லை?

கம: சொல்கிறேன் கேள். நீ ஒரு தாய். உன் வயிற்றில் ஒரு உயிர், உலகிலே உள்ள ஓவ்வொரு ஜீவ னும் வாழப் பிறந்தவை. அவற்றை அழிக்கும் அதிகாரம் நமக்கு கிடை யாது.

ரூபா: டாக்டர், பிரசங்கம் வேண் டாம்! நான் கேட்கவும் தயாராக இல்லை, இந்த சண்டாளியும் நீங்களு மாகச் சேர்ந்து எனக்குச் சதி செய்து விட்டீர்கள். நடக்காது உங்கள் எண் ணம். நடக்காது... நடக்கவே நடக் காது.. ஆ... அம்மா.

**அதிர்ச்சியால் அவள் பிரசவித்து விடுகிருள். ஆண் குழந்தை பிறக் கிறது. சூரியை உரித்து வைத்தாற் போல,**

## காட்சி 7

**க்ஷேத்திராடனம் செய்யும் குண லக்ஷ்மியை திருவான்மியூரில் சந்திக் கும் நல்லம்மாவும் தங்கம்மாவும், தாங்கள் அரைகுறையாகக் கேட்ட தைக் கொண்டு இலுப்பையூர் ஆஸ் பத்திரியில் உஷா பிரசவித்ததாகக் கூறிவிடுகிருர்கள். கணவனுடன் ஓடிவருகிருள் குணலக்ஷ்மி இலுப்பை யூருக்கு. ரூபா உஷாவிடம் ஓடி வந்து இதைக் கூறுகிருள்.**

ரூபா: ஐயய்யோ! அண்ணி, அண்ணி! அப்பா அம்மா வர்ருங் களே.. ஐயய்யோ!

உஷா: எங்கே?

ரூபா: வெளியே வந்துகிட்டே இருக்காங்களே, ஐயய்யோ!

**ரூபா அடுத்த உள்ளுக்கு ஓடிவிடு கிருள். மடியில் குழந்தையுடன் உட்கார்ந்திருக்கிருள் உஷா.**

குண: அட பாவிகளே! பட்ட ணம் போயிப் படிச்சியே. இந்த அநி யாயம் பண்ணத்தானு? சண்டாளி! உன் உடலை நீ ஏண்டி இன்னம் வச்சிக்கிட்டிருக்கணும்? ஆறு, குளம், முழக்கயிறு எல்லாம் உன்னைப்போல வுள்ள தட்டுவாணிகளுக்குத்தானேடி இருக்கு? சீச்சீ...மானங்கெட்டவளே! ...பாத்தாச்சு கண்ணுலே. இந்தப் பாழும் மூஞ்சியிலே முழிச்சாலும் ஏழு ஜென்மத்துக்கு சோறு கெடைக்காது. உம்...புறப்படுங்க.

ராம: அடி துரோகி! நாங்க போருேம். ஊர் போய்ச் சேர்றதுக்கு முன்னுலே நீ செத்து சவமாய்ப் போய்ட்டேன்னு கேட்டாத்தாண்டி எங்க மனசு ஆறும். சுருக்கமான சாவுக்குச் சீக்கிரமான வழியைத் தேடு.

உஷா: ரூபா...!

குண: ரூபாவா?

ராம: அவ எங்கே இங்கே வந்தா?

உஷா: ரூபா! வாம்மா வெளி யிலே. உங்க அப்பா, அம்மா ஊருக் குப் போருங்களாம். நீயும் கூடப் போயிடம்மா.

குண : ரூபா! சும்மா வாம்மா! இந்தநாசக்காரிகூட வந்ததுக்கு நாங்க எதுவும் சொல்லுவமோன்னுப் பயப் படறியா? பரவாயில்லே. வா!

உஷா : ரூபா! ஏன் பயப்படுறே? நான் ஏற்றுக் கொண்ட இந்தச் செயலுக்கு எதையும் அனுபவிச்சுத் தான் தீரணும். உன்னே மறக்கமாட் டேன். நீபோயிட்டு வா.

ரூபா : அண்ணி!

குண : அண்ணி...! இந்தக் கெட் டலேஞ்சு போனவளுக்குப் பணி விடை செய்ய வந்துட்டியாக்கும், பணிவிடை! சொரணே கெட்ட கழுதை வாடி! உம்...

ராம : உம்...

உஷா குழந்தையுடன் கண்கலங்க உள்ளே பிரவேசிக்கிருள்.

## காட்சி 8

லேடி டாக்டர் கஸ்தூரியின் பெண் மண விளம்பரத்தைக் கண்டு சுபே தார் வருகிருர்.

விடை பெற்று மகிழ்ச்சியுடன் செல்கிருர் சுபேதார்.

சுபே : கஸ்தூரி அம்மாவா? பேப்பரிலே ஓங்க விளம்பரம் பார்த் தேன்.

கஸ் : அப்படியா? வாங்க உள்ளே...அது சரி, மாப்பிள்ளேக்கு வயசென்ன இருக்கும்?

சுபே : வயசென்ன? கல்யாணம் பண்ற வயசுதான்! பையன் போட்டோ கொண்டு வந்திருக்கேன். பாருங்க எப்படி யிருக்கான்னு?

கஸ் : ஆமா, பொண்ணே நீங்க பார்க்க வேண்டாமா? பக்கத்து ஊருக்குப் படிக்கப் போயிருக்கா. கூட்டி வரச்சொல்றேன் பாருங்க.

சுபே : ஒண்ணும் பார்க்க வேண் டாம். உங்களேப் பார்த்தால் போதாது? பொண்ணே வேறு பாக் கணுமா என்ன?.

கஸ் : அப்படிங்களா. ரொம்ப சரி.

சுபே : வர்ற வெள்ளிக்கிழமை நல்ல முகூர்த்த நாள். அண்ணேக்கே நிச்சயமாக் கல்யாணத்தை முடிச்சிப் பிடுவோம்...உம் வரதக்ஷிணே விஷ யம் ஓண்ணு இருக்கே,

கஸ் : அதுக்கென்னங்க. முகூர்த்த சமயம் அத்தனே பேருக்கு முன்னுலே பத்தரை மாத்தும் பொன் னுகத் தாரேன். அப்புறம் என்ன?

சுபே : அது சரிதான்! ஏன்னு பண விஷயம் பாருங்க. கொஞ்சம் நாண யமா இருக்கணும். அப்போ நாங்க எங்க பந்துக்களோடெ வந்து சேர் ரேும், எல்லாம் தயாரா இருக்கட் டும்.

கஸ் : நல்லதுங்க, அப்படியே செய்வோம்

விடைபெற்று மகிழ்ச்சியுடன் செல்லுகிருன்.

## காட்சி 9

குமார் அமெரிக்காவிலிருந்து திரும்புகிருன். சாந்தா அவனே அன்புடன் வரவேற்கிருள். உஷா வின் போதனேயால் அவள்தான் இங்கிதம் தெரிந்தவளாகி விட் டாளே!

சாந் : வாங்க குமார்! அமெரிக்கா வுக்குப் போயுங்கூட ஆள் அப்படியே தானே இருக்கீங்க. மாறலியே.

குமா : மாறிட்டா உங்களுக்கு அடையாளங் கண்டுபிடிக்க முடியா துன்னு அப்படியே வந்துட்டேன், அண்ணி! ஆனு நீங்கதான் ஓரே யடியா மாறிட்டீங்க.

துரை : இவ்வளவுக்கும் காரணம் உஷாதான். குமார்! இப்ப உன் அண்ணி சாந்த சொரூபியாக்கும்!

சாந் : போதும் போதும். உங்க விஷயம் மாத்திரம் என்ன? உஷா மட்டும் இல்லேன்னுத் தெரியும். அப் யாவுக்கு எப்பவும் இங்கே சோக ரஸம். அங்கே தாராவோடே...

துரை : குமார்! உம் அவ பேச்சுக் கென்ன குமார்! முதல்லே நீபோய் முகம் அலம்பிட்டுவா, காப்பி சாப்பிட லாம்.

சாந் : காப்பி சாப்பிடலாம். உம்... தாரான்னு...

துரை : ஒரு நாடகம் நடந்தது. அதைப்பற்றி இப்ப என்னத்துக்கு? சாந்தா! சிக்கிரம் காப்பி தயார் செய்.

சாந் : காப்பியெல்லாம் தயாராய்த் தான் இருக்கு... இதைக் கேளுங்க...

துரை : குமார்! நான் சொல்வதைக் கேளு. அவபேச ஆரம்பிச்சுச்டான்னு ஒரு முடிவே இருக்காது. எவ்வளவு வேலையிருக்கு? உஷாவையும் ரூபாவையும் புறப்பட்டுவரும்படி தந்தி கொடுத்திடணும் பாரு. வா வா.

யாத்திரை முடிந்து ராமசாமி, குணலக்ஷ்மி இருவரும் மகள் ரூபாவுடன் திரும்புகின்றனர்.

குமா : அம்மா..... அப்பா!

ராம : குமார்! எப்போ வந்தே? சௌக்கியமா? படிப்பெல்லாம்.

குமா : முடிஞ்சதப்பா. அம்மா! ரூபா உஷாவோடே போயிருக்கிறதாக அண்ணன் சொன்னரே...

குண : ஆமா......(அழுகிருள்.)

குமா : அம்மா! ஏன் அழறே? உஷாவுக்கு என்ன?

குண : அவளுக்கு என்ன? நம்ம தலேலேதான் பெரிய கல்லைத்தூக்கிப் போட்டுட்டா, தலை நிமிர நீதியில்லை.

குமா : என்னம்மா? உஷா என்ன செய்தா?

குண : அவ கெட்டது மில்லாமெ ரூபாவையும் கூட்டிகிட்டுப் போயி கெடுக்கப் பார்த்தா. புள்ளைமாதிரி பாவிச்ச எங்க வயத்துலே புளியைக் கரைச்சு உட்டுட்டாடா குமார்!

குமா : அம்மா விஷயத்சைச் சொல்லம்மா. என்னதான் நடந்தது?

குண : இன்னும் என்ன தாண்டா சொல்றது? அந்தப்பாவி நம்ப மானத்தை வாங்கிட்டா. அந்த அநியாயத்தை ஏன் கேக்கறே. நீ இங்கே இல்லாதப்போ இலுப்பையூர் ஆஸ்பத்திரியிலே குழந்தை ஒண்ணைப் பெத்துகிட்டுச் சந்தோஷமா இருக்கா.

குமா : ஆ.....அம்மா! ஒருக்காலும் இருக்காது.

குண : உன் பெண்டாட்டியைப் பத்தி எதுக்காகப்பா நான் அவதூறு சொல்லணும்? உனக்குப் பெண்டாட்டின்னு அவளும் எங்களுக்கு ஒரு குழந்தைதானே? ஒரு வருஷத்துக்கு முன்னடியே ரூபா எச்சரிக்கை செய்தா, ராத்திரியிலே கொல்லைப் பக்கமா எங்கேயோ போயிட்டுவாரு. கவனிங்கன்னு. நான்தான் அலக்ஷியமாயிருந்துட்டேன்.

குமா : அப்பா! என்னல் இதை நம்பவே முடியாது. யாரோ கட்டிவிட்ட கதையிது. நீங்கள் நம்பிவிட்டீர்கள். இவ்விதமான ஈனச் செயலுக்கு உஷா இடங் கொடுத்திருக்க மாட்டாளென்று எனக்குள் ஏதோ நிச்சயமாகச் சொல்லுகிறது.

ராம : ஹூம். அவ்வளவு நிச்சயமாச் சொல்லுதா உனக்கு? மடப்பயலே! நாங்க சொல்லிக்கிட்டேயிருக்கோம், இவரு நம்பமாட்டாராமில்லே. நேரா போடா ஆஸ்பத்திரிக்கு. அங்கே அவ இருப்பா, கண்ணுலே பார்த்து அப்புறமாவது நம்பு. போ!

குமா : போறேன்.. நேரா அங்கேதான் போறேன்.

குமார் தாங்கொணுத் துயரமும் ஆத்திரமும் கொண்டு காரில்கிளம்புகிருன். பயந்த சாந்தா துரையைத் துரத்துகிருள்.

சாந் : என்னுங்க, உங்க அம்மா உஷாவைப் பற்றி என்னென்னமோ உளறிக் கொட்டிட்டாங்க அதைக் கேட்டதும் குமார் ஒரே ஆவேசமாப் போருரு. எனக்கென்னமோ பயமாயிருக்கு. எதுக்கும் நீங்களும் போங்க சிக்கிரம்.

துரை ஒரு காரில் குமாரைத் தொடருகிருன். ஆவேசத்தினுல் கண்மூடித்தனமாகக் காரைவிட்டுச் சென்ற குமார் காரிலிருந்து விழுந்து படுகாயமுறுகிருன். துரை அவனை தூக்கிப் போகிருன். உஷா விவரமறிந்து குழந்தையுடன் ஓடி வருகிருள். இதற்கிடையே கஸ்தூரியைச் சந்திக்கும் லேடி டாக்டர்

**கமலா, சூரியைத் தெரிந்து கொண்டு அதற்கான ஏற்பாட்டைச் செய்ய ஓடுகிருள்.**

**நல்லம்மாவும் தங்கம்மாவும் தங்கள் பிரசாரப்பணியைத் தொடர்ந்து செய்யும் போது கிருஷ்ணசாமியின் காதிலும் இது விழுகிறது. வீட்டுத் திண்ணையிலே நல்லம்மாவின் வம்புப் பேச்சு ஆரம்பமாகிறது.**

ஒரு பெண்: என்னம்மா விசேஷம்?

நல்: நம்ம கிருஷ்ணசாமி மவ உஷா தெரியாது. அவ கொழந்தை பெத்திருக்காளாம் கொழந்தை.

பெண்: கல்யாணமானவ கொழந்தை பெத்தா அதிலே என்ன அதிசயம்?

நல்: புருஷன் ஊரைவிட்டுப் போயி பதினெட்டு மாசமாகுது.

பெண்: அப்ப இது பத்து மாசத்துலே பொறந்திருக்குது.

நல்: உம்... அதை ஏன் நம்ம வாயாலெ சொல்லணும்? படிச்சவடி, பட்டணத்துலே படிச்சவ.

கிரு: **(ஆத்திரத்துடன்)** போற காலத்திலே ஏண்டி பொய்ப் பிரசாரம் பண்ணிக்கிட்டுத் திரியறீங்க கம்மனுட்டிங்களா?

நல்: மிரட்டினு உண்மையெல்லாம் போயிடுமா? இப்பவே இலுப்பையூரு ஆஸ்பத்திரிக்குப் போனு உஷாவெ கொழந்தையோட பார்க்கலாம்.

கிரு: நீங்க சொல்றது பொய்யா மட்டும் இருந்தது, உங்க மண்டையைப் பொளந்திடுவேன், ஜாக்கிரதை!

**இலுப்பையூர் சென்ற கிருஷ்ணசாமியும் யார் குழந்தை என்று தீர விசாரிக்காமல் உஷாமீது வெறுப்படைந்து, தன் மகளைக் கொன்று விடுவது என்ற தீர்மானத்துடன் கிளம்புகிருர்.**

## காட்சி 10

**குமார் காயங்களில் கட்டுடன் படுத்திருக்கிருன். குணலக்ஷ்மி ஓலமிடுகிருள்.**

குண: ஐயய்யோ! மகமாயி! நான் என்ன செய்யப் போறேனே? அமெரிக்கா சீமைக்குப் போயிட்டுப் பிள்ளை இப்பத்தானே வந்தான், அதுக்குள்ள இந்தக் கதியா? ஐயோ! அந்தத் தறுதலைச் சிறுக்கியை மனசாலே கூட நினைக்காதேடான்னு சொன்னேனே, கேட்டானு?

ராம: அடாடாடா! நிறுத்தம்மா ஒப்பாரியை! சந்தடியே கூடாதுன்னு டாக்டர் சொல்லியிருக்காரு. நீ என்னடான்னு சந்திரமதியாட்டமா புலம்பறியே. மனசைத் தேத்திக்கிட்டுப் பேசாமெ இரு.

குண: எனக்குல்ல தெரியும். பெத்தவயிறு பத்தி எரியுது. அவ நாசமாப் போக.

**உஷா கையிலிருக்கும் குழந்தையைக் கண்டு வருந்துகிருள்.**

உஷா: குமார்.......!

குண: **(தடுத்து)** எங்கேடீ வந்தே? மானங்கெட்ட சண்டாளி! நில்லுடி உன் மொகரக் கட்டையைக் காட்டி இன்னும் அவன் உயிரை வதைக்க வந்தே? போடி வெளியே!

உஷா: குமார்...

குண: பர்த்தாவைப் பார்க்க வந்துட்டா பதிவிரதை! உன் பதிவிரதைத்தனத்தாண்டி அவனை ஒரே படுக்கையாப் படுக்க வச்சுட்டது. இன்னும் என்னடி? கட்டினவன் கண்ணை மூடிட்டா சோர புருஷனேடே சுகமா வாழலாம்னு நெனைக்கிறே. ஏண்டீ! இல்லேன்னு எவனுக்கோ பெத்ததையும் கையிலே எடுத்துக்கிட்டு புருஷனைப் பார்க்கிறேன்னு துணிச்சலா வருவியா?

உஷா: அத்தே! நான் எந்த விதமான தவறும் செய்யலை. ஒரே ஒரு முறை அவரை என் கண்ணுல் பார்க்க அனுமதி கொடுங்கள். அவர் பாதார விந்தங்களிலேயே நடந்தவைகளை யெல்லாம் சத்தியமாச் சொல்றேன். என்னைத் தடுக்காதீங்க அத்தே!

குண: இனி இந்த வீட்டுக்குள்ளே காலெடுத்து வைக்க முடியாது.

உஷா : ஏன் முடியாது? என் கணவரைப் பார்க்க எனக்கு உரிமை யுண்டு. நான் வரத்தான் செய்வேன். என்னை நீங்கள் தடுக்க முடியாது.

குண : தடுக்க முடியாதா? ஏண்டி எங்கிட்டியா லண்டித்தனம் பண்றே? போடி...

உஷாவைக் கீழேதள்ளிவிடுகிருள். அவள் கையிலிருந்து குழந்தை விழுந்து வீறிடுகிறது. மாடியி லிருந்து இதையெல்லாம் கவனிக் கும் ரூபா, பெற்ற பாசம் தாளாது ஓடி வந்து குழந்தையை வாரி யணைக்கிருள்,

குண : ரூபா ! சீ அந்தப் பாவப் பிண்டத்தை உன் கையாலே ஏண்டி தொடுறே ?

ரூபா : ஆம்... பாவப் பிண்டம் தான் இது. ஆனல் இதைப் பெற் றெடுத்த படுபாவி அவர்களல்ல. நான்தான். இது என் குழந்தை.

குண : ஆ ! உன் குழந்தையா ?

ரூபா : ஆம். இது என் வயிற்றிலே பிறந்த என் குழந்தை, கேளுங்கள் நான் கெட்டழிந்த கதையை :

இந்தக் குழந்தையைப் பெற்றெடுத் தவள் நான்தான். பாவத்தின் சின் னத்தைப் பத்து மாதங்கள் சுமந்தப் பாதகி நான்தான். குடும்பத்தின் பெருமையைக் குப்பையிலே தள்ளிய காதகி நான்தான். அண்ணி குற்ற மற்றவள் உத்தமி. பத்தினி! கர்ப் பத்தில் வைத்து சிசுவைக் காப்பது போல், என் அற்பச் செயலே உலகம் அறியாதபடி மறைத்துக் காத்த மஹா புண்ணியவதி அண்ணி! அந்தத் தியாகியின் தன்மையைத் தெரியாமல் பல கொடுமைகள் செய்து விட்டேன். இது என் குழந்தைதான்.

ராம : என்ன? இது உன் குழந் தையா? இந்தக் குழந்தைக்கு நீ தாயா? அடி சண்டாளி! ஒரே ஒரு பெண்ணைச்சேன்னு உனக்குச் செல் லங்கொடுத்து வளத்ததுக்கு எங் களைத் தலைதூக்க விடாமெச் செய் துட்டியே, அடிப் பாவி !

ரூபா : அப்பா...!

ராம : சீ விபச்சாரி! உனக்கு அப்பா.

ரூபா : அம்மா...! .

ராம : எதுக்குடி அம்மா? எங்கே யாவது தூக்குப்போட்டுக்கிட்டுச் சாவறதுதானே?

குண : வீணைப்போன சிறுக்கி, உன்பேச்சைக் கேட்டு ஒரு பாவமு மறியாத உஷாமேலே அனியாயமாச் சந்தேகப்பட்டோம்.

உஷா : குமார்...(மூர்ச்சை தெளிந்து தலையைத் தூக்குகிருள்.)

குண : உஷா! உன்னைத் தெரிஞ் சுக்காமெப் போயிட்டோம். நீ உத்தமி; உண்மையானவ. உம் மேலே இல்லாததும் பொல்லாததும் சொல்லி ரொம்ப கொடுமைப் படுத் திட்டோம். இதெல்லாம் மனசிலே வச்சுக்காதே.

ராம : குமார்! நீ சொன்னது தானப்பா உண்மை. உஷா மஹா உத்தமி...பெண் தெய்வம்.

குண : இந்த மானங்கெட்ட காரியத்தெச் செய்தது உன் தங்கை ரூபா,

ராம : உஷா நம்ப குடும்ப கௌர வத்தைக் காப்பாத்தறதுக்கு அந்தக் குற்றத்தைத் தன் தலையிலே போட்டுக்கிட்டா.

குண : அதை அறியாமெ அக்ரமமா வாய்க்கு வந்தபடி யெல் லாம் பேசிட்டோம்...உஷா ! எங்களை மன்னிச்சுடம்மா. பிறந்த வீட்டுக் கும் புகுந்த வீட்டுக்கும் நீ ஒரு லக்ஷ்மி; அணையா விளக்கு; மாசிலா மருமகள்.

கம : அம்மா! வாசல்லே உஷா வின் அப்பா ஒரே அக்னி ஜ்வாலை யாக நிற்கிருர்

உஷா : ஆ...எங்கப்பாவா?

ராம : நீ இரம்மா. நாங்க போய் அழைச்சுகிட்டு வர்ரோம்...கிருஷ்ண சாமி ! கிருஷ்ணசாமி !!

குண : அண்ணு !

கிரு: உறமுறையெல்லாம் ஒண்ணும் தேவையில்லே. அந்த மானங்கெட்ட சண்டாளி உஷா இருந்தா, வரச் சொல்லு வெளியே.

உஷா: அப்பா...!

கிரு: (தடியை ஓங்கி) அப்பா!

ராம: (தடுத்து) கிருஷ்ணசாமி! என் மருமக உஷா மஹா உத்தமி; மஹா உத்தமி. உண்மை இன்னண்ணு தெரியாமெ உன் மாதிரியே நாங்களும் அவசரப்பட்டு அவளைக் கண்டபடி பேசிப்பிட்டோம். அத்தனையும் அபாண்டம், வீண் பழி.

குண: ஆமாண்ணு, உஷா ஒரு பாவமும் அறியாதவ. நான் அவளுக்குச் செய்த கொடுமைகளுக்கு எனக்கு என்ன கஷ்டம் வருமோ தெரியாது. அவ படிச்ச படிப்பைச் சரியான வழியிலே உபயோகிச்சு எங்க குடும்ப கௌரவத்தைக் காப்பாத்தியிருக்கா.

(தணிந்து) இந்தப் பணம்...

ராம: உன்னாலே வந்ததுதான் இந்தப் பணம். இந்தப் பணத்தைக் கையிலே பார்த்ததும் கண் மறைஞ்சு போச்சு; கர்வம் தலைக்கேறிட்டது. புத்தியைத் தடுமாற விட்டுட்டோம். கிருஷ்ணசாமி! அதையெல்லாம் மறந்து எங்களை மன்னிச்சுடு.

கிரு: மன்னிக்கிறதென்ன ராமசாமி! இந்தக் கிருஷ்ணசாமிக்குப் பிறந்தவ உஷா. அவ எப்படித் தவறி நடப்பாங்கற புத்தி அவளைப் பெத்த அப்பனுக்கே வரல்லேன்னு உங்களை நான் குறை சொல்ல முடியுமா?... உஷா...!

உஷா: அப்பா...!

சாந்: அத்தே! நம்ம ரூபா பைத்யம் மாதிரி ஒரு குழந்தையைக் கையிலே வச்சிக்கிட்டு அழுதுகிட்டிருக்கா. நான் கூப்பிட்டா வரமாட்டேங்கரு.

கம: ஆ...அவ எங்கே இருக்கா?

சாந்: இந்தத் தெருக்கோடியிலே இருக்கா.

கம: சரி, உஷா! நான் ரூபாவை அழைச்சிக்கிட்டுப் போறேன். குமார் கிட்டேயும் சொல்லியிருக்கேன். நீ எல்லாரையும் கல்யாணபுரத்துக்குக் கூட்டிகிட்டு வந்து சேரு. நான் வர்றேன்...உம்.

## காட்சி 11

சுபேதார் சூரியைக் கூட்டி வருகிறர். மணப்பந்தலிலே ஒரே குஷி தான் யாவருக்கும், சூத்திரதாரி கமலா உள்படத்தான்!

சுபே: டே, பயலே! இண்ணைக்கோடே உன் கொட்டம் அடங்கப் போவுது. கழுத்திலே தாலி ஏர்ற வரைக்கும் உன் வாயைத் திறந்தே...?

புரோ: உம்...உம்...பொண்ணைக் கூட்டிக்கிட்டுவாங்க.

மணப் பெண் வந்ததும் சுபேதார் வரதக்ஷிணை கேட்கிருர்.

சுபே: என்னம்மா, வரதக்ஷிணை என்ன ஆச்சு?

கஸ்: வரதக்ஷிணை தானே? இதோ வந்து கொண்டிருக்குங்க. முகூர்த்த நேரம் தவருமெ தாலியெக் கட்டச் சொல்லுங்க.

சுபே: உம்...உம்....

தாலிகட்டியாகி விடுகிறது.

சுபே: என்னம்மா இன்னுமா வரதக்ஷிணை வந்து கிட்டிருக்கு? வரட்டும்...வரட்டும்.

கஸ்: என்னங்க! பத்து மாதமா பகலும் இரவும் பாடுபட்டு சிறுகச் சிறுகச் சேர்த்த செல்வம். ஊரறியாமெ உருவான சொத்து. அவசரத்துக்கு அப்படியே கொண்டு வந்துட முடியுமா? இதோ கொண்டு வந்துட்டேங்க.

மடியில் குழந்தையை விடுகிருள்.

சுபே: ஆம்...குழந்தை!

கஸ்: ஆம்...மணமகளின் சார்பில் இந்த ரெடிமேட் குழந்தையைச் சீதனமாகக் கொடுக்கிறோம்.

சுபே: இதென்ன கல்யாணமா, தொட்டிலாட்டுச் சடங்கா?

கஸ்: இது கல்யாணங்க. தொட்டி லாட்டுச் சடங்கு முன்னலே நடந்தாச்சு, தாலாட்டுக் கீதமும் பாடியாச்சு. ஒரு வருஷத்துக்கு முன்னுலே உங்க திருக்குமாரன் நடத்திய சினிமாக் கமபெனியில் உற்பத்தியானது இந்தக் குழந்தை. பாக்கி விஷயம் மாப்பிள்ளையைக் கேளுங்க.

சுபே: ஏண்டா, டேய்! இதெல்லாம் வாஸ்தவம்தானு? வாய் திறந்து பேசுடா.

சூரி: வாய் திறந்து வேறே பேசணுமாக்கும். எல்லாந்தான் கண்முன்னலே காக்ஷி சகிதமா, கனகச்சிதமா இருக்கே. நான் இவளைத்தான் கல்யாணம் பண்றதுன்னு அண்ணைக்கே தீர்மானஞ்செய்தேன். நீங்கதான் அடிச்சு மிதிச்சு இங்கே இழுத்துட்டு வந்துட்டீங்க.

சுபே: சரி, என்ன செய்யறது? எனக்கும் ஓரே ஆசையாத்தான் இருந்தது. இந்தக் கையாலே ஒரு பேரனை எடுத்து, இந்தக் கண்ணுலே பார்க்கணும்னு. நீ என்னடான்னு எனக்கு முன்னுலே அட்வான்ஸலே போயிட்டே ... டாக்டரம்மா! நல்ல காரியம் செய்திங்க. பெண்களைக் கெடுத்தா இனிமே இப்படித்தான் நடக்கும்னு ஒரு சூடும் போட்டுப்பிட்டீங்க.

(கமலாவின் முன்னேற்பாட்டின் படி குமார் விஷயத்தை விட்டாருக்கு விளக்குகிருன். தங்கள் மகள் விபசாரி என்ற பட்டத்திற்கு ஆளாகாமல், நல்லகாலமாக அவளுக்கு வாழ்வு கிடைக்கிறதே என்ற மகிழ்ச்சியில் ராமசாமி-குணலக்ஷ்மி இருவரும் பூரித்து விடுகின்றனர். உஷாவுக்குத் தன் முயற்சி வெற்றி பெற்றதில் சந்தோஷம். கமலா மீது அவளுக்குள்ள மதிப்பு மிகவும் உயர்ந்து விடுகிறது, அவர்கள் குடும்பத்திற்காக அவள் செய்த உதவி விரைவில் மறக்கக்கூடியதா என்ன? இந்த சந்தோஷச் செய்தியை குமார் மூலம் அறிந்த அவர்கள் யாவரும் கல்யாணபுரத்திற்குப் பறந்து செல்கிருர்கள். கிருஷ்ணசாமியும் மனைவி ராஜம்மாவுடன் வந்து சேருகிருன். நல்லம்மாவும் தங்கம்மாவும் அங்கு வராமலிருப்பார்களா என்ன? ராமசாமி குடும்பத்தினர் வந்ததும் கம... சுபேதாருக்கு அறிமுகப் ... கிருள்)

கம: இதோ உங்கள் ... கள். கண்டிராக்டர் ராமச... அவர் மனைவி குணலக்ஷ்மி அ... அவர்கள் திருக்குமாரி ரூப... உங்கள் மருமகள்.

கஸ்: இவர்தான்...

சுபே: சுபேதார் சுப்புரத்தி... மாப்பிள்ளைக்கு அப்பா.

நல்: ஏம்மா பார்வதி. என்ன... கிழம் சொல்றதுன்னு நினைக்கா... எது வந்தாலும் சரி, நீ மட்டுக்... இந்தக் கல்யாணத்தை ஏத்துக்காம்...

கிரு: சுபேதார்வாள்...கொடுங்... துப்பாக்கியை.

சுபே: எதுக்குங்க.

நல்: (நடுங்கி) கொழுந்... ஒண்ணெப்பெத்துட்டா.

தங்: ஹூம்... அப்புறம் என்ன கல்யாணமாம் கல்யாணம்?

கிரு: இங்கேயும் முடிச்சிப் போ... வந்துட்டீங்களா, கொள்ளிக்கட்டைகளா!

இருவரும் ஓடி விடுகின்றனர்.

கஸ்: ரூபா! எழுந்திரம்மா. ம... பிள்ளை எழுந்திருங்க. பெரியவாளுக... நமஸ்காரம் பண்ணிக்குங்க.

குணலக்ஷ்மியை இருவரும் வண... குகிருர்கள்.

குண: நீங்க நமஸ்காரம் பண்ண... வேண்டியது எங்களுக்கல்லம்ம... முதல்லே நம்ப குடும்ப கௌ... தைக் காப்பாத்தின மரும... உஷாவுக்குச் செய்யுங்க.

இதைக் கேட்ட உஷா வெ... துடன் அறைக்குள் சென்று கிருஷ்ண விக்கிரகத்திடம் ... மெ... மறந்த நிலையில் நிற்கிருள். கிருஷ்ணன் தானே இத்தனையையும் சுபமாக முடித்தவர்.

89623